## 1

பரலோகமே உம்மைத் துதிப்பதால்
கர்த்தாவே அங்கே வாழ்கிறீர்
ஆலயத்தில் உம்மை துதிக்கிறோம்
கர்த்தாவே எழுந்தருளும்
துதிக்கிறோம் (2)
ஒன்றாகக் கூடி துதிக்கிறோம் - அல்லேலூயா

1. உந்தன் நாமம் உயர்த்தும் இடத்தில்
அங்கே வாசம் செய்வீர் - துதிக்கிறோம்
2. உம்மைப் போல் ஒரு தெய்வம் இல்லை
சர்வ சிருஷ்டிகரே - துதிக்கிறோம்
3. துதியும் கனமும் மகிமை எல்லாம்
உமக்கே செலுத்துகிறோம் - துதிக்கிறோம்

## 2

தேவா நான் எதினால் விசேஷித்தவன்
ராஜா நான் அதை தினம் யோசிப்பவன்
எதினால் இது எதினால்
நீர் என்னோடு வருவதினால்(இருப்பதனால்) - தேவா

1. மேக ஸ்தம்பம் மேலிருந்து பாதுகாக்குது
பாதை காட்ட பகலெல்லாம் கூட செல்லுது
அன்பான தேவன் என்னோடு வருவார்
அது போதும் என் வாழ்விலே - தேவா
2. தாகம் கொண்ட தேவ ஜனம் வானம் பார்க்குது
ஆவல் கொண்ட கன்மலையும் கூடச் செல்லுது
என் ஏக்கம் எல்லாம் என் தேவன் தீர்ப்பார்
சந்தோஷம் நான் காணுவேன் - தேவா
3. வாழ்க்கையில் கசப்புகள் கலந்திட்டாலும்
பாசமுள்ள ஒரு மரம் கூட வருது
மாராவின் நீரை தேனாக மாற்றும்
என் நேசர் என்னோடுண்டு - தேவா

## 3

அள்ள அள்ள குறையாதது
சொல்ல சொல்ல முடியாதது
இயேசுவின் அன்பு - அன்பு (2)

1. மானிட வடிவில் வந்த அன்பு
பாவியை நேசிக்கும் தூய அன்பு - அள்ள
2. நீளம் அகலம் இல்லா அன்பு
நீசனாம் என்னையும் நேசிக்கும் அன்பு - அள்ள

3. சிலுவையில் தன்னை தந்த அன்பு
சிந்திய இரத்தத்தாலே மீட்கும் அன்பு - அள்ள
4. குஷ்டரோகியை சுகமாக்கும் அன்பு
கஷ்டப்படுவோர்க்கு உதவின அன்பு - அள்ள

**4**

அன்புகூருவேன் இன்னும் அதிகமாய்
ஆராதிப்பேன் இன்னும் ஆர்வமாய்
முழு உள்ளத்தோடு ஆராதிப்பேன்
முழு பெலத்தோடு அன்புகூருவேன்
ஆராதனை ஆராதனை (2)

1. எபிநேசரே எபிநேசரே
இதுவரையில் உதவினீரே (2) - உம்மை
2. எல்ரோயீ எல்ரோயீ
என்னைக் கண்டீரே நன்றி ஐயா (2) - உம்மை
3. யேகோவா ரஃப்பா யேகோவா ரஃப்பா
சுகம் தந்தீரே நன்றி ஐயா (2) - உம்மை

**5**

என் உயிரான உயிரான உயிரான இயேசு (2) என் உயிரான இயேசு
என் உயிரோடு கலந்தீர்
என் உயிரே நான் உம்மைத் துதிப்பேன் (2)

1. உலகமெல்லாம் மறக்குதய்யா
உணர்வு எல்லாம் இனிக்குதய்யா
உம் நாமம் துதிக்கையிலே - இயேசைய்யா
உம் அன்பை ருசிக்கையிலே - ராஜா - என் உயிரான
2. உம் வசனம் தியானிக்கையில்
உம் வசனம் கை கொள்கையில்
உயிருக்கு உணவாகும்
உடலுக்கு மருந்தாகும் - என் உயிரான

**6**

என் இன்ப துன்ப நேரம்
நான் உம்மைச் சேருவேன் - 2
நான் நம்பிடுவேன்
பாரில் உம்மைச் சார்ந்திடுவேன்

1. நான் நம்பிடும் நேசர் இயேசுவே
நான் என்றும் நம்பிடுவேன்
தேவனே ராஜனே
தேற்றி என்னைத் தாங்கிடுமே - என் இன்ப

2. இவரே நல்ல நேசர் இயேசுவே
என்றும் தாங்கி என்னை நடத்திடுவார்
தீமைகள் சேதங்கள்
நேசரே என்னைக் காத்திடுவார் - என் இன்ப

3. பார் போற்றும் இராஜன் புவியில்
நான் வென்றிட செய்திடுவார்
மேகத்தில் தோன்றுவார்
அவரைப் போல மாறிடுவேன் - என் இன்ப

## 7

இலேசான காரியம் உமக்கிது இலேசான காரியம்
பெலனுள்ளவன் பெலனற்றவன்
பெலனுள்ளவன் பெலன் இல்லாதவன்
யாராயிருந்தாலும் உதவிகள் செய்வது
இலேசான காரியம்-உமக்கிது இலேசான காரியம்

1. மண்ணைப் பிசைந்து மனிதனைப் படைப்பது
இலேசான காரியம்
மண்ணான மனிதர்க்கு மன்னாவைத் தருவதும்
இலேசான காரியம்
என் இயேசுவுக்கு இலேசான காரியம் - இலேசான

2. கூழாங் கல்லாலே கோலியாத்தை வென்றதும்
இலேசான காரியம்
ஆழ்கடல் மீனிடம் வரிப்பணம் தேடலும்
இலேசான காரியம்
என் இயேசுவுக்கு இலேசான காரியம் - இலேசான

3. பெருமழை பெய்தும் பேழையைக் காத்ததும்
இலேசான காரியம்
பெருங்கடல் பிளந்து பாதையை வகுத்ததும்
இலேசான காரியம்
என் இயேசுவுக்கு இலேசான காரியம் - இலேசான

## 8

அசைவாடும் ஆவியே
தூய்மையின் ஆவியே
இடம் அசைய உள்ளம் நிரம்ப
இறங்கி வாருமே

1. பெலனடைய நிரப்பிடுமே
பெலத்தின் ஆவியே
கனமடைய ஊற்றிடுமே
ஞானத்தின் ஆவியே

2. தேற்றிடுமே உள்ளங்களை
இயேசுவின் நாமத்தினால்
ஆற்றிடுமே காயங்களை
அபிஷேக தைலத்தினால்

3. துடைத்திடுமே கண்ணீரெல்லாம்
கிருபையின் பொற்கரத்தால்
நிறைந்திடுமே ஆனந்தத்தால்
மகிழ்வுடன் துதித்திடவே

## 9

உங்க கிருபைதான்
என்னைத் தாங்குகின்றது
உங்க கிருபைதான் என்னை நடத்துகின்றது
கிருபையே (2) மாறாத நல்ல கிருபையே

1. உடைக்கப்பட்ட நேரத்தில் எல்லாம் - என்னை
உருவாக்கிய கிருபையிது - கிருபையே
2. சோர்ந்து போன நேரத்தில் எல்லாம் - என்னை
சூழ்ந்து கொண்ட கிருபையிது - கிருபையே
3. ஒன்றுமில்லா நேரத்தில் எல்லாம் - எனக்கு
உதவி செய்த கிருபையிது - கிருபையே
4. ஊழியத்தின் பாதையில் எல்லாம் - என்னை
உயர்த்தி வைத்த கிருபையிது - கிருபையே

## 10

இயேசுவே ஆண்டவர்
இயேசுவே ஆண்டவர்

1. வானம் பூமி யாவையும்
தம் வார்த்தையாலே படைத்தார்
சர்வ சிருஷ்டியின் நாயகன்
சர்வ லோகத்தின் ஆண்டவர் - இயேசுவே
2. நம் இயேசுவால் கூடாதது
ஒன்றுமே இல்லையே
அவரையே நம்புவோம்
என்றென்றும் ஆராதிப்போம் - இயேசுவே
3. நம் இயேசுவைப் போலவே
வேறே இரட்சகர் இல்லையே
நம் இரட்சண்ய கன்மலை
அவரே நம் தஞ்சமே - இயேசுவே
4. இயேசு நீதி நிறைந்தவர்
சமாதான காரணர்
சர்வ வல்லவர்
சகல அதிகாரம் உடையவர் - இயேசுவே

## 11

ஆராதனை ஆராதனை
வல்லவரே நல்லவரே
ஆராதனை ஆராதனை
அற்புதமே அதிசயமே
உந்தன் நாமம் உயர்த்தியே பாடிடுவேன்
உயிருள்ள நாளெல்லாம்

1. பாவங்கள் எனக்காய் சுமந்தவரே
உமக்கே ஆராதனை
பாடுகள் எனக்காய் சகித்தவரே
உமக்கே ஆராதனை

2. ஆவியின் வரங்களை தந்தவரே
உமக்கே ஆராதனை
அபிஷேகம் எனக்காய் தந்தவரே
உமக்கே ஆராதனை

3. மரணத்தை எனக்காய் ஜெயித்தவரே
உமக்கே ஆராதனை
பாதாளம் வல்லமை தகர்த்தவரே
உமக்கே ஆராதனை

## 12

அநாதி சிநேகத்தால்
என்னை நேசித்தீரய்யா
காருண்யத்தினால்
என்னை இழுத்துக் கொண்டீரே
உங்க அன்பு பெரியது
உங்க இரக்கம் பெரியது
உங்க கிருபை பெரியது
உங்க தயவு பெரியது

1. அனாதையாய் அலைந்த
என்னை தேடி வந்தீரே
அன்பு காட்டி அரவணைத்து
காத்துக் கொண்டீரே - உங்க அன்பு

2. நிலையில்லாத உலகத்தில்
அலைந்தேனய்யா
நிகரில்லாத இயேசுவே
அணைத்துக் கொண்டீரே - உங்க அன்பு

3. தாயின் கருவில் தோன்றுமுன்னே
தெரிந்து கொண்டீரே
தாயைப் போல ஆற்றி தேற்றி
நடத்தி வந்தீரே - உங்க அன்பு

4. நடத்தி வந்த பாதைகளை
நினைக்கும் போதெல்லாம்
கண்ணீரோடு நன்றி சொல்லி

துதிக்கின்றேனய்யா - உங்க அன்பு

5. கர்த்தர் செய்ய நினைத்தது
தடைபட வில்லை
சகலத்தையும் நன்மையாக
செய்து முடித்தீரே - உங்க அன்பு

**13**

இயேசப்பா உம் நாமத்தினாலே
கூடி கூடி ஜெபிக்கிறோம் (துதிக்கிறோம்) ஐயா
சிறு கூட்டமாய் ஜெபிக்கிறோம் (துதிக்கிறோம்) ஐயா
திரள் கூட்டமாய் மாற்றும் இயேசையா

1. இரண்டு மூன்று பேர்கள்
உமது நாமத்தினால்
கூடினால் நீர் வருவீர்
வாக்கு மாறாதவர் ஐயா (2) - சிறுகூட்டமாய்

2. இந்தியா முழுவதிலும்
சுவிசேஷம் சொல்ல
கிருபை தாரும் ஐயா
வல்லமை தாருமைய்யா - தேவா (2) - சிறுகூட்டமாய்

3. சிலையை மோதின கல்
பெரிய பர்வதமாய்
பூமியை நிரப்பட்டுமே
சபைகள் நிரம்பட்டுமே
சாட்சியாய் மாறட்டுமே - தேவா (2) - சிறுகூட்டமாய்

**14**

எந்தன் கன்மலையானவரே
என்னைக் காக்கும் தெய்வம் நீரே (2)
வல்லமை மாட்சிமை நிறைந்தவரே
மகிமைக்குப் பாத்திரரே (2)
ஆராதனை உமக்கே (8)

1. உந்தன் சிறகுகளின் நிழலில்
என்றென்றும் மகிழச் செய்தீர் (2)
தூயவரே என் துணையாளரே
துதிக்குப் பாத்திரரே (2) - ஆராதனை உமக்கே (8)

2. எந்தன் பெலவீன நேரங்களில்
கிருபை தந்தீரைய்யா (2)
இயேசு இராஜா என் பெலனானீர்
எதற்கும் பயமில்லையே (2) - ஆராதனை உமக்கே (8)

3. எந்தன் உயிருள்ள நாட்களெல்லாம்
உம்மைப் புகழ்ந்து பாடிடுவேன் (2)
இராஜா நீர் செய்த நன்மைகளை
எண்ணியே துதித்திடுவேன் (2) - ஆராதனை உமக்கே (8)

## 15

என் நம்பிக்கையே உமக்கு ஸ்தோத்திரம்
என் புகலிடமே உமக்கு ஸ்தோத்திரம்
உம்மைத் தான் நான் நம்பியிருக்கேன்
அற்புதங்கள் எனக்குச் செய்யுங்கப்பா - உம்மை

1. 100க்கு 100 உம்மையே நான் நம்புவேன்
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
மனிதர்கள் முன்பாக தலை குனிந்து போகாமல்
உதவி செய்திடுங்க உயர்த்தி வச்சிடுங்க - உம்மை

2. ஆராய்ந்து முடியாத அதிசயங்கள் செய்பவரே
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
இரட்டிப்பான நன்மையை தருவேன் என்று சொன்னீரே
இன்றைக்கே தந்திடுங்க இப்பவே தந்திடுங்க - உம்மை

3. உம்மையல்லாமல் யார் என்னை உயர்த்த கூடும்
அற்புதம் செய்திடுங்க அதிசயம் நடத்திடுங்க
ஐசுவரியம் கனமுமே உம்மாலே தான் வருகிறது
ஆளுகை செய்யுங்கப்பா மேன்மை படுத்துங்கப்பா - உம்மை

## 16

இதயத்தின் காயத்தை ஆற்றிடும் எந்தன் இயேசையா (2)
கரை காணா படகைப்போல் தடுமாறும் வாழ்க்கை ஐயா (2) - இதயத்தின்

1. யோவானைப்போல உம் மார்பிலே
இளைப்பாற வேண்டுமையா (2) - கரை காணா

2. பெலவீனமான என்னையும்
உன் பெலத்தால் இடைக்கட்டுவீர் - கரை காணா

3. காணாமல் போன ஆடு நான்
அன்போடு தேடினீரே (2) - கரை காணா

## 17

ஜீவ நதியே எந்தன் உள்ளத்தில்
பாய்ந்து செல்லட்டுமே

1. மாம்சத்தின் எண்ணங்களெல்லாம்
என்னில் மறைந்து போகட்டுமே

2. உலர்ந்த எலும்புகள் எல்லாம்
இன்று உயிர்பெற்று எழும்பட்டுமே

3. பெலவீனப் பகுதியெல்லாம்
என்னில் பெலனாக மாறட்டுமே

4. ஆவியின் வரங்களினால்
என்னை அபிஷேகம் செய்திடுமே

5. அக்கினி அபிஷேகத்தால்
என்னை அனல் மூட்டி எழுப்பிடுமே

## 18

தேவனே ஆராதிக்கின்றேன்
தெய்வமே ஆராதிக்கின்றேன்

1. அதிகாலையில் ஆராதிக்கின்றேன்
ஆனந்த சத்தத்தோடு ஆராதிக்கின்றேன்
2. கன்மலையே ஆராதிக்கின்றேன்
காண்பவரே உம்மை ஆராதிக்கின்றேன்
3. முழுமனதோடு ஆராதிக்கின்றேன்
முழந்தாள் படியிட்டு ஆராதிக்கின்றேன்
4. யேகோவாயீரே ஆராதிக்கின்றேன்
எல்லாமே பார்த்துக் கொள்வீர்
5. யேகோவா நிசி ஆராதிக்கின்றேன்
எந்நாளும் வெற்றி தருவீர்
6. யேகோவா சாலோம் ஆராதிக்கின்றேன்
எந்நாளுமே சமாதானமே

## 19

உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே
உம்மை ஆராதனை செய்கிறோம்
அல்லேலூயா ஓசன்னா
அல்லேலூயா ஓசன்னா

1. மரணத்தை ஜெயித்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
பாதாளம் வென்றவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
2. துதிகளின் பாத்திரரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
தூயாவி தருபவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
3. செங்கடலை பிளந்தவரே - உம்மை
ஆராதனை செய்கிறோம்
யோர்தானை பிரித்தவரே - உம்மை
ஆராதனை செய்கிறோம்

## 20

நன்றி உள்ள நிறைவுடன்
நன்றி பரிசுத்தர்க்கே
நன்றி தேவகுமாரன்
இயேசுவே தந்தார்

பெலவீனன் பெலவான் என்பான்
தரித்திரன் செழித்திடுவான்
தேவனின் செயல் இதுவே
நமக்காய் - நன்றி

**21**

உம்மைப் போல நல்ல தேவன் யாருமில்லையே
உம்மைப் போல வல்ல தேவன் யாருமில்லையே
உம்மைப்போல என்னைக் காத்திட
உம்மைப்போல என்னைத் தாங்கிட
உம்மைப்போல என்னைத் தேற்றிட
யாருமில்லையே! ஹியேசையா - யாருமில்லையே!
உம்மை நான் போற்றுகிறேன்,
வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்
என் தெய்வமே என் இயேசுவே (2)
என் தெய்வமே! என் தெய்வமே!

**22**

அனுதினமும் உம்மில் நான் வளர்ந்திடவே
உம் அனுக்ரகம் தரவேண்டுமே
என்னால் ஒன்றும் கூடாதையா
எல்லாம் உம்மால் கூடும்

1. என் ஞானம் கல்வி செல்வங்கள் யாவும்
ஒன்றுமில்லை குப்பை என்று எண்ணுகிறேன்
என் நீதி நியாயங்கள் அழுக்கான கந்தை
என்றே உணர்ந்தேன் என் இயேசுவே
2. அழைத்தவரே உம்மில் பிழைத்திடவே
அவனியில் உமக்காய் உழைத்திடவே
அர்ப்பணிக்கின்றேன் என்னை இன்றே
ஏற்றுக் கொள்ளும் என் இயேசுவே

**23**

என் தேவன் என் வெளிச்சம்
என்னை இரட்சிப்பவரும் அவரே
என் ஜீவனுக்கரணானவர்
நான் யாருக்கும் அஞ்சமாட்டேன்

1. தாயும் தந்தையும் தள்ளிவிட்டாலும்
அன்பர் இயேசென்னை ஏற்றுக்கொள்வார் (2)
என்னை அவர் நிழலில் வைத்துக் காத்திடுவார்
தலைமேலேற்றி என்னை உயர்த்திடுவார்(2) -என்
2. தீமை செய்கின்றவர்கள் எனக்கு
தீமை செய்ய விரும்புகையில்

என் தேவன் அருகில் வந்து என்னைக் காத்து நின்றார்
என்னைப் பகைத்தவர்கள் உடனே அகன்றார்கள் -என்

**24**

உம் பாதம் பணிந்தேன் எந்நாளும் துதியே
உம்மையன்றி யாரைப் பாடுவேன் - ஏசையா
உந்தன் அன்பு உள்ளம் பொங்குதே

1. பரிசுத்தமே பரவசமே
பரனேசருளே வரம் பொருளே
தேடினதால் கண்டடைந்தேன்
பாடிட பாடல்கள் ஈந்தளித்தீர் - உம் பாதம்

2. நெருக்கத்திலே உம்மையழைத்தேன்
நெருங்கி உதவி எனக்களித்தீர்
திசைக் கெட்டெங்கும் அலைந்திடாமல்
தீவிரம் வந்தென்னைத் தாங்குகின்றீர் - உம் பாதம்

3. என் முன் செல்லும் உம் சமூகம்
எனக்கு அளிக்கும் இளைப்பாறுதல்
உமது கோலும் உம் தடியும்
உண்மையாய் என்னையும் தேற்றிடுதே - உம் பாதம்

4. என் இதய தெய்வமே நீர்
எனது இறைவா ஆருயிரே
நேசிக்கிறேன் இயேசுவே உம்
நேசமுகம் என்று கண்டிடுவேன் - உம் பாதம்

**25**

நன்றிபலி நன்றிபலி
நல்லவரே உமக்குத்தான்
ஆனந்தம் (அதிகாலை) ஆனந்தமே
அப்பா உம் திருப்பாதமே - என்

1. நேற்றைய துயரமெல்லாம்
இன்று மறைந்ததையா
நிம்மதி பிறந்ததையா - அது
நிரந்தரமானதையா
கோடி கோடி நன்றி ராஜா (3) - நன்றி

2. இரவெல்லாம் காத்தீர்
இன்னும் ஓர் நாள் தந்தீர்
மறவாத என் நேசரே - இன்று
உறவாடி மகிழ்ந்திடுவேன் - கோடி

3. ஊழியப் பாதையிலே
உற்சாகம் தந்தீரையா
ஓடி ஓடி உழைப்பதற்கு
உடல் சுகம் தந்தீரையா - நான் - கோடி

4. வேதனை துன்பமெல்லாம்
ஒரு நாளும் பிரிக்காதையா
நாதனே உம் நிழலில்
நாள்தோறும் வாழ்வேனையா - இயேசு - கோடி

5. ஜெபத்தைக் கேட்டீரைய்யா
ஜெயத்தைத் தந்தீரையா
பாவம் அணுகாமலே
பாதுகாத்து வந்தீரையா - கோடி

6. புதிய நாள் தந்தீரையா
புது கிருபை தந்தீரையா
அதிசயமானவரே
ஆறுதல் நாயகனே - கோடி

## 26

ஆயிரம் ஸ்தோத்திரமே
இயேசுவே பாத்திரரே
பள்ளத்தாக்கிலே அவர் லீலி
சாரோனிலே ஓர் ரோஜா

1. வாலிப நாட்களிலே
என்னை படைத்தவரை நினைத்தேன்
ஏற்றிய தீபத்தால் இதயமே நிறைந்தது
இயேசுவின் அன்பினாலே - ஆயிரம்

2. உலகமேன்மை யாவும்
நஷ்டமாய் எண்ணிடுவேன்
சிலுவை சுமப்பதே லாபமாய் நினைத்தே
சாத்தானை முறியடிப்பேன் - ஆயிரம்

3. சிற்றின்ப கவர்ச்சிகளை
வெறுக்கும் ஓர் இதயம் தந்தீர்
துன்பத்தின் மிகுதியால் நோவுகள் வந்தாலும்
ஆவியில் மகிழ்ந்திடுவேன் - ஆயிரம்

4. பலவித சோதனையை
சந்தோஷமாய் நினைப்பேன்
எண்ணங்கள் சிறையாக்கி இயேசுவுக்கு கீழ்படுத்தி
விசுவாசத்தில் வளர்வேன் - ஆயிரம்

5. இயேசுவின் நாமத்திலே
ஜெயங்கொடுக்கும் தேவனுக்கு
அல்லேலூயா ஸ்தோத்திரம் இயேசுவே வாரும்
என்றென்றும் உம்மில் வாழ - ஆயிரம்

## 27

எந்தன் ஜெபவேளை உமைதேடி வந்தேன்
தேவா பதில் தாருமே
எந்தன் கோட்டை எந்தன் தஞ்சம் நீரே
உம்மை நான் நாடி வந்தேன்

1. சோராது ஜெபித்திட
ஜெப ஆவி வரம் தாருமே
தடையாவும் அகற்றிடுமே
தயை கேட்டு உம்பாதம் வந்தேன் - எந்தன்

2. உம்மோடு எந்நாளும்
உறவாட அருள் செய்யுமே
கர்த்தாவே உம் வார்த்தையை
கேட்டிட காத்திருப்பேனே - எந்தன்

3. நம்பிக்கை இல்லாமல்
அழிகின்ற மாந்தர்களை
மீட்டிடும் என் இயேசுவே
போராடி ஜெபிக்கின்றேன் நாதா - எந்தன்

4. நாளெல்லாம் பாதத்தில்
கர்த்தாவே அமர்ந்திடுவோம்
கண்ணீரின் ஜெபம் கேளுமே
கருணையின் பிரவாகம் நீரே - எந்தன்

## 28

இனிமையான நேரம்
இன்பமான நேரம்
உம் திருப்பாதம் அமர்வதே - இயேசய்யா (2)
அல்லேலூயா அல்லேலூயா அல்லேலூயா (2)

1. பாதம் அமர்ந்தால் பயங்கள் நீங்கிடும்
வேதம் அறிந்தால் வேதனை மாறிடும்
உம் அன்பு பெரிதல்லவோ இயேசய்யா
உமது அன்பிலே அடிமை வாழ்ந்திட வேண்டும்

2. காலை தோறும் உம் கிருபை பெருகிடும்
மாலை முழுவதும் உம் மகிமை நிறைத்திடும்
உம் கிருபை பெரிதல்லவோ இயேசய்யா (2)
உமது கிருபையில் அடிமை வளர்ந்திட வேண்டும்

3. பாவ சாபங்கள் ஓடி மறைந்திடும்
புதிய இதயமே துதிகள் பாடிடும்
உம் இரக்கம் பெரிதல்லவோ இயேசய்யா (2)
உமது இரக்கத்தில் அடிமை சென்றிட வேண்டும்

4. கவலை கண்ணீர்கள் களிப்பாய் மாறிடும்
கஷ்ட நஷ்டங்கள் கரைந்து ஓடிடும்
உம் உண்மை பெரிதல்லவோ இயேசய்யா (2)
உமது உண்மையில் அடிமை நின்றிடவேண்டும்

5. நன்மை கிருபையே தொடரும் நாளெல்லாம்
புல்லுள்ள இடம் நல்ல மேய்ச்சலே
நல் மேய்ப்பர் நீர் அல்லவோ இயேசய்யா (2)
உமது மேய்ச்சலில் அடிமை செழித்திட வேண்டும்

## 29

எனக்காக யாவும் செய்து முடித்தார்
அல்லேலூயா பாடிடுவேன் (2)
அவர் கிருபை என்றுமுள்ளது
அவர் கரத்தின் கிரியைகள் நெகிழாது (2)

1. துன்பத்தின் நடுவில் நான் நடந்தேன்
துணைவராம் இயேசு என்னோடிருந்தார்
தந்தை பிள்ளையை சுமப்பதுபோல
தோளில் சுமந்து கரை சேர்த்தாரே - எனக்காக

2. கிருபையினிமித்தம் வழிநடத்தி
உண்மையினிமித்தம் நிலைநிறுத்தி
தமது வார்த்தையை மகிமைபடுத்தி
எனது முறையினை கேட்பாரே
எனது குறையினை தீர்த்தாரே - எனக்காக

## 30

என் இதயம் யாருக்குத் தெரியும்
என் வேதனை யாருக்குப் புரியும்
என் தனிமை, என் சோர்வுகள்
யார் என்னை தேற்றக்கூடும்

1. நெஞ்சின் ரோகங்கள் அதை மிஞ்சும் பாரங்கள் (2)
தஞ்சம் இன்றியே உள்ளம் ஏங்குதே (2)

2. சிறகு ஒடிந்த நிலையில் பறவை பறக்குமோ (2)
வீசும் புயலில் படகும் தப்புமோ (2)

3. மங்கி எரியும் விளக்கு பெரும் காற்றில் நிலைக்குமோ (2)
உடைந்த உள்ளமும் ஒன்றாய் சேருமோ (2)

4. அங்கே தெரியும் வெளிச்சம் கலங்கரை தீபமோ
ஏசு ராஜனின் முகத்தின் வெளிச்சமே (2)

என் இதயம் இயேசுவுக்குத் தெரியும்
என் வேதனை இயேசுவுக்குப் புரியும்
என் தனிமை, என் சோர்வுகள்
இயேசு என்னை தேற்றுவார்

## 31

இயேசு நல்லவர் இயேசு வல்லவர்
என்றென்றும் மாறாதவர் - அவர்
என்றென்றும் மாறாதவர்

1. குருடரின் கண்களை திறப்பவர்
அவர் நல்லவர் நல்லவரே!
செவிடரின் செவிகளை திறப்பவர்
அவர் நல்லவர் நல்லவரே! (2)
அவர் நல்லவர் சர்வ வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

2. வியாதியில் விடுதலை தருபவர்
அவர் நல்லவர் நல்லவரே
பாவத்தை மன்னிக்கும் பரிசுத்தர்
அவர் நல்லவர் நல்லவரே
அவர் நல்லவர் சர்வ வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

3. துன்பத்தில் ஆறுதல் அளிப்பவர்
அவர் நல்லவர் நல்லவரே
நம் பாரங்கள் யாவையும் நீக்குவார்
அவர் நல்லவர் நல்லவரே
அவர் நல்லவர் சர்வ வல்லவர்
அவர் கிருபை என்றுமுள்ளதே

## 32

உம்மை பாடாத நாவும்
கேளாத செவியும் மகிமை இழந்ததே
பாரில் மகிமை இழந்ததே
உந்தன் சித்தம் செய்ய நித்தம்
இயேசுவே நீர் என்னை ஆட்கொள்ளுமே

1. எந்தன் பாவத்தைப் போக்க பாரினில் வந்த
பரனைப் போற்றிடுவேன்
தேவ பரனைப் போற்றிடுவேன் - உந்தன் சித்தம்

2. இயேசு சிந்தின இரத்தம் உந்தனுக்காக
சிலுவை அண்டை நீ வா
அவர் சிலுவை அண்டை நீ வா - உந்தன் சித்தம்

## 33

அற்ப காரியமே என் தேவனுக்கு
அற்ப காரியமே (2)
அற்புதம் செய்வதும் - அதிசயம் செய்வதும்
அற்ப காரியமே

1. தாய் உன்னை மறந்து போனாலும்
தாயாக வந்து உன்னை தேற்றிடுவார்
கலங்கி போகாதே என் மகனே
கலங்கி போகாதே - அற்ப காரியமே

2. மாராவை மதுரமாய் மாற்றினவர்
மனதின் கசப்பை மாற்றிடுவார்
சோர்ந்து போகாதே என் மகனே
சோர்ந்து போகாதே - அற்ப காரியமே

3. போராட்டம் நெருக்கங்கள் வந்திடலாம்
அவமானம் நிந்தைகள் சூழ்ந்திடலாம்
அழைத்த தேவன் உண்டு என் மகனே
அணைத்து கொள்வாரே - அற்ப காரியமே

4. எரிகோ கோட்டையும் வந்திடலாம்
எதிர்த்து ஜெயிக்க பெலன் தருவார்
எகோவா தேவன் உண்டு என் மகனே
எல்லாமே பார்த்து கொள்வார் - அற்ப காரியமே

## 34

எந்தன் நாவில் புதுப்பாட்டு
எந்தன் இயேசு தருகிறார்
ஆனந்தம் கொள்ளுவேன் அவரை நான் பாடுவேன்
உயிருள்ள நாள் வரையில்-அல்லேலூயா

1. பாவ இருள் என்னை வந்து சூழ்ந்து கொள்கையில்
தேவனவர் தீபமாய் என்னைத் தேற்றினார் - ஆனந்

2. வாதைநோயும் வந்தபோது வேண்டல் கேட்டிட்டார்
பாதை காட்டி துன்பமெல்லாம் நீக்கி மீட்டிட்டார் - ஆனந்

3. சேற்றில் வீழ்ந்த என்னையவர் தூக்கியெடுத்தார்
நாற்றமெல்லாம் ஜீவஇரத்தம் கொண்டு மாற்றினார் -ஆனந்

4. தந்தை தாயும் நண்பருற்றார் யாவுமாகினார்
நிந்தைதாங்கி எங்குமவர் மேன்மை சொல்லுவேன் -ஆனந்

5. இவ்வுலகப் பாடு என்னை என்ன செய்திடும்
அவ்வுலக வாழ்வை காண காத்திருக்கிறேன் - ஆனந்

## 35

என்னை மறவா இயேசு நாதா
உந்தன் தயவால் என்னை நடத்தும்

1. வல்ல ஜீவ வாக்குத்தத்தங்கள்
வரைந்தெனக்காய் ஈந்ததாலே ஸ்தோத்திரம்
ஆபத்திலே அருந்துணையே
பாதைக்கு நல்ல தீபமிதே - என்னை

2. பயப்படாதே வலக்கரத்தாலே
பாதுகாப்பேன் என்றதாலே ஸ்தோத்திரம்

பாசம் என்மேல் நீர் வைத்ததினால்
பறிக்க இயலா தெவருமென்னை - என்னை

3. தாய் தன் சேயை மறந்து விட்டாலும்
மறவேன் உன்னை என்றதாலே ஸ்தோத்திரம்
வரைந்தீரன்றோ உம் உள்ளங்கையில்
உன்னதா எந்தன் புகலிடமே - என்னை

4. உனக்கு எதிராய் எழும்பும் ஆயுதம்
வாய்த்திடாதே என்றதாலே ஸ்தோத்திரம்
பறந்திடுமே உம் நாமத்திலே
பரனே எனக்காய் ஜெயக்கொடியே - என்னை

5. என்னை முற்றும் ஒப்புவித்தேனே
ஏற்று என்றும் நடத்துவீரே ஸ்தோத்திரம்
எப்படியும் உம் வருகையிலே
ஏழை என்னை சேர்த்திடுமே - என்னை

## 36

ஜெயம் கொடுக்கும் தேவனுக்கு
கோடி கோடி ஸ்தோத்திரம்
வாழ்வளிக்கும் இயேசு ராஜனுக்கு
வாழ்நாளெல்லாம் ஸ்தோத்திரம்

அல்லேலூயா அல்லேலூயா பாடுவேன்
ஆனந்த தொனியால் உயர்த்துவேன்

1. நீதியின் கரத்தினால்
தாங்கி நடத்துவார்
கர்த்தரே என் பெலன்
எதற்குமே அஞ்சிடேன் - அல்

2. அற்புதம் செய்பவர்
அகிலம் படைத்தவர்
யுத்தத்தில் வல்லவர்
மீட்பர் ஜெயிக்கிறார் - அல்

3. நம்பிக்கை தேவனே
நன்மைகள் அளிப்பவர்
வார்த்தையை அனுப்பியே
மகிமைப்படுத்துவார் - அல்

4. உண்மை தேவனே
உருக்கம் நிறைந்தவர்
உன்னை காப்பவர்
உறங்குபவரில்லையே - அல்

**37**

சர்வ சிருஷ்டிக்கும் எஜமானன் நீரே
சர்வ சிருஷ்டியைக் காப்பவர் நீரே
எங்கள் இதயத்தில் உம்மைப் போற்றிடுவோம்
என்றென்றும் பணிந்து தொழுவோம்
ஆ ஆ ஆ அல்லேலூயா (7) ஆமென்

1. வானம் பூமி ஒழிந்து போனாலும்
உம் வார்த்தை என்றும் மாறாதே
இவ்வாழ்க்கை அழிந்து மறைந்துபோம்
விசுவாசி என்றென்றும் நிலைப்பான் - ஆ.. ஆ..

2. கர்த்தர் கரத்தின் கிரியைகள் நாங்கள்
கிருபை எங்கள் மேல் ஊற்றுவீரே
ஆவி ஆத்துமா சரீரம் உம் சொந்தமே
அதை சாத்தான் தொடாமல் காப்பீரே - ஆ.. ஆ..

3. எல்லா மனிதர்க்கும் ஆண்டவர் நீரே
எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றே
எங்கள் இதயத்தை உம்மிடம் படைக்கின்றோமே
ஏங்குகின்றோம் உம் ஆசீர்பெறவே - ஆ.. ஆ..

**38**

சந்தோஷமாயிருங்க
எப்பொழுதும் சந்தோஷமாயிருங்க
உயர்வானாலும் தாழ்வானாலும்
சர்வ வல்ல தேவன் நம்மோடிருக்கிறார்

1. நெருக்கத்தின் நேரத்திலும் கண்ணீரின் பாதையிலும்
நம்மை காண்கின்ற தேவன் நம்மோடிருப்பதால்
சந்தோஷமாயிருங்க - சந்தோஷ

2. விசுவாச ஓட்டத்திலும் ஊழியப் பாதையிலும்
நம்மை காண்கின்ற தேவன் நம்மோடிருக்கிறார்
சந்தோஷமாயிருங்க - சந்தோஷ

3. தோல்விகள் வந்தாலும் நஷ்டங்கள் வந்தாலும்
நம்மை வழிநடத்தும் தேவன் நம்மோடு இருப்பதால்
சந்தோஷமாயிருங்க - சந்தோஷ

4. என்னதான் நேர்ந்தாலும் சோர்ந்து போகாதீங்க
நம்மை அழைத்த தேவன் கைவிடமாட்டார்
சந்தோஷமாயிருங்க - சந்தோஷ

**39**

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது
இன்று அகமகிழ்வோம் அக்களிப்போம்
அல்லேலூயா பாடுவோம் (2)
அல்லேலூயா தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு (2)

1. எனக்கு உதவிடும் எனது ஆண்டவர்
என் பக்கம் இருக்கிறார் (2)
உலக மனிதர்கள் எனக்கு எதிராக
என்ன செய்ய முடியும் (2)
தோல்வி இல்லை எனக்கு
வெற்றி பவனி செல்வேன்
தோல்வி இல்லை நமக்கு
வெற்றி பவனி செல்வோம் - ஆண்டவர்

2. எனது ஆற்றலும் எனது பாடலும்
எனது மீட்புமானார் (2)
நீதிமான்களின் கூடாரத்தில் (சபைகளிலே)
வெற்றி குரல் ஒலிக்கட்டும் - தோல்வி

3. தள்ளப்பட்ட கல் கட்டிடம் தாங்கிடும்
மூலைக்கல் ஆயிற்று (2)
கர்த்தர் செயல் இது அதிசயம் இது
கைதட்டிப் பாடுங்களேன் - தோல்வி

4. என்றும் உள்ளது உமது பேரன்பு
என்று பறைசாற்றுவேன் (2)
துன்ப வேளையில் நோக்கி கூப்பிட்டேன்
துணையாய் வந்தீரையா - தோல்வி

## 40

உமக்காக நான் வாழ விரும்புகிறேன்
உண்மையான இதயம் தாருமே
உம் மகனாய் நான் வாழ வேண்டுகிறேன்
உத்தமரே கிருபை தாருமே

1. பாடுகளோ நிந்தைகளோ
நாசங்களோ மோசங்களோ (2)
எந்த நிலையிலும் உமக்காக வாழ வேண்டுமே - உமக்காக

2. பாவமெனும் படுகுழியில்
பரிதாபமாய் நான் இருக்கையிலே (2)
என்னை பார்த்து பிழைத்திரு என்று சொன்னீரே - உமக்காக

3. ஊழியத்தின் பாதையிலே
உடைந்து போன நேரத்திலே (2)
உணவு தந்தீர் உடையும் தந்தீர் சுகமும் தந்தீரே - உமக்காக

4. இரகசியமாய் நீர் வருகையிலே
இரட்சகரே என்னை எடுத்துக்கொள்ளும்
உமக்காக காத்திருக்கும் இதயம் தாங்கப்பா - உமக்காக

## 41

அன்பு தேடும் நெஞ்சுக்குள்
சோகமான சோர்வுகள்
அன்பு எல்லாம் புண்ணானால்
அங்கு ஏது பாடல்கள்
அன்பு இயேசுவின் அன்பு (2)

1. அன்பு என்ற பாதையை எங்கு என்று கேட்டேன்
தெரியாது என்று மனிதரை பார்த்தேன்
மாயையான இந்த உலகத்திலே
மனிதரில் அன்பு காட்ட மகாதேவன் வந்தீரே
அன்பு இயேசுவின் அன்பு (2)

2. கஷ்டங்கள் தங்கும்போது கர்த்தர் கரம் நீட்டினீர்
துன்பங்கள் தாங்கும் போது துயரங்கள் போக்கினீர்
புண்ணான என் அன்பை புதுமையாய் மாற்றிட
புகழிடமாக்கி என்னை புதுப்பிக்க வந்தீரே
அன்பு இயேசுவின் அன்பு (2)

## 42

மகிமை மாட்சிமை நிறைந்தவரே
மகிழ்வுடன் தொழுதிடுவோம்
பரிசுத்த தேவனாம் இயேசுவை
பணிந்தே தொழுகுவோம்

1. உன்னத தேவன் நீரே
ஞானம் நிறைந்தவரே
முழங்கால் யாவுமே
பாரில் மடங்கிடுதே
உயர்ந்தவரே சிறந்தவரே
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

2. ஒருவரும் சேரா ஒளியில்
வாசம் செய்பவரே
ஒளியினை தந்துமே
இதயத்தில் வாசம் செய்யும்
ஒளி நிறைவே அருள் நிறைவே
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

3. பரிசுத்த தேவன் நீரே
பாதம் பணிந்திடுவோம்
கழுவியே நிறுத்தினீரே
சத்திய தேவன் நீரே
கனம் மகிமை செலுத்தியே நாம்
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

4. நித்திய தேவன் நீரே
நீதி நிறைந்தவரே
அடைக்கலமானவரே

அன்பு நிறைந்தவரே
நல்லவரே வல்லவரே
என்றும் தொழுதிடுவோம் - மகிமை

## 43

எப்படி பாடுவேன் நான்
என் இயேசு எனக்குச் செய்ததை
ஆயுள் முழுவதும் என் கர்த்தருக்காய்
ஆத்தும ஆதாயம் செய்வேன்

1. ஒரு வழி அடையும்போது
புது வழி திறந்த தேவா
திறந்த வாசலை என் வாழ்க்கையில்
அடைக்காத ஆண்டவரல்லோ - எப்படி

2. எப்பக்கம் நெருக்கப்பட்டும்
ஒடுங்கி நான் போவதில்லை
அப்பனின் மார்பினில் சாய்ந்தென்றுமே
எப்போதும் பாடிடுவேன் - எப்படி

3. கடந்து வந்த பாதையில்
கண்மணிபோல் காத்திட்டீர்
கடுகளவும் குறை வைக்காமலே
அதிகமாய் ஆசீர்வதித்தீர் - எப்படி

## 44

அப்பா உம் கிருபைகளால்
என்னை காத்துக் கொண்டீரே
அப்பா உம் கிருபைகளால் என்னை
அணைத்துக் கொண்டீரே (2)

1. தாங்கி நடத்தும் கிருபையிது
தாழ்வில் நினைத்த கிருபையிது (2)
தந்தையும், தாயும் கைவிட்டாலும்
தயவாய் காக்கும் தேவ கிருபை (2) - அப்பா

2. வியாதியின் நேரத்தில் காத்த கிருபை
விடுதலை கொடுத்த தேவ கிருபை
சூழ்நிலைகள் மாறினாலும்
மாறாமல் தாங்கிட்ட தேவ கிருபை (2) - அப்பா

3. கஷ்டத்தின் நேரத்தில் காத்த கிருபை
கண்ணீரை மாற்றின தேவ கிருபை
தடைகள் யாவையும் உடைத்து எறிந்து
வெற்றியைத் தந்திட்ட தேவ கிருபை (2) - அப்பா

## 45

எண்ணிலடங்கா ஸ்தோத்திரம் - தேவா
என்றென்றும் நான் பாடுவேன்
இந்நாள்வரை என் வாழ்விலே
நீர் செய்த நன்மைக்கே

1. வானாதி வானங்கள் யாவும்
அதின் கீழுள்ள ஆகாயமும்
பூமியில் காண்கின்ற யாவும்
கர்த்தா உம்மைப் போற்றுமே - எண்

2. காட்டினில் வாழ்கின்ற யாவும்
கடும் காற்றும் பனித்தூறலும்
நாட்டினில் வாழ்கின்ற யாவும்
நாதா உம்மைப் போற்றுமே - எண்

3. நீரினில் வாழ்கின்ற யாவும் - இந்
நிலத்தின் ஜீவராசியும்
பாரினில் பறக்கின்ற யாவும்
பரனே உம்மைப் போற்றுமே - எண்

4. வால வயதுள்ளோரும் - மிகும்
வயதால் முதிர்ந்தோர்களும்
பாலகர் தம் வாயினாலும்
பாடி உம்மைப் போற்றுவாரே - எண்

## 46

இயேசு பெரியவர் நம் இயேசு பெரியவர்
என்றென்றும் இயேசு பெரியவர் - அவர்
ஒருபோதும் கைவிடமாட்டார் - அல்லேலூயா

1. மனுஷனைப் பார்க்கிலும் இயேசு பெரியவர்
பிரபுக்களைப் பார்க்கிலும் இயேசு பெரியவர்
செல்வங்களைப் பார்க்கிலும் இயேசு பெரியவர்
பட்டம் பதவி பார்க்கிலும் இயேசு பெரியவர்

2. அதிசயங்கள் செய்திடும் இயேசு பெரியவர்
அற்புதங்கள் செய்திடும் இயேசு பெரியவர்
நம்பினோரை வாழவைக்கும் இயேசு பெரியவர்
நம்பிக்கையின் நங்கூரம் இயேசு பெரியவர்

3. உனக்குள்ளே இருக்கின்ற இயேசு பெரியவர்
உலகிலுள்ள சாத்தானிலும் இயேசு பெரியவர்
உறங்காமல் காத்திடும் இயேசு பெரியவர்
உன் குறைவை நிறைவாக்கும் இயேசு பெரியவர்

## 47

துதி கீதங்களால் புகழ்வேன்
உந்தன் நாம மகத் வங்களை
இயேசுவே இரட்சகா
உந்தன் நாமம் எங்கள் ஆறுதல்

1. தினந்தோறும் உம் கானங்களால்
நிறைத்திடுமே எங்களை நீர்
திரு உள்ளமதுபோல் எம்மை மாற்றிடுமே
கனிவோடெங்களை உந்தன் காருண்யத்தால் - துதி

2. அலை மோதும் இவ் வாழ்க்கையிலே
அனுகூலங்கள் மாறும் போது
வழி காட்டிடுமே துணை செய்திடுமே
கனிவோடடியார்களைக் காருண்யத்தால் - துதி

## 48

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு
வெற்றி உண்டு - 3

1. என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன  சொன்னாலும்
நான் சோர்ந்து போகமாட்டேன் - கிறிஸ்து

2. என் ராஜா முன்னே செல்கிறார்
வெற்றிப் பவனி செல்கிறார்
குருத்தோலை கையில் எடுத்து
நான் ஓசன்னா பாடிடுவேன் - கிறிஸ்து

3. சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் நேசர் பறித்துக் கொண்டார்
சிலுவையில் அறைந்து விட்டார் - இயேசு
காலாலே மிதித்து விட்டார் - கிறிஸ்து

4. பாவங்கள் போக்கிவிட்டார்
சாபங்கள் நீக்கி விட்டார்
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன் - கிறிஸ்து

5. மேகங்கள் நடுவினிலே
என் நேசர் வரப்போகிறார்
கரம் பிடித்து அழைத்துச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார் - இயேசு - கிறிஸ்து

## 49

எல்லா மகிமைக்கும் பாத்திரரே
எல்லா கனத்துக்கும் பாத்திரரே
அசைவாடும் தெய்வமே (4)
எங்கள் மேலே அசைவாடுமே (2)

1. செங்கடல் மேல் அசைவாடினீர்
எல்லாத் தடைகளை மாற்றினீரே
எங்கள் தடைகள் மேல் அசைவாடுமே (2) - அசை

2. உலர்ந்த எலும்பிற்கு உயிர் தந்தீரே
என் வாழ்க்கையில் அசைவாடுமே
என் வாழ்க்கையில் அசைவாடுமே (2) - அசை

3. எரிகோ மதில்மேலே அசைவாடினீர்
எல்லாத் தடைகளை மாற்றினீரே
எங்கள் மேலே அசைவாடுமே (2) - அசை

4. பவுலும் சீலாவும் பாடும்போது
சிறைச்சாலையில் அசைவாடினீர்
எங்கள் மேலே அசைவாடுமே (2) - அசை

**50**

ஆதியும் அந்தமுமானவரே
அல்பாவும் ஒமேகாவுமானவரே (2)
அல்லேலூயா, அல்லேலூயா (4)

1. பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தரே
சேனைகளின் கர்த்தர் பரிசுத்தரே

2. நல்லவர் நல்லவர் நல்லவரே
நமது தேவன் நல்லவரே - (2)

3. வல்லவர் வல்லவர் வல்லவரே
நமது தேவன் வல்லவரே -(2)

4. பரிசுத்த இரத்தம் சிந்தினவரே
இரத்தத்தால் எங்களை மீட்டவரே -(2)

5. பலமுள்ள ஆவியைக் கொடுப்பவரே
பலவீன ஆவியை முறிப்பவரே - (2)

**51**

உனக்குள்ளே இருக்கின்ற உன்
இயேசு என்றும் பெரியவரே
நீ அறியாததும் உனக்கு எட்டாததுமான
பெரிய காரியங்களை செய்திடுவார்

1. நம்பிக்கை இல்லா நிலையானதோ
விசுவாசம் உன்னில் குறைவானதோ
அற்புதர் உனக்குள் இருக்கின்றார்
அதிசயம் செய்வார் நீ கலங்காதே (2) - உனக்குள்ளே

2. சூழ்நிலை எல்லாம் எதிரானதோ
சுற்றத்தார் உன்னில் பகையானாரோ
வல்லவர் உனக்குள்ளே இருக்கின்றார்
வலக்கரம் தாங்குவார் கலங்காதே (2) - உனக்குள்ளே

3. மதுரமான வாழ்வு கசப்பானதோ
ஒளிவரும் நேரம் இருளானதோ
ஜீவனுள்ள தேவன் இருக்கின்றார்
யாவையும் செய்வார் கலங்காதே (2) - உனக்குள்ளே

## 52

திருப்பாதம் நம்பி வந்தேன்
கிருபை நிறை இயேசுவே
தமதன்பைக் கண்டடைந்தேன்
தேவ சமூகத்திலே

1. இளைப்பாறுதல் தரும் தேவா
களைத்தோரைத் தேற்றிடுமே
சிலுவை நிழல் எந்தன் தஞ்சம்
சுகமாய் அங்கு தங்கிடுவேன்

2. என்னை நோக்கிக் கூப்பிடு என்றீர்
இன்னல் துன்ப நேரத்திலும்
கருத்தாய் விசாரித்து என்றும்
கனிவோடென்னை நோக்கிடுமே

3. மனம் மாற மாந்தன் நீரல்ல
மன வேண்டுதல் கேட்டிடும்
எனதுள்ளம் ஊற்றி ஜெபித்தே
இயேசுவே உம்மை அண்டிடுவேன்

4. என்னைக் கைவிடாதிரும் நாதா
என்ன நிந்தை நேரிடினும்
உமக்காக யாவும் சகிப்பேன்
உமது பெலன் ஈந்திடுமே

5. உம்மை ஊக்கமாய் நோக்கிப் பார்த்தே
உண்மையாய் வெட்கம் அடையேன்
தமது முகப் பிரகாசம்
தினமும் என்னில் வீசிடுதே

6. சத்துரு தலை கவிழ்ந்தோட
நித்தமும் கிரியை செய்திடும்
என்னைத் தேற்றிடும் அடையாளம்
இயேசுவே இன்று காட்டிடுமே

7. விசுவாசத்தால் பிழைத்தோங்க
வீர பாதை காட்டிடுமே
வளர்ந்து கனி தரும் வாழ்வை
விரும்பி வரம் வேண்டுகிறேன்

## 53

கல்வாரியே கல்வாரியே
கருணையின் இல்லமே - (2)

1. கண்ணீர் விட்டு நான் அழுதால் அதையே
என் உள்ளம் தாங்காதையா
பெலவீனம் தாக்குதையா எனக்கு
பெலக்கரம் நீட்டுமையா - கல்வாரியே

2. தாங்கொன்னா பாரத்தினால்
என் உள்ளம் சோர்ந்து போகுதையா
சுமக்கும் சுமைதாங்கியே என் பாரம்
சுமக்க வாருமையா - கல்வாரியே

3. உம்மோடு நான் இருந்தால் எந்நாளும்
குறை ஒன்றும் இல்லையையா
சந்தோஷம் பொங்குதையா
என் உள்ளம் சங்கீதம் பாடுமையா - கல்வாரியே

**54**

ஒரு தாய் தேற்றுவதுபோல்
என் நேசர் தேற்றுவார் - அல்லேலூயா (4)

1. மார்போடு அணைப்பாரே
மனக்கவலை தீர்ப்பாரே - ஒரு
2. கரம் பிடித்து நடத்துவார்
கன்மலைமேல் நிறுத்துவார் - ஒரு
3. எனக்காக மரித்தாரே
என் பாவம் சுமந்தாரே - ஒரு
4. ஒரு போதும் கைவிடார்
ஒரு நாளும் விலகிடார் - ஒரு

**55**

உம்மோடு இணைந்திட உம் அன்பை பாடிட
கிருபை தந்த தேவா - தேவா
உம் நாமம் போற்றிட உம்மை என்றும் வாழ்த்திட
கிருபை தந்த மூவா

1. எல்லா காலத்திலும் எல்லா நேரத்திலும்
என் இதயம் மகிழ்ந்திடுதே
உம் அன்பை எண்ணி என்றும் பாடுகையில்
உம் கிருபை வெளிப்படுதே - உம்மோடு
2. நாதா நீர் என் பக்கம் இல்லாதிருந்தால்
நான் பாவியாய் இருப்பேனே
பாவி என்னையும் மீட்டு பரிசுத்தமாக்கி
உம் பாதத்தில் சேர்த்தீரே - உம்மோடு
3. வல்லமை தேவன் நீர் வந்திடும்போது
வரங்கள் வெளிப்படுதே
ஆவியின் தேவன் அனல்மூட்டும்போது
அபிஷேகம் பொங்கிடுதே - உம்மோடு

**56**

நீர் இல்லாத நாளெல்லாம் நாளாகுமா?
நீர் இல்லாத வாழ்வெல்லாம் வாழ்வாகுமா? (2)

1. உயிரின் ஊற்றே நீயாவாய்
உண்மையின் வழியே நீயாவாய்
உறவின் பிறப்பே நீயாவாய்
உள்ளத்தில் மகிழ்வே நீயாவாய் - நீர்

2. எனது ஆற்றலும் நீயாவாய்
எனது வலிமையும் நீயாவாய்
எனது அரணும் நீயாவாய்
எனது கோட்டையும் நீயாவாய் - நீர்

3. எனது நினைவும் நீயாவாய்
எனது மொழியும் நீயாவாய்
எனது மீட்பும் நீயாவாய்
எனது உயிர்ப்பும் நீயாவாய் - நீர்

## 57

என்னை உண்டாக்கிய என் தேவாதி தேவன்
அவர் தூங்குவதுமில்லை உறங்குவதுமில்லை

1. என்மேல் அவர் கண்ணை வைத்து, ஆலோசனை சொல்லுவார்
சத்தியத்தின் பாதையிலே நித்தமும் நடத்துவார்
பரிசுத்த ஆவியால் உள்ளத்தை நிரப்புவார்
பரிசுத்தர் பரிசுத்தர் அவர் பெயரே - என்னை

2. பெலவீன நாட்களிலே பெலன் தந்து தாங்குவார்
பலவித சோதனையில் ஜெயம் நமக்களிப்பார்
ஆபத்துக் காலத்தில் அரணான கோட்டையும்
கேடகமும் துருகமும் பெலன் அவரே - என்னை

3. ஆவியான தேவனுக்கு ரூபமொன்றுமில்லையே
ரூபமில்லை ஆகையால் சொரூபமொன்றுமில்லையே
வாஞ்சையுள்ள ஆத்துமாவின் இருதயந் தன்னிலே
வார்த்தையாலே பேசுகின்ற ஆண்டவர் இவர் - என்னை

## 58

ஊற்றுத் தண்ணீரே எந்தன் தேவ ஆவியே
ஜீவ நதியே என்னில் பொங்கிப் பொங்கி வா - (2)
ஆசீர்வதியும் என் நேச கர்த்தாவே - (2)
ஆவியின் வரங்களாலே என்னை நிரப்பும் - (2)

1. கன்மலையைப் பிளந்து வனாந்திரத்திலே
கர்த்தாவே உம் ஜனங்களின் தாகம் தீர்த்தீரே
கன்மலையிலும் பள்ளத்தாக்கிலும்
தண்ணீர் பாயும் தேசத்தை நீர் வாக்களித்தீரே - ஊற்று

2. திறக்கப்பட்டதாம் ஊற்று சிலுவையிலே
இரட்சகரின் காயங்களில் வெளிப்படுதே
கனி தந்திட, நான் செழித்தோங்கிட
கர்த்தரின் கரத்தில் நித்தம் கனம் பெற்றிட - ஊற்று

3. இரட்சிப்பின் ஊற்று எந்தன் சபை நடுவே
எழும்பிட இந்த வேளை இறங்கிடுமே
ஆத்ம பாரமும் பரிசுத்தமும்
ஆவலுடன் பெற்றிடவே வரம் தாருமே - ஊற்று

## 59

உள்ளபடி வா
உள்ளம் நொறுங்கி வா
உன் தெய்வம் இயேசு நான்
அன்பாய் அழைக்கின்றேன் வா - (2)
வழுவாதபடி உன்னை காப்பேன் வா
விலகாமல் உன்னோடு இருப்பேன் வா
வாக்குபடி நடப்பேன் வா
அழைப்பை மதித்து என்னிடம் வா - (2) - உள்ளபடி வா

1. பாவம் நிறைந்த உன் வாழ்வையே
பூரணம் என் வசம் கொடுப்பாயா (2)
மகனே மகளே என் சாயலே
மலர்ந்து பெருகிட என்னிடம் வா - (2)

2. உன்னை படைத்த என்னையே
விட்டு வெகுதூரம் ஓடினதேன் - (2)
என்னைக் கொடுத்தேன் உன்னையே
மீட்பேன் மாறாமல் வாழவா - (2)
அன்பாய் அழைக்கின்றேன் வா.....

## 60

கவலையில் தனிமையில் தோல்வியில்
கர்த்தர் என்னோடே இருக்கின்றார்
சோர்வினில் நெருக்கத்தில் ஆபத்தில்
தேவன் என்னை என்றும் தேற்றுகிறார்

1. கவலையில் என்னை விசாரிப்பவர்
கஷ்டத்தில் என்னை கரம் பிடிப்பவர்
கலங்காதே என்று கண்ணீரை துடைத்து
கண்மணிபோல் என்னை காப்பவர் - கவலையில்

2. தனிமையில் என்னோடு இருப்பவர்
தாய் தேற்றும்போல் என்னை தேற்றுபவர்
தள்ளாடும்போது தாங்கி சுமந்து
தயங்காமல் தஞ்சம் அளிப்பவர் - கவலையில்

3. ஆபத்தில் அடைக்கலமானவர்
அன்பாய் என்னை என்றும் அணைப்பவர்
அறியாத காரியம் அறிய வைத்து
அல்லல் யாவும் தீர்த்தவர் - கவலையில்

## 61

நன்றியால் துதி பாடு
உன் இயேசுவை உள்ளத்தால் என்றும் பாடு
வல்லவர் நல்லவர் போதுமானவர்
வார்த்தையில் உண்மையுள்ளவர் - நன்றி

1. எரிகோ மதிலும் முன்னே வந்தாலும்
இயேசு உந்தன் முன்னே செல்கிறார்
கலங்கிடாதே திகைத்திடாதே
துதியினால் இடிந்து விழும் - நன்றி
2. துன்மார்க்க ஏதுவான வெறி கொள்ளாமல்
தெய்வ பயத்தோடு என்றுமே
ஆவியினால் என்றும் நிறைந்தே
சங்கீத கீர்த்தனம் பாடு - நன்றி
3. சரீரம் ஆத்துமா ஆவியிலும்
சோர்ந்து போகும் வேளையில் எல்லாம்
துதி சத்தத்தால் உள்ளம் நிறைந்தால்
தூயரின் பெலன் கிடைக்கும் - நன்றி

## 62

வல்லமையின் ஆவியானவர்
என்னுள் வந்துவிட்ட காரணத்தினால்
பொல்லாத சாத்தானை - ஒரு
சொல்லாலே விரட்டி விட்டேன்

1. Power ஆவி எனக்குள்ளே
பய ஆவி அணுகுவதில்லை
அன்பின் ஆவி எனக்குள்ளே
அகற்றி விட்டேன் கசப்புகளை
2. கட்டுப்பாட்டின் ஆவியானவர்
என்னை உடிவேசடிட பண்ணி நடத்துகிறார்
இஷ்டம் போல அலைவதில்லை
அவர் சித்தம் செய்து வாழ்பவன் நான்
3. கிறிஸ்துவுக்குள் நறுமணம் நான்
தெருத் தெருவா மணம் வீசுவேன்
மீட்புபெறும் அனைவருக்கும் நான்
வாழ்வளிக்கும் வாசனையாவேன்
4. உலகத்திற்கு வெளிச்சம் நான்
இந்த ஊரெல்லாம் கூடிசஉா அடிப்பேன்
உப்பாக பரவிடுவேன் - நான்
எப்போதும் சுவை தருவேன்

## 63

எண்ணி எண்ணி துதி செய்வாய்
எண்ணிலடங்காத கிருபைகட்காய்
என்றும் தாங்கும் தம் புயமே
இன்ப இயேசுவின் நாமமே

1. உன்னை நோக்கும் எதிரியின்
கண்ணின் முன்னே பதறாதே
கண்மணி போல் காக்கும் கரங்களில்
உன்னை மூடி மறைப்பாரே - எண்ணி

2. யோர்தான் புரண்டு வரும்போல
எண்ணற்ற பாரங்களோ
எலியாவின் தேவன் எங்கே
உந்தன் விசுவாச சோதனையில் - எண்ணி

3. உனக் கெதிராகவே
ஆயுதம் வாய்க்காதே
உன்னை அழைத்தவர் உண்மை தேவன்
அவர் தாசருக்கு நீதியவர் - எண்ணி

4. திறந்த வாசல் முன்னே
தீவிரம் பிரவேசிப்போம்
ஒரு மனிதனும் பூட்ட மாட்டான்
உன் கர்த்தர் முன் செல்வார் - எண்ணி

5. மனிதரை ஜனங்களை
மன்னவர் தருவாரே
நம் ஜீவனை ஈடாய் கொடுப்போம்
ஜீவன் தந்தவர் கேட்கிறாரே - எண்ணி

**64**

நேசருக்கு ஜீவ ராகங்கள்
நேர்த்தியாக நாளும் பாடுவோம்(2)
நாளும் அவரை வாழ்த்தி பாடியே
நன்மைகளை பெற்றுக்கொள்ளுவோம் (2)

வாழ்த்தி பாடுவோம் வல்லதேவனை
வல்லவர் அவர் ஒருவரே
உயர்த்தி பாடுவோம் உத்தமரையே
உத்தமர் அவர் ஒருவரே

1. கடந்திட்ட நாட்கள் எல்லாமே
கண்மணிபோல நம்மையே
காத்து வந்தார் கருத்துடனே
கருத்தோடு கானம் பாடுவோம் (2) - வாழ்த்தி

2. இமைப்பொழுதும் உறங்கிடாமலே
இடைவிடாமல் பாதுகாத்தாரே
இணையற்ற தேவனவரே
இனிதாக பாடுவோம் (2) - வாழ்த்தி

**65**

நீர் சொல்ல ஆகும் - கட்டளையிட நிற்கும்
உம்மாலே முடியா எதுவும் இல்லை
அல்லேலூயா....அல்லேலூயா

1. மனிதன் கதவை அடைத்திடுவான்
மாறாதவர் அதை திறந்திடுவீர் (2)
மகிமைக்கு ஒப்பான தேவன் நீரே
மகத்துவ ராஜனும் நீரே (2) - நீர் சொல்ல

2. மனுஷன் (மனுஷி) முகத்தைப் பார்த்திடுவான்(ள்)
நீரோ உள்ளத்தைப் பார்க்கின்றீர் (2)
மண்ணுலக வாழ்விற்கு ஒளியானீர்
விண்ணுலக வாழ்விற்கு வழியானீர் (2) - நீர் சொல்ல

3. மனுபுத்திரன் மனம் மாறிடுவான்
மாறிடா நேசர் மனம் இரங்குவீர் (2)
சொன்னதை செய்து முடித்திடுவீர்
சொல்லிமுடியா நன்மை அளித்திடுவீர் -(2) - நீர் சொல்ல

## 66

முழங்காற்படியிட்டு ஜெபிக்கணும் இயேசு ராஜா
என் முழங்கால்கள் தேய்ந்து போகணும்
இயேசு தேவா (2)

1. தேசத்திற்காய் கதறணும்
திறப்பின் வாசலில் நிற்கணும் (2)
இருதயத்தை ஊற்றணும்
கண் கண்ணீர் சொறியணும் (2)
உதவிடும் தேவா உதவிடும் தேவா
உதவிடும் இயேசு தேவா - முழங்காற்

2. நீர்செய்த நன்மைகள் நினைக்கணும்
நன்றிகள் சொல்லி மகிழணும் (2)
உம்மை மறந்தால் மனுஷன் இல்லை
உம்மை பிரிந்தால் ஜீவன் இல்லை (2)
உதவிடும் தேவா உதவிடும் தேவா
உதவிடும் இயேசு தேவா - முழங்காற்

3. ஜெபிக்கிற மனுஷன் தேவையே
என் தாய்நாட்டிற்கு தேவையே (2)
நூற்றுக்கு நூறு அர்ப்பணிக்கும்
தேவ மனுஷன் தேவையே (2)
உதவிடும் தேவா உதவிடும் தேவா
உதவிடும் இயேசு தேவா - முழங்காற்

## 67

சீயோன் வாசியே! நீ பதறாதே- இயேசு
சீக்கிரம் வருவேன் என்றுரைத்தாரே (2)

1. மனிதராலே நீ தள்ளப்பட்டாலும்
மண்ணோடு உந்தன் பேர் அழிந்து போனாலும் (2)
மாறாத மகிமையின் நேசருண்டு (2) உனக்கு (2)
மறைவான மண்ணாவை பொழிந்திடுவார் (2) - சீயோன்

2. உலகமே உன்னை எதிர்த்து வந்தாலும்
தீமையான மொழியால் பேசி மகிழ்ந்தாலும் (2)
உன்னதத்தின் ஆவி உனக்குளுண்டு - உன்னை (2)
மறவாமல் கிருபையால் நிறைத்திடுவார் (2) - சீயோன்

3. இருளான பள்ளத்தாக்கில் நடக்க நேர்ந்தாலும்
பாவங்கள் உன்னை சூழ்ந்து கொண்டாலும்
சிலுவையின் வெற்றி உனக்குளுண்டு - உன்னை (2)
தவறாமல் வழுவாமல் நடத்திச் செல்வார் - சீயோன்

**68**

இயேசுவே நான் உந்தன் அடிமை
பயன்படுத்தும் உந்தன் பாத்திரமாய்
பயன்படுத்தும் என்னை பயன்படுத்தும் (2)
உந்தன் வல்லமையாய் பயன்படுத்தும்
உந்தன் அன்பால் என்னை பயன்படுத்தும் - இயேசுவே

1. பரமன் தேடும் பாத்திரமாய்
பக்குவம் நிறைந்த பாத்திரமாய் (2)
பாடுபட்டு பளிச்சிடும் பாத்திரமாய்
பதட்டமில்லாத பாத்திரமாய் (2) - பயன்படுத்தும்
2. அச்சத்தை அகற்றிய பாத்திரமாய்
அன்பை அனுபவித்த பாத்திரமாய்
அற்புதரை ஆசிக்கும் பாத்திரமாய்
ஆவியில் நிறையும் பாத்திரமாய் - பயன்படுத்தும்
3. மெல்ல மேலோங்கும் பாத்திரமாய்
வெட்டிக் கொள்ளா ஒட்டிக்கொள்ளும் பாத்திரமாய்
பரமனோடு பழகும் பாத்திரமாய்
ஊழியத்தின் உம்முடைய பாத்திரமாய் - பயன்படுத்தும்

**69**

கோடாகோடி நாவுகள் போதாதைய்யா
அப்பா நான் உம் புகழை என்றும் பாட
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. தாயான தகப்பனாய் தாங்கி என்னை காப்பவர்
கோலும் தடியும் கொண்டு தினம் தேற்றி (2)
என்னை நடத்துபவர் - அல்லேலூயா
2. என் மீது கண்ணை வைத்து ஆலோசனை தருபவர்
கண்மணியே என்றழைத்து காலமெல்லாம் காப்பவர் (2) - அல்லேலூயா
3. நிந்தனைகள் வரும்போது தோளின்மேலே சுமப்பவர்
அற்புதராய் அதிசயங்கள் என் வாழ்வினில் செய்பவர் (2) - அல்லேலூயா

**70**

வாக்குமாறா எந்தன் இயேசு நாதரே
வல்லமையை தந்திடும் நேசரே (2)
வரங்களையும் தருபவரும் நீரே (2) - என்
வாழ்க்கையை செவ்வையாக்கும் தெய்வமே (2)

1. ஆபிரகாமின் விசுவாசம் தாருமே
ஈசாக்கின் ஆசீர்வாதம் வேண்டுமே (2)
அசைவாடும் ஆவியே பெலன் தாருமே
அன்புள்ளோனாய் என்னை மாற்ற வேண்டுமே (2) - வாக்குமாறா

2. மாம்சமான யாவர்மேலும் ஊற்றுமே
வல்லமையின் வரம் தந்து நடத்துமே (2)
பரிசுத்தாவி எங்கள் மீது இறங்க வேண்டுமே
பாவம் எல்லாம் பறந்து ஓட வேண்டுமே (2) - வாக்குமாறா

3. ஆவியில் ஜெபிக்கும் பெலன் வேண்டுமே
அபிஷேக வார்த்தை வாயில் வரணுமே (2)
உயிர்பிக்கும் உன்னதரே வாருமே
உமக்காக வாழ என்னை உயர்த்துமே (2) - வாக்குமாறா

## 71

இயேசுவே என் இதய தெய்வம்
நல்ல நாயகனே (2)
வாழ்த்துவேன் எந்நாளுமே
வணங்குவேன் எந்நேரமே (2)

1. மகிமையாக வந்தவர்
மகா இரக்கம் உடையவர் (2)
அன்பினாலே அணைப்பவர் (2)
ஆருயிர் தேவனவர் (2) - இயேசுவே

2. கஷ்ட நேரத்தில் காப்பவராய்
துன்ப நேரத்தில் துணையவராய் (2)
வியாதி நேரத்தில் வைத்தியராய் (2)
இன்னல் வேளையில் இனியவராய் (2) - இயேசுவே

3. துதிக்கு தூய பாத்திரரே
ஜெபத்திற்கு ஜெயமானரே (2)
ஆராதனை அழகுள்ளவரே (2)
ஆவியான ஆண்டவரே (2) - இயேசுவே

## 72

மனிதா மனிதா நிம்மதி இல்லையா
நிம்மதி தரும் இயேசு உன்னை
அழைக்கின்றார் வா வா

1. பணத்தைக் கொஞ்சம் சேர்த்துவிட்டால்
அது நிம்மதி தருமா
ஓடி ஓடி பணத்தைச் சேர்த்தாலும்
நிம்மதி இல்லையே நிம்மதி இல்லையே - மனிதா

2. உலகத்தைக் கொஞ்சம் சுற்றி வந்தால்
அது நிம்மதி தருமா
வானத்தின் கீழே பூமிக்கு மேலே
எல்லாம் மாயையே எல்லாம் மாயையே - மனிதா

3. நிம்மதி கிடைக்கும் இடத்தை நாங்க
உனக்குச் சொல்லட்டுமா
இயேசு இயேசு என்றுச் சொன்னாலே
நிம்மதி கிடைக்குமே நிம்மதி கிடைக்குமே - மனிதா

**73**

மாயை மாயை எல்லாம் மாயை (2)
வானத்தின் கீழே பூமிக்கு மேலே எல்லாம் மாயை- இந்த

1. அன்பு இல்லா உலகத்தில் வாழ்கின்ற மனிதனே
அன்பை தேடியே அங்கும் இங்கும் ஓடாதே (2)
இயேசு என்ற தெய்வத்தின் அன்பு ஒன்றே போதுமே (2) - மாயை
2. பொன்பொருள் சுகங்களெல்லாம் ஒருநாள் அழிந்துவிடும்
பொல்லாத உலகத்தின் செல்வமெல்லாம் அழிந்துவிடும்(2)
சொந்தங்கள் பந்தங்கள் எல்லாம் ஒரு நாள் மாறிவிடும்
பாசங்களும் நேசங்கள் எல்லாம் ஒரு நாள் மாறிவிடும் - மாயை
3. நம்பினோர் எல்லோரும் ஒரு நாள் கைவிடுவார்
நம்பிக்கை நாயகன் இயேசு உன்னை கைவிடமாட்டார் (2)
கல்வாரி நாயகன் இயேசுவிடம் வந்துவிடு
காலமில்லை, நேரமில்லை அன்புக்குள் வந்துவிடு - மாயை
4. வாலிப உள்ளமே சீக்கிரம் மனந்திரும்பு
வாலிப நாட்களில் இயேசுவிடம் வந்துவிடு (2)
ராஜாதி ராஜா இயேசு சீக்கிரம் வருகிறார்
ராஜாவை சந்திக்க நீயும் ஆயத்தப்படு - மாயை

**74**

நிலையில்லாத உலகத்திலே வாழும் மனிதனே
உன்மேல் அன்பு வைத்த தெய்வத்தை
மறந்து எங்கே போகிறாய்
நீ எங்கே போகிறாய்

1. கோடி கோடியாய் நீ பணத்தை சேர்த்தாலும்
அதை கொண்டு செல்ல முடியாதே (2)
அந்த பணம் உன்னை ஏமாற்றும்
2. உலகத்தின் அன்புக்காய் நீ அலைந்து திரிகின்றாயா
அந்த அன்பு உன்னை ஏமாற்றும்
அந்த அன்பு உன்னை ஏமாற்றும்
3. மனம் போன போக்கிலே போகின்ற மனிதனே
கொஞ்சம் திரும்பு மனம் திரும்பு (2)
வழி ஒன்றே ஒன்று தான்
வழி இயேசு இயேசு தான்

## 75

உனக்கொருவர் இருக்கிறார் உன்னை விசாரிக்க துடிக்கிறார்
உன்னையும் என்னையும் இயேசு நேசிக்கிறார்
நம்மை உள்ளங்கையில் வரைந்திருக்கிறார் - உனக்கொரு

1. ஜாதி ஜனம் மறந்திட்டாலும் மறந்திடாதவர்
ஜோதிகளின் பிதாவாம் இயேசுவானவர் - (2)
சூழ்நிலைகள் மாறினாலும் இயேசு உன்னை மறப்பதில்லை
சிலுவையில் ஜீவன்விடும் நேரத்திலும் வெறுக்கவில்லை - உனக்கொரு

2. ஆகாதவன் என்று உன்னை யார் தள்ளினாலும்
ஆபிரகாமின் தேவன் உன்னை தள்ளிடுவாரோ - (2)
தஞ்சம் என்று வருபவரை தள்ளாத நேசரவர் - (2)
அஞ்சிடாதே மகனே மகளே என்று உன்னை தேற்றிடவே - உனக்கொரு

3. வியாதியஸ்தன் என்று உன்னை ஒதுக்கி வைப்பார்கள்
வேண்டாத வார்த்தைகளை சொல்லி புண்படுத்துவார்கள்-(2)
வாழ்வதா சாவதா என்று நீ அழுது புலம்பிடுவாய் - (2)
வாழத்தான் வேண்டும் என்று வியாதியிலே சுகம் தரவே - உனக்கொரு

4. கஷ்டப்படும்போது நமக்கு உதவுவாரில்லை
கடன்பட்டபோது அது தீர்ப்பாரில்லை
இஷ்டப்பட்ட தெய்வங்களெல்லாம் கும்பிட்டு பாத்தாச்சு
நம்ம கஷ்டங்களை தீர்க்க அவை முன்வரவில்லை
உலகத்தில் தெய்வங்கள் உண்டென்று சொல்வதெல்லாம் சும்மாங்க
இயேசு கிறிஸ்து ஒருவரே மெய்யான தெய்வமுங்க
ஜனங்களின் பாவம் போக்கி இரட்சிக்க வந்த தெய்வமுங்க - உனக்கொரு

## 76

என்னை நேசிக்கின்றாயா?
என்னை நேசிக்கின்றாயா?
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பாயா?

1. வானம் பூமி படைத்திருந்தும்
வாடினேன் உன்னை இழந்ததினால்
தேடி மீட்டிட பிதா அனுப்பியதால்
ஓடி வந்தேன் மானிடனாய்

2. பாவம் பாரா பரிசுத்தர் நான்
பாவி உன்னை அழைக்கின்றேன் பார்
உன் பாவம் யாவும் சுமப்பேன் நான்
பாதம் தன்னில் இளைப்பாற வா

3. பாவத்தின் அகோரத்தைப் பார்
பாதகத்தின் முடிவினைப் பார்
பரிகாசச் சின்னமாய் சிலுவையிலே
பலியானேன் பாவி உனக்காய்

4. உம்மை நேசிக்கின்றேன் நான்
உம்மை நேசிக்கின்றேன் நான்
கல்வாரிக் காட்சியைக் கண்ட பின்னும்
நேசியாமல் இருப்பேனா?

## 77

கற்க கசடறக் கற்றவை கற்றபின்
நிற்க அதற்கு தக
என வள்ளுவர் சொல்வதுபோல்
நாம் வேதத்தைக் கற்றுக்கொள்ளுவோம்
நாம் அதன்வழி நின்றிடுவோம்
நம்பி வா நீ நம்பி வா
இயேசுவை நீ நம்பி வா

1. வருத்தப்பட்டு பாரங்கள் சுமக்கும் மகனே
நீ வந்திடு இயேசுவிடம் - உன்
பாரங்கள் போக்கிடுவார் - உன்
வருத்தங்கள் நீக்கிடுவார் - நம்பி வா

2. வழியை கர்த்தருக்கு ஒப்புவித்து நீ
அவர் மேல் நம்பிக்கை கொண்டிரு - உன் (2)
அவர் உன் காரியத்தை வாய்க்க செய்திடுவார்
அவர் உன் கஷ்டங்களை களிப்பாய் மாற்றிடுவார் - நம்பி வா

3. கர்த்தருக்கு பயந்து தீமையை விட்டு விலகி ஓடிவிடு
நல்ல ஞானம் தந்திடுவார் புது ஜீவன் கொடுத்திடுவார்
நல்ல அறிவு தந்திடுவார் ஜீவ வழியை காட்டிடுவார் - நம்பி வா

4. உன் பாவத்தை மன்னிக்கும் ஒரே தெய்வம் உண்டு
அவர் தான் இயேசுகிறிஸ்து (2)
உன் சாபத்தை நீக்கிடுவார் - சமாதானம் நல்கிடுவார்
சத்தியம் தெரிந்துகொள்ளுவாய் நீ நித்தியம் அடைந்திடுவாய் - நம்பி வா

5. நிச்சயமாகவே முடிவு உண்டு உன்
நம்பிக்கை வீண்போகாது (2)
நம்பி வந்திடு நீ நல் நன்மையை கண்டிடுவாய்
நாதன் இயேசுவிடம் நலமுடன் வாழ்ந்திடுவாய் - நம்பி வா நீ - நம்பி வா

## 78

மாயை லோகத்தில் வாழும் மனிதனே
இயேசுவை மாத்திரம் தேடு - அவர்
அன்பு, இரக்கம், தயவு, சாந்தம் - என்ற
கிருபை வரங்களை நீ நாடு

1. உலகை நோக்கி ஓடாதே
உலக இன்பத்தில் மயங்காதே
ஆஸ்தியைத் தேடி அலையாதே
ஆண்டவர் இயேசுவை மறவாதே - மாயை

2. செய்த பாவத்தை மறைக்காதே
தேவ மன்னிப்பை இழக்காதே
ஞானஸ்நானத்தை வெறுக்காதே
பரிசுத்த ஆவியை மறவாதே - மாயை

3. இரத்தத்தால் மீட்கப்பட்டவனே

ஆவியின் வரத்தைப் பெற்றவனே
திருவிருந்தில் பங்கு உள்ளவனே
நீதிமான் என்பதை மறவாதே - மாயை

4. பெண்ணை நாடி ஓடாதே
பெருமையோடு தினம் வாழாதே
பெருமிதம் கொண்டு இருக்காதே
பெரியவர் இயேசுவை பிரியாதே - மாயை

## 79

இயேசு கூட வருவார்
எல்லாவித அற்புதம் செய்வார்

1. நோய்கள் பேய்கள் ஓட்டிடுவார்
நொந்துபோன உள்ளத்தை தேற்றிடுவார் - இயேசு

2. வேதனை துன்பம் நீக்கிடுவார்
சமாதானம் சந்தோஷம் எனக்குத் தருவார் - இயேசு

3. கடன் தொல்லை கஷ்டங்கள் நீக்கிடுவார்
கண்ணீர்கள் அனைத்தையும் துடைத்திடுவார் - இயேசு

4. எடுத்த காரியத்தில் வெற்றி பெறுவேன்
எதிரியான சாத்தானை முறியடிப்பேன் - இயேசு

## 80

கொஞ்சகாலம் தான் இந்த வாழ்க்கை தான்
நெஞ்சமே இதை நினை - (2)

1. எத்தனையோ புகழ் வந்திடலாம்
எவ்வளவோ வசதி பெருகிடலாம் - (2) - நெஞ்சமே

நெஞ்சமே இயேசுவை
தஞ்சமாய் ஏற்றுக்கொள் (2) - கொஞ்சகாலம்

2. தாய் தந்தை அன்பு பிரிந்திடலாம்
தம்பி தங்கை உறவு முறிந்திடலாம் - நெஞ்சமே

3. நம்பினதும் நழுவி போயிடலாம்
வெம்பி வெம்பி மனதில் அழுதிடலாம் - நெஞ்சமே

4. கூடு விட்டு ஆவி போனவுடன்
கூட ஒன்றும் உன்னோடு வருவதில்லை - நெஞ்சமே

5. வாழும் வாழ்க்கை ஒரு வாடகைதான்
நேரம் வந்தால் வாழ்க்கை முடிந்திடும்தான் - நெஞ்சமே

## 81

இயேசப்பா உங்க நாமத்தில்
இன்றும் அற்புதங்கள் நடக்குது (2)
பேய்கள் ஓடுது நோய்கள் தீருது
பாவங்கள் பறந்தோடுது
உந்தன் வல்லமைகள் குறைந்து போகவில்லை

உந்தன் உயிர்த்தெழுதல் மகிமை மாறவில்லை

1. துன்பங்கள் தொல்லைகள் வியாதிகள் வறுமைகள்
வந்தாலும் எம் இயேசு குணமாக்குவார்
விசுவாசம் நமக்குள் இருந்தால் போதும்
தேவ மகிமையைக் கண்டிடுவோம் - இயேசப்பா

2. மந்திர சூனியம் செய்வினை கட்டுக்கள்
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார்
ஆவியானவர் நமக்குள் இருப்பதால்
உலகத்தை நாம் கலக்கிடுவோம் - இயேசப்பா

3. சாத்தானின் சதிகளா? சாபத்தின் வாழ்க்கையா?
இன்றே நம் இயேசு உடைத்தெறிவார்
துதியின் ஆயுதம் நமக்குள் இருப்பதால்
அசுத்த ஆவிகளை துரத்திடுவோம் - இயேசப்பா

## 82

உலக மாயையிலே உழலுதே நண்பா
உலகம் ஒரு நாள் கைவிடும்போது
நீ எங்கே நண்பா என் நண்பா
நீ எங்கே நண்பா - உலக மாயையிலே

1. பொன் பொருள் எல்லாம் உன்னை ஒருநாள்
கைவிடுமே நண்பா (2)
சாவை வென்ற சத்திய இயேசு கைவிடார்
நண்பா என் நண்பா கைவிடார் நண்பா - உலக மாயையிலே

2. உறவுகள் எல்லாம் உன்னை ஒருநாள்
கைவிடுமே நண்பா
உத்தமரான சத்திய இயேசு கைவிடார் நண்பா
என் நண்பா கைவிடார் நண்பா - உலக மாயையிலே

3. அழகு மாயை, இளமை மாயை
அறிவாயோ நண்பா (2)
அன்பான இயேசு அழைக்கிறாரே
வந்திடுவாய் நண்பா என் நண்பா (2) - உலக மாயையிலே

## 83

இயேசு என்னும் பெயரை சொன்னால்
எல்லாம் நடக்கும்
இனியவரை பாடிப் பணிந்தால்
இன்பம் பிறக்கும்

1. அலைந்து நான் ஆழ்க்கடலில் அமிழ்ந்தபோது (2)
அன்பு கரம் நீட்டி என்னை தூக்கி எடுத்தீர் (2) - இயேசு என்னும்

2. மாயை என்னும் மயக்கத்தினால் மயங்கும் போது
மகிமையின் தேவன் என்னை மலரச் செய்தீர் - இயேசு என்னும்

3. அசுத்தம் என் வாழ்வில் இருந்தபோது
பரிசுத்தம் தந்து என்னை அபிஷேகித்தீர் - இயேசு என்னும்

**84**

இயேசு கிறிஸ்துவின் அன்பு
என்றும் மாறாதது
இயேசுகிறிஸ்துவின் மாறா கிருபை
என்றும் குறையாதது

1. பாவி என்றுன்னை இயேசு தள்ளவே மாட்டார்
ஆவலாய் உன்னை இயேசு அழைக்கின்றாரே (2)
தயங்கிடாதே தாவி ஓடிவா
தந்தை இயேசுவின் சொந்தம் கொள்ள வா (2)

2. உன் மீறுதல்கட்காய் இயேசு காயங்கள் பட்டார்
உன் அக்கிரமங்கட்காய் அவர் நொறுக்கப்பட்டார் (2)
உனக்காகவே அடிகள் பட்டார்
உன்னை உயர்த்த தன்னைத் தாழ்த்தினார் (2)

**85**

உம்மால் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை (3)
எல்லாமே உம்மால் ஆகும் அல்லேலூயா
எல்லாமே உம்மால் ஆகும்
ஆகும் எல்லாம் ஆகும்
உம்மாலேதானே எல்லாம் ஆகும்

1. சொல்லி முடியாத அற்புதம்
செய்பவர் நீரே, ஐயா நீரே
எண்ணி முடியாத அதிசயம்
செய்பவர் நீரே, ஐயா நீரே
அப்பா உமக்கு ஸ்தோத்திரம்
அன்பே உமக்கு ஸ்தோத்திரம்

2. எனக்கு குறித்ததை நிறைவேற்றி
முடிப்பவர் நீரே, ஐயா நீரே
எனக்காக யாவற்றையும் செய்து
முடிப்பவர் நீரே, ஐயா நீரே
அப்பா உமக்கு ஸ்தோத்திரம்
அன்பே உமக்கு ஸ்தோத்திரம்

3. வறண்ட நிலத்தை நீரூற்றாய்
மாற்றுபவர் நீரே, ஐயா நீரே
அவாந்திரவெளியை தண்ணீராய்
மாற்றுபவர் நீரே, ஐயா நீரே
அப்பா உமக்கு ஸ்தோத்திரம்
அன்பே உமக்கு ஸ்தோத்திரம்

**86**

மனமே நீ வருத்தம் கொள்ளாதே

வீணாக நீ கலக்கம் கொள்ளாதே
நம் இயேசுவின் அன்பு உண்டு - அது
உனக்கு என்றும் உண்டு

1. நினைத்த காரியம் வாய்த்திடாமல்
வாடிப்போனாயோ
பாரங்கள் மலைபோல் குவிந்ததாலே
பயந்து போனாயோ
நம் இயேசுவின் கரங்களே அதனை
இனி செய்து முடித்திடுமே (2)
டீ! ஆல டுடிசன! ஞசயளைந கூந டுடிசன

2. நோய்களினாலே பெலனிழந்து மனம்
நொடிந்து போனாயோ
மரணந்தான் இனி முடிவென்று சொல்லி
மௌனம் ஆனாயோ
நம் இயேசுவின் தழும்புகளாலே
சுகமடையா நோய்களில்லை (2)
டீ! ஆல டுடிசன! ஞசயளைந கூந டுடிசன

3. சோதனை மேலே சோதனை வந்து
சோர்ந்து போனாயோ
விடுதலை பெறவே வழி தெரியாமல்
துவண்டு போனாயோ
நம் இரட்சகர் இயேசுவினாலே
விடுதலை உனக்கென்றுமுண்டு (2)
டீ! ஆல டுடிசன! ஞசயளைந கூந டுடிசன

## 87

ஆராதனை ஆராதனை துதி
ஆராதனை ஆராதனை
காலையிலும் மாலையிலும்
ஆராதனை அப்பாவுக்கே

1. தூய ஆவியே உமக்கு ஆராதனை
துணையாளரே உமக்கு ஆராதனை
வான பிதாவே உமக்கு ஆராதனை
வழிகாட்டியே உமக்கு ஆராதனை - ஆராதனை

2. ஜீவ பலியே உமக்கு ஆராதனை
ஜீவ தண்ணீரே உமக்கு ஆராதனை
மேக ஸ்தம்பமே உமக்கு ஆராதனை
மேசியாவே உமக்கு ஆராதனை - ஆராதனை

## 88

சிங்காசனத்தில் வீற்றிருக்கும்
பரிசுத்தரே பரிசுத்தரே
ஆராதனை உமக்கு ஆராதனை (4)

1. கேருபீன்கள் சேராபீன்கள்
போற்றிடும் எங்கள் பரிசுத்தரே (2) - ஆராதனை
2. ஏழு குத்து விளக்கின் மத்தியிலே
உலாவிடும் எங்கள் பரிசுத்தரே (2) - ஆராதனை
3. ஆதியும் அந்தமும் ஆனவரே
அல்பாவும் ஓமேகாவும் ஆனவரே (2) - ஆராதனை
4. இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை
கரங்களில் உடையவரே (2) - ஆராதனை
5. அக்கினி ஜுவாலை போன்ற கண்களையும்
வெண்கல பாதங்களை உடையவரே (2) - ஆராதனை
6. பரிசுத்தமும் சத்தியமும் - தாவீதின்
திறவுகோலை உடையவரே (2) - ஆராதனை

**89**

அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா ராஜனுக்கே (2)
தேவாதி தேவன் ராஜாதி ராஜன்
என்றென்றும் நடத்திடுவார்

ஆராதனை ஆராதனை (2)
அல்லேலூயா அல்லேலூயா
ஆராதனை உமக்கே ..... ஆ..... ஆ

1. துணையாளரே துணையாளரே
துன்பத்தில் தாங்கும் மணவாளரே
கண்ணீரை நீக்கி
காயங்கள் ஆற்றி
கனிவோடு நடத்திடுவார் - ஆராதனை
2. வெண் மேகமே வெண் மேகமே
வெளிச்சம் தாரும் இந்நேரமே
அபிஷேகம் ஊற்றி
மறுரூபமாக்கி
ஆற்றலைத் தந்திடுவார் - ஆராதனை

**90**

அதிசயங்கள் செய்கிறவர் என்றும்
நமக்குள் இருக்கிறார்
அற்புதங்கள் செய்கிறவர் என்றும்
நமக்குள் வசிக்கிறார்

1. தண்ணீரை இரத்தமாய் மாற்றினார் அதிசயம் - எகிப்து
வெறும் தண்ணீரை திராட்சை ரசமாய் மாற்றினார் அதிசயம்
2. செங்கடலை இரண்டாக பிளந்திட்டார் அதிசயம்
புயல் காற்றை தம் வார்த்தையாலே அடக்கினார் அதிசயம்
3. குருடருக்கும் செவிடருக்கும் சுகம் தந்தார் அதிசயம்
ஒரு சொல்லாலே மரித்தோரை எழுப்பினார் அதிசயம்

4. பாவியான என்னையும் உயர்த்தினார் அதிசயம்
ஏழை என்மீது நேசகரம் நீட்டினார் அதிசயம்

**91**

அள்ள அள்ள குறையாத அன்பு
ருசிக்க ருசிக்க தெவிட்டாத அன்பு
சொல்ல சொல்ல முடியாத அன்பு - என்
இயேசுவின் இணையில்லாத அன்பு

1. பெயரைச் சொல்லி அழைத்த அன்பு - என்னை
உயர்த்தி வைத்த உன்னத அன்பு - என்னை
கவர்ந்து கொண்ட இயேசுவின் அன்பு - அள்ள
2. என்னையும் அபிஷேகித்த அன்பு - என்னை
அதிசயமாய் நடத்திவந்த அன்பு - என்னை
கவர்ந்து கொண்ட இயேசுவின் அன்பு - அள்ள
3. என்னையும் நினைத்த அன்பு - என்னை
கைவிடாமல் நடத்திய அன்பு - என்னை
கவர்ந்து கொண்ட இயேசுவின் அன்பு - அள்ள
4. பாவங்களை மன்னித்த அன்பு - என்னை
பரிசுத்தமாய் மாற்றிய அன்பு - என்னை
கவர்ந்து கொண்ட இயேசுவின் அன்பு - அள்ள
5. ஊழியத்தை கொடுத்த அன்பு - என்னை
ஊழியனாய் மாற்றிய அன்பு - என்னை
கவர்ந்து கொண்ட இயேசுவின் அன்பு - அள்ள

**92**

இயேசப்பா எந்நாளும் எனக்குத்தான்
அவர் அன்பை அள்ளி தந்ததினால் சந்தோஷந்தான்
குதூகலம் கொண்டாட்டமே
என் வாழ்க்கையில் இல்லை திண்டாட்டமே

1. இயேசப்பா என்னை தேடி வந்தார் (2)
சுகம் தந்தார் அன்பைப் பொழிந்தார் (2)
என் வாழ்விலே அவரே வழி (2)
என் வாழ்விலே அவரே ஒளி (2) - இயேசப்பா
2. இயேசப்பா என்னைத் தேடி வந்தார்
பெலன் தந்தார் வல்லமை பொழிந்தார்
என் வாழ்விலே அவரே ஜீவன்
என் வாழ்விலே அவரே மீட்பர் - இயேசப்பா
3. இயேசப்பா என்னைத் தேடி வருவார்
அபிஷேகம் தருவார் ஆவியைப் பொழிவார்
என் வாழ்விலே அவரே சொந்தம்
என் வாழ்விலே அவரே சத்யம் - இயேசப்பா

## 93

தேவனே, நான் உமதண்டையில் இன்னும் நெருங்கிச்
சேர்வதே என் ஆவல் பூமியில்
மா வலிய கோரமாக வன் சிலுவை மீதினில் நான்
கோவே! தொங்க நேரிடினும் ஆவலாய்
உம்மண்டை சேர்வேன் - தேவனே

1. யாக்கோபைப் போல் போகும் பாதையில் - பொழுதுபட்டு
இராவில் இருள் வந்து மூடிட
தூக்கத்தால் நான் கல்லில் சாய்ந்து, தூங்கினாலும் என் கனாவில்
நோக்கியும்மைக்கிட்டிச் சேர்வேன், வாக்கடங்கா நல்லநாதா - தேவனே

2. பரத்திற்கேறும் படிகள் போலவே - என் பாதை தோன்றப்
பண்ணும் ஐயா என்றன் தேவனே
கிருபையாக நீர் எனக்கு தருவதெல்லாம் உமதண்டை
அருமையாய் என்னை அழைத்து அன்பின் தூதனாகச் செய்யும் - தேவனே

## 94

கர்த்தாவே நீர் மாட்சிமை நிறைந்தவரே
துதி மகிமைக்கெல்லாம் என்றென்றும் பாத்திரரே
உந்தன் நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்
உந்தன் நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்
ஆராதனை ஆராதனை

1. மகத்துவமும் பேர் புகழும் உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் மேன்மைப்படுத்த உம்மால் ஆகுமே
ஆராதனை ஆராதனை
உந்தன் நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்

2. ஐசுவரியமும் ஆனந்தமும் உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் உயர்த்திடவே உம்மால் ஆகுமே
ஆராதனை ஆராதனை
உந்தன் நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்

3. சத்தியமும் ஜீவனுமே உம் கரத்திலிருக்கின்றதே
எந்த மனிதனையும் விடுவித்திட உம்மால் ஆகுமே
ஆராதனை ஆராதனை
உந்தன் நாமம் உயர்த்தி பாடி ஆராதிப்பேன்

## 95

உம்மை அப்பானு கூப்பிடத்தான் ஆசை
உம்மை அப்பானு கூப்பிடவா
உம்மை அம்மானு கூப்பிடத்தான் ஆசை
உம்மை அம்மானு கூப்பிடவா
அப்பானு கூப்பிடுவேன் - உம்மை
அம்மானு கூப்பிடுவேன்

1. கருவில் என்னை காத்தத பார்த்தா
அம்மானு சொல்லணும்

தோளில் என்னை சுமந்ததப் பார்த்தா
அப்பானு சொல்லணும்
என்னை கெஞ்சுவதும் கொஞ்சுவதும் பார்த்தா
உம்மை அம்மானு சொல்லணும்
என்னை ஆற்றுவதும் தேற்றுவதும் பார்த்தா
உம்மை அப்பானு சொல்லணும்

2. கண்ணீரை துடைச்சதைப் பார்த்தா
அம்மானு சொல்லணும்
விண்ணப்பத்தைக் கேட்டதப் பார்த்தா
அப்பானு சொல்லணும்
என்னை ஏந்துவதும் தாங்குவதும் பார்த்தா
உம்மை அம்மானு சொல்லணும்
உங்க இரக்கத்தை உருக்கத்தை பார்த்தா
உம்மை அப்பானு சொல்லணும்

3. உம்நேசத்தையும் பாசத்தையும் பார்த்தா
அம்மானு சொல்லணும்
உம் பாரத்தையும் தாகத்தையும் பார்த்தா
அப்பானு சொல்லணும்
உம் பரிவையும் தயவையும் பார்த்தா
அம்மானு சொல்லணும்
உம் காருண்யமும் கிருபையும் பார்த்தா
அப்பானு சொல்லணும்

## 96

உம் நாமம் சொல்லச் சொல்ல
என் நெஞ்சம் மகிழுதையா
என் வாழ்வில் மெல்ல மெல்ல
உம் இன்பம் பெருகுதையா - உம்

1. மாணிக்கத் தேரோடு காணிக்கை வந்தாலும்
உமக்கது ஈடாகுமோ?
உலகமே வந்தாலும், உறவுகள் நின்றாலும்
உமக்கது ஈடாகுமோ? ஏசையா - உம்

2. தேனென்பேன், பாலென்பேன் தெவிட்டாத சுவைஎன்பேன்
உம் நாமம் என்ன என்பேன்
மறை என்பேன் நிறையென்பேன்நீங்காத நினைவென்பேன்
உம் நாமம் என்னவென்பேன்! ஏசையா - உம்

3. ஊரெல்லாம் உலகெல்லாம் உயிர்கொண்ட பேரெல்லாம்
உம் நாமம் சொல்லாதோ?
பாரெல்லாம் வாழ்கின்ற படைப்புகள் எல்லாமே
உம் நாமம் புகழாதோ? ஏசையா - உம்

## 97

தூயாதி தூயவரே உமது புகழை நான் பாடுவேன்

பாரில் எனக்கு வேறென்ன வேண்டும்
உயிருள்ளவரை நின்புகழ் பாடவேண்டும்

1. சீடரின் கால்களைக் கழுவினவர்
செந்நீரால் என்னுள்ளம் கழுவிடுமே - பாரில்

2. பாரோரின் நோய்களை நீக்கினவர்
பாவி என் பாவ நோய் நீக்கினீரே - பாரில்

3. துயரங்கள் பாரினில் அடைந்தவரே
துன்பங்கள் தாங்கிட பெலன் தாருமே - பாரில்

4. பரலோகில் இடமுண்டு என்றவரே
பரிவாக எனைச் சேர்க்க வேகம் வாருமே - பாரில்

## 98

கவலைபடாதே மகனே கவலைபடாதே
கவலைபடாதே மகளே கவலைபடாதே (2)

1. உன்னை என்றும் விசாரிக்கும் பரமபிதா
உன் அருகே இருக்கிறார் கலங்காதே (2)
உன்னையும் நேசிக்கும் தகப்பனவர்
உன் குறை எல்லாம் நீக்கிடுவார் (2) - கவலைபடாதே

2. காக்கைளை போசிக்கும் தேவனவர்
அனுதினமும் நடத்துவார் கலங்காதே (2)
பூக்களை உடுத்திடும் ராஜனவர்
கண்மணிப்போல் உன்னை காத்திடுவார்(2) -கவலைபடாதே

3. துயரமெல்லாம் புரிந்திடும் தெய்வமவர்
உன் பாரம் சிலுவையில் சுமந்தாரே (2)
கவலைகள் அவரிடம் சொல்லிவிடு
கண்ணீர்கள் யாவையும் துடைத்திடுவார் (2) -கவலைபடாதே

## 99

ஆராதனை நாயகன் நீரே
ஆராதனை வேந்தனும் நீரே
ஆயுள் முடியும் வரை
உம்மை தொழுதிடுவேன்

1. ஆயிரம் பேர்களில் சிறந்தவர்
ஆண்டவர் இயேசு நீரே
விடிவெள்ளியே எந்தன் பிரியம் நீரே
என்றென்றும் தொழுதிடுவேன் - ஆராதனை

2. மாந்தர்கள் போற்றிடும் தெய்வம்
மகிமையின் தேவன் நீரே
முழங்கால்கள் யாவுமே முடங்கிடுமே
மகிழ்வுடன் துதித்திடுவேன் - ஆராதனை

3. முடிவில்லா ராஜ்யம் அருள
திரும்பவும் வருவேன் என்றீர்
ஆயத்தமாய் நான் சென்றிடவே

அநுதினம் வணங்கிடுவேன் - ஆராதனை

**100**

என் இயேசுவின் சந்நிதியில்
என்றும் கீதங்கள் பாடிடுவேன்
என்னைக் காத்திடுமே அவர் நாமமதே
துதி கீதங்கள் பாடிடுவேன்

1. கண்ணீர் அவர் துடைத்திடுவார்
தம் கரங்களால் தாங்கிடுவார்
எந்தன் கல்வாரி நாயகன் இயேசுவாலே
எல்லாப் பாவங்கள் அகன்றிடுமே - என்

2. பரமன் குரல் கேட்கும் போது
பரமானந்தம் அடைந்திடுவேன்
எந்தன் அவசியங்கள் அவர் கிருபையாலே
அதிசீக்கிரம் கிடைத்திடுமே - என்

**101**

நல்ல சமாரியனே எங்கள்
நல்ல சமாரியனே
அனாதையாக இருந்த என்னை
தேடி வந்த என் தெய்வமே

1. உலகம் மறந்தாலும்
நீர் என்னை மறக்கவில்லை
கேட்பாரற்று கிடந்த என்னை
உயர்த்தி வைத்த என் தெய்வமே - நல்ல

2. பாவத்தில் இருந்த என்னை
பரிசுத்த மாக்கினீரே
பாவங்கள் யாவையும் மன்னித்து மறந்து
புதிய மனிதனாய் மாற்றினீரே - நல்ல

3. கண்ணீரின் பாதையிலும்
கஷ்டத்தின் நேரத்திலும்
கண்ணீரைத் துடைத்து காயங்கள் ஆற்றி
வாழவைத்த என் தெய்வமே - நல்ல

**102**

அல்லேலூயா அல்லேலூயா (2)
அல்லேலூயா அல்லேலூயா (2)

1. யெகோவா ஷாலோம் அல்லேலூயா
யெகோவா நிஸியே அல்லேலூயா
யெகோவா யீரே அல்லேலூயா
பரிசுத்த பிதாவே அல்லேலூயா - அல்லே

2. சாரோனின் ரோஜாவே அல்லேலூயா

லீலி புஷ்பமே அல்லேலூயா
அழகில் சிறந்தவரே அல்லேலூயா
இயேசு கிறிஸ்துவே அல்லேலூயா -அல்லே
3. தேற்றரவாளனே அல்லேலூயா
பெலத்தின் ஆவியே அல்லேலூயா
சத்திய ஆவியே அல்லேலூயா
பரிசுத்த ஆவியே அல்லேலூயா - அல்லே

## 103

துதிக்குப் பாத்திரர் தூயவரே
துதித்துப் பாடிட உயர்த்திடுவோம் (2)
1. சேனை அதிபன் தடைகள் முறித்து
தொடர்ந்து பாதையில் செல்கிறார் (2)
எரிகோ மதிலை வீழ்த்துவோம்
அவரின் பெலத்தால் வெல்லுவோம் - துதிக்கு
2. வல்ல மீட்பர் இயேசு தானே - இவரே
நம்மில் ஜீவிக்கிறார்
நமக்கெதிராய் எழும்பிடும் அந்த
ஆயுதம் வாய்க்காதே (2) - துதிக்கு
3. பெரிய காரியம் செய்திடுவார்
நம்பும் தேவன் பெரியவரே (2)
கால் மிதிக்கும் தேசம் தருவார்
கண்ணின் மணிபோல் காத்திடுவார் (2 - துதிக்கு

## 104

நீ போகும் இடமெல்லாம் உன்னோடு வருவேன்
கலங்காதே திகையாதே
1. தண்ணீரைக் கடந்திடும் போதும்
அக்கினியில் நடந்திடும் போதும்
மூழ்காமல் வீழ்காமல் இருந்திட நீயும்
விலகாமல் என்றும் நடத்துவேன் நானும்
நீ என் தாசன் நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் - நீ
2. தாகத்தால் நாவறண்ட போதும்
தாக்குதலால் கால் தளர்ந்த போதும்
கன்மலையின் தண்ணீரைப் பருகிட நீயும்
கைப்பிடித்து உன்னை நடத்துவேன் நானும்
நீ என் தாசன் நான் உன்னைத் தெரிந்துகொண்டேன் - நீ

## 105

அன்பே! அன்பே! அன்பே!
ஆருயிர் உறவே
ஆனந்தம், ஆனந்தமே!

1. ஒரு நாள் உம் தயை கண்டேனையா
அந்நாளென்னை வெறுத்தேனையா
உம் தயை பெரிதையா - என் மேல்
உம் தயை பெரிதையா - அன்பே

2. அலைந்தேன் பல நாள் உமையுமறியா
மறந்தே திரிந்த துரோகியை
அணைத்தீர் அன்பாலே - எனையும்
அணைத்தீர் அன்பாலே - அன்பே

3. பூலோகத்தின் பொருளின் மகிமை
அழியும் புல்லின் பூவைப் போல்
வாடாதே ஐயா - அன்பு
வாடாதே ஐயா - அன்பே

## 106

1. போற்றித் துதிப்போம் எம் தேவ தேவனே
புதிய இதயமுடனே (2)
நேற்றும் இன்றும் என்றும் மாறா
இயேசுவை நாம் என்றும் பாடித் துதிப்போம் (2)

இயேசு என்னும் நாமமே
என் ஆத்துமாவின் கீதமே
என் நேசர் இயேசுவை நான் என்றும்
ஏற்றி மகிழ்ந்திடுவேன் (2)

2. கோர பயங்கரமான புயலில்
கொடிய அலையின் மத்தியில் (2)
காக்கும் கரம் கொண்டு மார்பில் சேர்த்தணைத்த
அன்பை என்றும் பாடுவேன் (2) - இயேசு

3. யோர்தான் நதி போன்ற சோதனையிலும்
சோர்ந்தமிழ்ந்து மாளாதே
ஆர்க்கும் ஜெய தொனியோடே பாதுகாத்த
அன்பை என்றும் பாடுவேன் (2) - இயேசு

4. தாய்தன் பாலகனையே மறப்பினும்
நான் மறவேன் என்று சொன்னதால் (2)
தாழ்த்தி என்னை யவர் கையில் தந்து
ஜீவ பாதை என்றும் ஓடுவேன் (2) - இயேசு

5. பூமி அகிலமும் சாட்சியாகவே
போங்களென்ற கட்டளையதால் (2)
ஆவி ஆத்துமாவும் தேகம் யாவும் இன்று
தந்து தொண்டு செய்குவேன் (2) - இயேசு

## 107

வெட்கப்பட்டுப் போவதில்லை
என் மகனே நீ வெட்கப்பட்டுப் போவதில்லை
வெட்கப்பட்டுப் போவதில்லை
என் மகளே நீ வெட்கப்பட்டுப் போவதில்லை

1. நஷ்டங்கள் வந்தாலும்
இழப்புகள் நேர்ந்தாலும்
நிந்தைகள் சூழ்ந்தாலும்
இழந்ததைத் திரும்பவும் தருவேன் நான் (2) - வெட்கப்

2. குடும்பமே இகழ்ந்தாலும்
உறவுகள் பழித்தாலும்
உலகமே எதிர்த்தாலும்
உன்னோடு என்றுமே இருப்பேன் நான் (2) - வெட்கப்

3. என் ஜனம் ஒருபோதும்
வெட்கப்பட்டு போவதில்லை
வெட்கத்திற்கு பதிலாக
இரட்டிப்பான நன்மைகளை தருவேன் நான் (2) - வெட்கப்

## 108

உன்னை வாலாக்காமல்
இயேசு தலையாக்குவார்
உன்னை கீழாக்காமல்
இயேசு மேலாக்குவார் - ஜெயம் ஜெயம் அல்லேலூயா (4)

1. இஸ்ரவேலே நீ பயப்படாதே
கரம் பிடித்து உன்னை நடத்தி செல்வார் - உன்னை

2. செங்கடலும் யோர்தானும்
உன்னைக் கண்டு விலகி ஓடுமே - உன்னை

3. சிறியவனை குப்பையிலிருந்து
உயர்த்துகிறீர் அப்பா உயர்த்துகிறீர் - உன்னை

4. ஒன்றுமில்லாத என்னை அழைத்தீரே
பயன்படுத்தும் இன்னும் பயன்படுத்தும் - உன்னை

5. பாலும் தேனும் ஓடுகின்ற
தேசத்தைப் போல் உன்னை மாற்றிடுவார் - உன்னை

## 109

1. உம்மையே நான் நேசிப்பேன்
நான் பின் திரும்பேனே - (3)
உம் சந்நிதியில் முழங்காலில் நின்று
உம் பாதையில் நான் நடந்திட்டால்
இன்னல் துன்பமே வந்தாலும்
நான் பின் திரும்பேனே

2. உம்மையே நான் சேவிப்பேன்
நான் பின் திரும்பேனே (3) - உம் சந்நிதி

3. உம்மையே நான் போற்றுவேன்
நான் பின் திரும்பேனே (3) - உம் சந்நிதி

4. உம்மையே நான் ஆராதிப்பேன்
நான் பின் திரும்பேனே (3) - உம் சந்நிதி

## 110

1. துதித்துப் பாடிட பாத்திரமே
துங்கவன் இயேசுவின் நாமமதே
துதிகளின் மத்தியில் வாசம் செய்யும்
தூயனை நேயமாய் ஸ்தோத்தரிப்போமே
ஆ! அற்புதமே அவர் நடத்துதலே
ஆனந்தமே பரமானந்தமே
நன்றியால் உள்ளமே மிகப் பொங்கிடுதே
நாம் அல்லேலூயா துதி சாற்றிடுவோம்

2. கடந்த நாட்களில் கண்மணிபோல்
கருத்துடன் நம்மை காத்தாரே
கர்த்தரையே நம்பி ஜீவித்திட
கிருபையும் ஈந்ததால் ஸ்தோத்தரிப்போமே - ஆ

3. அக்கினி ஊடாய் நடந்தாலும்
ஆழியில் தண்ணீரைக் கடந்தாலும்
சோதனையோ மிக பெருகினாலும்
ஜெயம் நமக்கீந்ததால் ஸ்தோத்தரிப்போமே - ஆ

4. இந்த வனாந்திர யாத்திரையில்
இன்பராம் இயேசு நம்மோடிருப்பார்
போகையிலும் நம் வருகையிலும்
புகலிடம் ஆனதால் ஸ்தோத்தரிப்போமே - ஆ

5. வாஞ்சைகள் தீர்த்திட வந்திடுவார்
வாரும் என்றே நாம் அழைத்திடுவோம்
வானத்திலே ஒன்றுசேர்ந்திடும் நாள்
விரைந்து நெருங்கிட ஸ்தோத்தரிப்போமே - ஆ

## 111

நம்பிக்கைக்கு உரியவரே
நம்பிவந்தேன் உம் சமூகம்
நம்புகிறேன் உம் வசனம்

1. சொந்த ஆற்றலை நம்பவில்லை
தந்தை உம்மையே சார்ந்துவிட்டேன்
வாக்குத்தத்தம் செய்தவரே
வாழ்க்கையெல்லாம் உம் வார்த்தைதானே
பாதைக்கு தீபம் பேதைக்கு வெளிச்சம்
உந்தன் வசனமே;
ஆற்றல் மிக்கது, ஜீவனுள்ளது
உந்தன் அருள்வாக்கு

2. உம்மை நம்புகின்ற மனிதர்களை
உமது அன்பு என்றும் சூழ்ந்து கொள்ளும்
உள்ள மெல்லாம் மகிழுதையா
உம் வசனம் நம்புவதால்

3. தீமை அனைத்தையும் விட்டுவிலகி

உமக்கு அஞ்சி நான் நடந்து கொண்டால்
எலும்புகள் உரம் பெறும்
என் உடலும் நலம்பெறும்

4. புயலின் நடுவிலே பக்தன் பவுல்
வார்த்தை வந்ததால் திடன் கொண்டார்
கைதியாக கப்பல் ஏறி
கேப்டனாக செயல்பட்டார்

5. உமது வார்த்தைகள் கைக்கொண்டு
உமக்கு உகந்தவற்றை செய்து வந்தால்
கேட்பதெல்லாம் பெற்றுக் கொள்வேன்
ஊற்று நீராய் பொங்கிடுவேன்

## 112

என் தேவன் என் பெலனே
அவர் கூறும் நல் வசனம்
என் பாதையின் வெளிச்சம்
அவர் நாமம் என் நினைவே

1. தீங்கு நாளில் என்னை அவர்
தம் கூடார மறைவினில் காத்திடுவார்
தகுந்த வேளை தம் கரத்தால்
கன்மலை மேலாய் உயர்த்திடுவார் - என்

2. கர்த்தரிடம் ஒன்றைக் கேட்டேன்
அதையே அவரிடம் நாடிடுவேன்
அவரின் முகமதை நான் காண
அவரில் என்றும் நிலைத்திருப்பேன் - என்

3. கர்த்தருக்காய் காத்திருப்பாய்
அவரால் இதயம் ஸ்திரப்படுமே - உன்
திடமனதோடு காத்திருந்தே
அடைக்கலம் புகுவாய் என்றென்றுமே - என்

## 113

என் பெலனாகிய கர்த்தாவே
நான் உம்மையே நம்பியுள்ளேன்
நான் கைவிட படுவதில்லை

1. என் கால்கள் சறுக்கும் போதெல்லாம்
தாங்குதய்யா உம் கிருபை
நான் அழுது புலம்பும் நேரமெல்லாம்
அணைக்குதய்யா உம் கரமே - என்

2. நான் போகும் பாதையெல்லாமே
செல்லுதய்யா உம் கிருபை (சமூகம்)
கோணலான வழிகளெல்லாம்
செவ்வையாக மாறுதய்யா - என்

3. உம்மாலே ஒரு சேனைக்குள்ளே

பாய்ந்து நானும் சென்றிடுவேன்
உம்மாலே ஒரு மதிலையுமே
தாண்டி நானும் சென்றிடுவேன் - தினமும் - என்

## 114

கர்த்தரை நம்பியே ஜீவிப்போம்
கவலை கஷ்டங்கள் தீர்ந்திடும்
கைவிடா காத்திடும் பரமனின்
கரங்களை நாம் பற்றிக் கொள்வோம்

1. ஜீவ தேவன் பின் செல்லுவோம்
ஜீவ ஒளிதனை கண்டடைவோம்
மனதின் காரிருள் நீங்கிடவே
மா சமாதானம் தங்கும் - கர்த்தரை

2. உண்மை வழி நடந்திடும்
உத்தமனுக்கென்றும் கர்த்தர் துணை
கண்கள் அவன் மீது வைத்திடுவார்
கருத்தாய் காத்திடுவார் - கர்த்தரை

3. உள்ளமதின் பாரங்களை
ஊக்கமாய் கர்த்தரிடம் சொல்லுவோம்
இக்கட்டு நேரத்தில் கூப்பிடுவோம்
இயேசு வந்தாதரிப்பார் - கர்த்தரை

4. அன்பு மிகும் அண்ணலிவர்
அருமை இயேசுவை நெருங்குவோம்
தம்மண்டை வந்தோரை தள்ளிடாரே
தாங்கி அணைத்திடுவார் - கர்த்தரை

5. நீதிமானின் சிரசின் மேல்
நித்திய ஆசிர் வந்திறங்குமே
கிருபை, நன்மைகள் தொடருமே
கேட்பது கிடைக்குமே - கர்த்தரை

## 115

அழகானவர் அருமையானவர் இனிமையானவர் (2)
மகிமையானவர் மீட்பரானவர் (2)
அவர் இயேசு இயேசு இயேசு (2)

1. சேனைகளின் கர்த்தர் நம் மகிமையின் ராஜா
என்றும் நம்மோடிருக்கும் இம்மானுவேலன் (2)
இம்மட்டும் இனிமேலும் எந்தன் நேசர் (2)
என்னுடையவர் என் ஆத்தும நேசரே - அழகானவர்

2. கன்மலையும் கோட்டையும் துணையுமானார்
ஆற்றித் தேற்றி காத்திடும் தாயுமானவர் (2)
என்றென்றும் நடத்திடும் எந்தன் இராஜா (2)
என்னுடையவர் என் நேச கர்த்தரே - அழகானவர்

3. கல்வாரி மேட்டிலே கொல்கதாவிலே

நேச ரத்தம் சிந்தியே என்னை மீட்டார் (2)
பாசத்தின் எல்லைதான் இயேசு ராஜா (2)
என்னுடையவர் என் அன்பு இரட்சகர் - அழகானவர்

## 116

ஆவியானவரே அன்பின் ஆவியானவரே
இப்போ வாரும் இறங்கி வாரும்
எங்கள் மத்தியிலே

1. உளையான சேற்றினின்று தூக்கி எடுத்தவரே
பாவம் கழுவி தூய்மையாக்கும் இந்த வேளையிலே
2. பத்மு தீவினிலே பக்தனை தேற்றினீரே
என்னையும் தேற்றி ஆற்றவாரும் இந்த வேளையிலே
3. சீனாய் மலையினிலே இறங்கி வந்தவரே
ஆத்ம தாகம் தீர்க்க வாரும் இந்த வேளையிலே
4. நேசரின் மார்பினிலே இனிதாய் சாய்ந்திடவே
ஏக்கமுற்றேன் விரும்பி வந்தேன் உந்தன் பாதத்திலே
5. ஆவியின் வரங்களினால் என்னையும் நிரப்பிடுமே
எழுந்து ஜொலிக்க எண்ணெய் ஊற்றும் இந்த வேளையிலே

## 117

உம்மை உயர்த்தி உயர்த்தி
உள்ளம் மகிழுதையா
உம்மை நோக்கிப் பார்த்து
இதயம் துள்ளுதையா

1. கரம்பிடித்து நடத்துகிறீர்
காலமெல்லாம் சுமக்கின்றீர்
நன்றி நன்றி (4) - உம்மை
2. கண்ணீரெல்லாம் துடைக்கின்றீர்
காயமெல்லாம் ஆற்றுகிறீர் - உம்மை
3. நல்லவரே வல்லவரே
காண்பவரே காப்பவரே - உம்மை

## 118

ஆராதனைக் குரியவரே உம்மை உயர்த்தி ஆராதிப்பேன்
பரிசுத்தர் நீர் பரிசுத்தர்
பரிசுத்தர் நீர் பரிசுத்தர்

1. என்னை நேசிப்பவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை உங்களுக்குத்தான் (2) - பரி
2. என்னை மன்னித்தவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை உங்களுக்குத்தான் (2) - பரி
3. என்னை ஆட்கொண்டவர் நீர் அல்லவோ
என்னுடைய ஆராதனை உங்களுக்குத்தான் (2) - பரி

## 119

கர்த்தாவே தேவர்களில் உமக்கொப்பானவர் யார்
வானத்திலும் பூமியிலும் உமக்கொப்பானவர் யார்
உமக்கொப்பானவர் யார் (2)
வானத்திலும் பூமியிலும் உமக்கொப்பானவர் யார்

1. செங்கடலை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களை நடத்திச்சென்றீர்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
என்றும் வாக்கு மாறாதவர் - உமக்

2. தூதர்கள் உண்ணும் உணவால்
உந்தன் ஜனங்களைப் போஷித்தீரே
உம்மைப்போல் யாருண்டு
இந்த ஜனங்களை நேசித்திட - உமக்

3. கன்மலையை நீர் பிளந்து
உந்தன் ஜனங்களை தாகம் தீர்த்தீர்
உம் நாமம் அதிசயம்
இன்றும் அற்புதம் செய்திடுவீர் - உமக்

## 120

ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே
எங்கள் வாழ்க்கை எல்லாம் செழிப்பாகுமே
ஒரு வார்த்தை சொல்லும் கர்த்தாவே (2)
உம் வார்த்தையிலே சுகம்
உம் வார்த்தையிலே மதுரம்
உம் வார்த்தையிலே எல்லாம் சந்தோஷம் (2)

1. மாராவின் தண்ணீரெல்லாம்
மதுரமாக மாறிப்போகுமே
கண்ணீர் மாறிடும், துக்கம் மாறிடும் (2)
ஒரு வார்த்தை சொன்னால் போதுமே-நீர் - ஒரு வார்த்தை

2. இருளான வாழ்க்கை எல்லாம்
ஒளியாக மாறிப்போகுமே (2)
கண்ணீர் மாறிடும், துக்கம் மாறிடும் (2)
ஒரு வார்த்தை சொன்னால் போதுமே-நீர் - ஒரு வார்த்தை

3. எரிகோவின் தடைகள் எல்லாம்
துதிகளாலே மாறிப்போகுமே (2)
கண்ணீர் மாறிடும், துக்கம் மாறிடும் (2)
ஒரு வார்த்தை சொன்னால் போதுமே - நீர் - ஒரு வார்த்தை

4. வியாதிகள் வறுமையெல்லாம்
விசுவாசத்தால் மாறிப் போகுமே (2)
கண்ணீர் மாறிடும் துக்கம் மாறிடும் (2)
ஒரு வார்த்தை சொன்னால் போதுமே - நீர் - ஒரு வார்த்தை

## 121

எனக்காகவே யாவையும் செய்து முடித்தீர்
நன்றி நன்றி ஐயா
என் பாவங்கள் யாவையும் சுமந்து கொண்டீரே
நன்றி நன்றி ஐயா

1. நான் எனது பிள்ளைக்கு
நல்ல ஈவைக் கொடுக்கின்றேன்
பரமபிதா அதை பார்க்கிலும் கொடுத்திடுவாரே
நினைப்பதற்கும் ஜெபிப்பதற்கும்
அதிகமாக தருபவரே

2. அன்றாடம் வேண்டிய ஆகாரம் தாருமே
தீமை என்னை அணுகாமல் காக்கும் - தேவனே

3. ஆபிரகாமை அழைத்தீரே ஆசீர்வாதம் கொடுத்தீரே
அதுபோல் என்னையும் ஆசீர்வதியும்

## 122

ஏறுகின்றார் தள்ளாடி தவழ்ந்து களைப்போடே
என் ஏசு குருசை சுமந்தே
என் நேசர் கொல்கதா மலையின்மேல் நடந்தே ஏறுகின்றார்

1. கன்னத்தில் அவன் ஓங்கி அறைய
சின்னப்பிள்ளை போல் ஏங்கி நின்றார்
அந்தப் பிலாத்தும் கையைக் கழுவி
ஆண்டவரை அனுப்புகிறான் - ஏறு

2. மிஞ்சும் பெலத்தால் ஈட்டி எடுத்தே
நெஞ்சை பிளந்தான் ஆ! கொடுமை
இரத்தமும் நீரும் ஓடி வருதே
இரட்சகரை நோக்கியே பார் - ஏறு

3. இந்தப் பாடுகள் உந்தன் வாழ்வுக்காய்
சொந்தப் படுத்தி ஏற்றுக் கொண்டார்
நேசிக்கின்றாயோ இயேசு நாதரை
நேசித்து வா குருசெடுத்தே - ஏறு

4. சேவல் கூவிடும் மூன்று வேளையும்
சொந்த குருவை மறுதலித்தான்
ஓடி ஒளியும் பேதுருவையும்
தேடி அன்பாய் நோக்குகின்றார் - ஏறு

5. பின்னே நடந்த அன்பின் சீஷன்போல்
பின்பற்றி வா சிலுவை வரை
காடியைப்போல் கசந்திருக்கும்
கஷ்டங்களை அவரிடம் சொல் - ஏறு

6. செட்டைகளின் கீழ் சேர்த்தணைத்திடும்
சொந்த தாயின் அன்பதுவே
எருசலமே! எருசலமே
என்றழுதார் கண்கலங்க - ஏறு

## 123

நன்றிப்பலிபீடம் கட்டுவோம்
நல்ல தெய்வம் நன்மைசெய்தார்
செய்த நன்மை ஆயிரங்கள்
சொல்லிச் சொல்லி பாடுவேன்
நன்றி தகப்பனே நன்மை செய்தீரே

1. ஜீவன் தந்து நீர் அன்புகூர்ந்தீர்
பாவம் நீங்கிட கழுவி விட்டீர்
உமக்கென்று வாழ பிரித்தெடுத்து
உமது ஊழியம் செய்ய வைத்தீர் - நன்றி

2. சிறந்த முறையிலே குரல் எழுப்பும்
சிலுவை இரத்தம் நீர் சிந்தினீரே
இரத்தக் கோட்டைக்குள் வைத்துக் கொண்டு
எதிரி நுழையாமல் காத்துக்கொண்டீர் - நன்றி

3. இருளின் அதிகாரம் அகற்றி விட்டீர்
இயேசு அரசுக்குள் சேர்த்து விட்டீர்
உமக்கு சொந்தமாய் வாங்கிக் கொண்டு
உரிமைச் சொத்தாக வைத்துக் கொண்டீர் - நன்றி

4. இருக்க நல்லதொரு வீடு தந்தீர்
வாழத் தேவையான வசதி தந்தீர்
கடுமையாக தினம் உழைக்க வைத்தீர்
கடனே இல்லாமல் வாழ வைத்தீர் - நன்றி

## 124

1. நீரே என் தஞ்சம்
நீரே என் கோட்டை
நீரே என் இரட்சகர்
நீரே ராஜா (2)

நான் உம்மை தேடுவேன் நாள் முழுவதும்
நான் உம்மை சேவிப்பேன் வாழ்நாள் எல்லாம்
எனது எல்லாவற்றிலும்
நான் உம்மை நேசிப்பேன் இயேசுவே (2)

2. இயேசுவே ராஜா
இயேசுவே தேவன்
இயேசுவே மீட்பர் இயேசுவே (2)

நான் உம்மை தேடுவேன் நாள் முழுவதும்
நான் உம்மை சேவிப்பேன் வாழ்நாள் எல்லாம்
எனது எல்லாவற்றிலும்
நான் உம்மை நேசிப்பேன் இயேசுவே (2)

## 125

உம்மை மறவேன் நான் (2)
என் இயேசையா உம்மை மறவேன் நான்
என் தாழ்வினில் என்னை நினைத்தீரே

1. ஆபத்து காலத்தில்
அரணான கோட்டையும்
கன்மலையும் மீட்பரும்
நீர் தானைய்யா (3)

2. என் வாழ்வில் நீர் செய்த
எண்ணில்லா நன்மைகள்
ஆயிரம் பதினாயிரம்
அதற்கு மேலய்யா (3)

## 126

உம்மோடு செலவிடும் ஒவ்வொரு
நிமிடமும் வீணாக போகாதய்யா
என்னை பெலவானாய் மாற்றுதய்யா
ஓ! தேவ பிரசன்னம்!
ஆ! என்ன ஆனந்தம்
ஆகாயம் கொண்டு செல்லுதே (2)

1. வானத்திலே தூதரெல்லாம்
பரிசுத்தரே என்று பணிகிறார்களே
பூமியிலே மண்ணான நான்
நின் நாமம் வாழ்கவென்று
தொழுகின்றேன் ஐயா - ஓ! தேவ

2. தாயானவள் தன் பாலனை
மறந்தாலும் என்னை மறவாதவரே
தகப்பனை போல் இரக்கமுள்ள
பரிசுத்தரே உம்மை துதிக்கிறேன் ஐயா - ஓ! தேவ

3. என் இயேசுவே உம் ஆவியால்
ஒரு விசையாய் என்னை நிரப்பிடுமய்யா
உலகத்திலே உமக்காக நான்
உயிருள்ள நாள் வரையில்
உழைக்கணும் ஐயா - ஓ! தேவ

## 127

1. யெகோவாயீரே தந்தையாம் தெய்வம்
நீர் மாத்ரம் போதும் எனக்கு
யெகோவா ரஃபா சுகம் தரும் தெய்வம்
உம் தழும்புகளால் சுகமானோம்
யெகோவா ஷம்மா என் கூட இருப்பீர்
என் தேவை எல்லாம் சந்திப்பீர்ள
நீர் மாத்ரம் போதும் (3) எனக்கு

2. யெகோவா ஏலோகிம் சிருஷ்டிப்பின் தேவனே

உம் வார்த்தையால் உருவாக்கினீர்
யெகோவா பரிசுத்தர் உன்னதர் நீரே
உம்மைப்போல் வேறு தேவனில்லை
யெகோவா ஷாலோம் உம் சமாதானம்
தந்தீர் என் உள்ளத்தினில் - நீர் மாத்ரம்

3. இயேசுவே நீரே என் ஆத்ம நேசர்
என்மேல் எவ்வளவன்பு கூர்ந்தீர்
என்னையே மீட்க உம்மையேத் தந்தீர்
உம் அன்பிற்கு இணையில்லையே!
என் வாழ்நாள் முழுவதும் உமக்காக வாழ்வேன்
நீரே என்றென்றும் போதும் - நீர் மாத்ரம்

## 128

ஆதாரம் நீர்தான் ஐயா (2)
காலங்கள் மாற கவலைகள் தீர
காரணன் நீர் தானையா - இயேசையா

1. உலகத்தில் என்னென்ன ஜெயங்கள்
கண்டேன் நான் இன்னாள் வரை
ஆனாலும் ஏனோ நிம்மதி இல்லை
குழப்பம் தான் நிறைகின்றது - என் நிலை மாற - ஆதாரம்

2. குடும்பத்தில் குழப்பங்கள் இல்லை
பணக்கஷ்டம் ஒன்றுமே இல்லை
ஆனாலும் ஏனோ நிம்மதி இல்லை
அமைதி தான் கலைகின்றது - ஆதாரம்

3. உந்தனின் சாட்சியாய் வாழ
உள்ளத்தில் வெகுநாளாய் ஆசை
உம்மிடம் வந்தேன் உள்ளத்தை தந்தேன்
சாட்சியாய் வாழ்ந்திடுவேன் - இயேசையா -ஆதாரம்

## 129

ஆகாதது எதுவுமில்ல உம்மால்
ஆகாதது எதுவுமில்ல
அகிலம் அனைத்தையும்
உண்டாக்கி ஆளுகின்றீர்

1. துதி செய்யத் தொடங்கியதும் எதிரிகள் தங்களுக்குள்
வெட்டுண்டு மடியச் செய்தீர்
உம்மால் ஆகும், எல்லாம் ஆகும்

2. அலங்கார வாசலிலே அலங்கோல முடவனன்று
நடந்தானே இயேசு நாமத்தில் - உம்

3. கோலும் கையுமாக பிழைக்கச் சென்றார் யாக்கோபு
பெருகச் செய்தீர் பெருங்கூட்டமாய் - உம்

4. கண்ணீரைக் கண்டதாலே கல்லறைக்கு சென்றவனை
கரம் பிடித்துத் தூக்கி விட்டீர் - உம்

5. ஈசாக்கு ஜெபித்தாலே ரெபேக்காள் கருவுற்று
இரட்டையர்கள் பெற்றெடுத்தாளே - உம்

**130**

மான்கள் நீரோடை வாஞ்சித்து
கதறும் போல் தேவனே
எந்தன் ஆத்துமா உம்மையே
வாஞ்சித்து கதறுதே
தஞ்சமே நீர் அடைக்கலம் நீர்
கோட்டையும் நீர் என்றும் காப்பீர்

1. தேவன் மேல் ஆத்துமாவே
தாகமாயிருக்கிறதே
தேவனின் சந்நிதியில் நின்றிட
ஆத்துமா வாஞ்சிக்குதே - மான்

2. ஆத்துமா கலங்குவதேன்
நேசரை நினைத்திடுவாய்
அன்பரின் இரட்சிப்பினால் தினமும்
துதித்துப் போற்றிடுவோம் - மான்

3. யோர்தான் தேசத்திலும்
எர்மோன் மலைகளிலும்
சிறுமலைகளிலிருந்தும் உம்மை
தினமும் நினைக்கின்றேன் - மான்

**131**

கிருபையால் நிலை நிற்கின்றோம் - உம்
கிருபையால் நிலை நிற்கின்றோம் (2)
கிருபை கிருபை கிருபை கிருபை (2)

1. பெயர்சொல்லி அழைத்தது உங்க கிருபை
பெரியவனாக்கியதும் உங்க கிருபை - கிருபை

2. நீதிமானாய் மாற்றியது உங்க கிருபை
நித்தியத்தில் சேர்ப்பதும் உங்க கிருபை - கிருபை

3. கட்டுகளை நீக்கியது உங்க கிருபை
காயங்களை கட்டியதும் உங்க கிருபை - கிருபை

4. வல்லமையை அளித்தது உங்க கிருபை
எனக்கு வரங்களை கொடுத்ததும் உங்க கிருபை - கிருபை

**132**

ஆர்ப்பரிப்போம் ஆர்ப்பரிப்போம்
அலங்கம் இடியும்வரை ஆர்ப்பரிப்போம்
எக்காளம் ஊதி எரிகோவை பிடிப்போம்
ஆரவார தொனியோடு கானானுக்குள் நுழைவோம்
இது எழுப்புதலின் நேரமல்லோ

நம் யோசுவாவின் காலமல்லோ -ஆர்ப்பரிப்

1. துதிக்கும் நமக்கோ தோல்வியில்ல
வெற்றி நிச்சயமே
பெலன் கொண்டு திடமனதாய் இருப்போமே
இந்த பாரதத்தை சுற்றி சுற்றி சுதந்தரிப்போமே (2) - எழுப்புதலின்

2. கர்த்தர் நாமம் சொல்ல சொல்ல
தடைகள் விலகிடுமே
மாராவின் தண்ணீர்கள் மதுரமாகுமே
யோர்தானின் தடைகளெல்லாம் விலகியோடுமே (2) - எழுப்புதலின்

3. மாம்சத்தோடும் இரத்தத் தோடும்
நமக்கு யுத்தமில்ல
(சர்வ) நல்லவரின் ஆயுதத்தை ஏந்திவிடுவோமே
சாத்தானின் ராஜ்ஜியத்தை அழித்திடுவோமே (2) - எழுப்புதலின்

## 133

என்ள தலையெல்லாம் தண்ணீராகணும்
என் கண்களெல்லாம் கண்ணீராகணும் (2)
நான் கதறி துதித்திட
கண்ணீரோடு ஜெபித்திட (2) - என்

1. கழுதை கூட தன் எஜமானனை அறியும்
என் தேசத்தின் ஜனங்கள் உம்மை மறந்தார்களே (2)
இதோ அழியும் என் ஜனங்களுக்காய்
தினம் அழுது ஜெபிக்கணுமே (2) - என்

2. தேடி சென்றேன் ஒருவனை தேசமெங்கும்
திறப்பில் நிற்க ஒருவனை காணேன் என்றீர் (2)
இதோ அடியேன் நான் இருக்கின்றேன்
ஜெப ஆவியை ஊற்றிடுமே - என்

3. தேசமெல்லாம் ரத்த வெள்ளம் கண்டு
என் தேசத்தின் ஜனங்கள் சிறையானார்கள் (2)
ஐயோ அழகான என் தேசமே
நீ அலங்கோலமானது ஏன் - என்

## 134

நான் நேசிக்கும் தேவன் இயேசு இன்றும் ஜீவிக்கிறார்
அவர் நேற்றும் இன்றும் நாளை என்றும் மாறாதவர்(2)
நான் பாடி மகிழ்ந்திடுவேன்
என் இயேசுவைத் துதித்திடுவேன் (2)
என் ஜீவிய காலமெல்லாம்
அவர் பாதத்தில் அமர்ந்திருப்பேன் (2)

1. கடலாம் துன்பத்தில் தவிக்கும் வேளையில்
படகாய் வந்திடுவார் (2)
இருள்தனிலே பகலவனாய்
இயேசுவே ஒளி தருவார் (2) - நான் பாடி

2. பாவ நோயாலே வாடும் நேரத்தில்
மருத்துவராகிடுவார் (2)
மயங்கி விழும் பசிதனிலே
மன்னா வைத் தந்திடுவார் (2) - நான் பாடி

3. தூற்றும் மாந்தரின் நடுவில் எந்தனை
தேற்றிட வந்திடுவார் (2)
கால் தளர ஊன்றுகோலாய்
காத்திட வந்திடுவார் (2) - நான் பாடி

4. நேசர் என்னோடு துணையாய் ஜீவிக்க
நான் இனி கலங்கிடேனே (2)
எந்தனுக்கே கால் அவர்
நான் உடல் அவர் உயிரே (2) - நான் பாடி

## 135

ஆனந்த தைலத்தால் அபிஷேகம் செய்திடும்
ஆவியானவரே - என்னை
ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

1. வனாந்திரங்கள் வயல் வெளியாகட்டும்
ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

2. உலர்ந்த எலும்புகள் உயிரோடு எழும்பட்டும்
ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

3. வாலிபரெல்லாம் தரிசனம் காணட்டும்
ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

4. பெலவீனரெல்லாம் பெலவானாகட்டும்
ஆவியானவரே அன்பின் ஆவியானவரே

## 136

யெகோவா தேவனுக்கு ஆயிரம் நாமங்கள்
எதை சொல்லிப் பாடிடுவேன்
கர்த்தாதி கர்த்தர் செய்த நன்மைகள் ஆயிரம்
கரம் தட்டி பாடிடுவேன் (2)
யெகோவா ஷாலோம்
யெகோவா ஷம்மா
யெகோவா ரூபா
யெகோவா ராப்பா

1. எல்ரோயிக்கு அல்லேலூயா
என்னை நீரே கண்டீரைய்யா
ஏக்கமெல்லாம் தீர்த்தீரையா - நான்
தாகத்தோடு வந்தபோது ஜீவதண்ணீர் எனக்கு தந்து
தாகமெல்லாம் தீர்த்தீரைய்யா - யெகோவா

2. எல்ஷாடாயும் நீங்கதாங்க
சர்வவல்ல தேவனாக
என்னை என்றும் நடத்தினீங்க

எபிநேசரும் நீங்கதாங்க
உதவி செய்யும் தேவனாக
என்னை என்றும் தாங்கினீங்க - யெகோவா

3. ஏலோஹிமும் நீங்க தாங்க
எங்கும் உள்ள தேவனாக
எந்தநாளும் பாடுவேங்க
இம்மானுவேல் நீங்கதாங்க
மண்ணில் வந்த தேவன் நீங்க
இன்றும் என்றும் பாடுவேங்க - யெகோவா

## 137

கன்மலை மீது கால்கள் நிறுத்தினீர்
உன்னதங்களில் உட்கார செய்தீர்
உளையான சேற்றில் உழன்ற என்னையும்
தூக்கினீர் கழுவினீர் காத்து வருகிறீர் - கன்மலை

1. பாவங்களை மன்னித்தீர்
சாபங்களை நீக்கினீர்
சத்துருவின் கையினின்று
விடுதலை அளித்தீர் (2)
தினம் தினம் உம் புகழை நான் பாடுவேன் (2)
இயேசையா இயேசையா உம் புகழ் பாடுவேன் - கன்மலை

2. எல்லையில்லா ஆனந்தம்
எந்தன் வாழ்வில் வந்ததையா
சொல்லொண்ணா பேரின்பம்
என் உள்ளத்தில் பொங்குதையா (2)
ஜீவனுள்ள நாளெல்லாம் உம் புகழ் பாடுவேன் (2)
இயேசையா இயேசையா உம் புகழ் பாடுவேன் - கன்மலை

## 138

இயேசு என் பரிகாரி - இன்ப
இயேசு என் பரிகாரி - என்
ஜீவிய நாட்களெல்லாம் - இன்ப
இராஜா என் பரிகாரி

1. என்ன துன்பங்கள் வந்தாலும்
என்ன வாதைகள் நேர்ந்தாலும்
என்ன கஷ்டங்கள் சூழ்ந்தாலும் - இன்ப
இராஜா என் பரிகாரி - இயேசு

2. சாத்தான் என்னை எதிர்த்தாலும்
சத்துரு என்னை தொடர்ந்தாலும்
சஞ்சலங்கள் வந்த போதும் - இன்ப
இராஜா என் பரிகாரி - இயேசு

3. பணக் கஷ்டங்கள் வந்தாலும்
மனக் கஷ்டங்கள் நேர்ந்தாலும்

ஜனம் என்னை வெறுத்தாலும் - இன்ப
இராஜா என் பரிகாரி - இயேசு

4. எனக்கென்ன குறை உலகில்
என் இராஜா துணை எனக்கு
என் ஜீவிய நாட்களெல்லாம் - இன்ப
இராஜா என் பரிகாரி - இயேசு

**139**

உம்மோடு இருப்பதுதான்
உள்ளத்தின் வாஞ்சையையா
உம் சித்தம் செய்வதுதான்
இதயத்தின் ஏக்கமையா
இயேசையா உம்மைத்தானே
என் முன்னே நிறுத்தியுள்ளேன்

1. எனக்காக யாவையும் செய்பவரே
செய்து முடிப்பவரே
என் பாரங்கள் என் சுமைகள் (2)
உம் பாதத்தில் இறக்கி வைத்தேன் (2)

2. இரக்கமும் உருக்கமும் நீடிய சாந்தமும்
கிருபையும் உள்ளவரே
என் ஜீவனை அழிவில் நின்று
மீட்டவரே என் மேய்ப்பரே

**140**

1. வந்தருளும் தூய ஆவியே
தந்தருளும் தேவ மகிமையே
ஆவியே தூய ஆவியே
ஆவியே தூய ஆவியே

2. அபிஷேகியும் தூய ஆவியே
அனல் மூட்டும் தூயஆவியே (2) - ஆவியே

3. ஆட்கொள்ளும் தூய ஆவியே
அரவணைக்கும் தூய ஆவியே (2) - ஆவியே

4. ஊற்றிடுமே தூய ஆவியே
உணர்த்திடுமே தூய ஆவியே (2) - ஆவியே

**141**

நீரே நிரந்தரம் ..... இயேசுவே என்
வாழ்வில் நீரே நிரந்தரம்
அன்பு தெய்வம் இயேசுவே நீர் நிரந்தரம்
மாறும் உலகில் மாறா உம் உறவே நிரந்தரம்
இம்மை வாழ்வில் மறுமை இருப்பது நிரந்தரம் (2)
நான் மாண்டபின்னும் உம்மில் உயிர்ப்பது நிரந்தரம் (2)

நிரந்தரம் (2) நீரே நிரந்தரம் அன்பு தெய்வம் (1)

1. தாயின் அன்பு சேய்க்கு இங்கே நிரந்தரம்
தாயும் தந்தையும் எனக்கு நீரே நிரந்தரம்
தேயும் வாழ்வில் நம்பிக்கை நீரே நிரந்தரம்
நான் சாயும்போது காப்பவர் நீரே நிரந்தரம் (2) - நிரந்தரம் (2) நீரே நிரந்தரம்

2. செல்வங்கள் கொணரும் இன்பத்தில் இல்லை நிரந்தரம்
பதவியும் புகழும் தருவது இல்லை நிரந்தரம்
நிலை வாழ்வு என்றும் நிஜமான நீரே நிரந்தரம்
அதன் விளைவாக எனை நீர் உம்மில் இணைப்பீர் நிரந்தரம்
- நிரந்தரம் நீரே நிரந்தரம் - அன்பு

## 142

பரலோகமே என் சொந்தமே என்று காண்பேனோ (2)
என் இன்ப இயேசுவை என்று காண்பேனோ - பரலோகமே

1. வருத்தம் பசிதாகம்
மன துயரம் அங்கே இல்லை (2)
விண் கிரீடம் வாஞ்சிப்பேன்
விண்ணவர் பாதம் சேர்வேன் (2) - பரலோகமே

2. சிலுவையில் அறையுண்டேன்
இனி நானல்ல இயேசுவே (2)
அவரின் மகிமையே
எனது இலட்சியமே (2) - பரலோகமே

3. இயேசு என் நம்பிக்கையாம்
இந்த பூமியும் சொந்தமல்ல (2)
பரிசுத்த சிந்தையுடன்
இயேசுவை பின்பற்றுவேன் (2) - பரலோகமே

4. ஓட்டத்தை ஜெயமுடன்
நானும் ஓடிட அருள் செய்வார் (2)
விசுவாச பாதையில்
சோராது ஓடிடுவேன் (2) - பரலோகமே

5. அழைப்பின் சத்தம் கேட்டு
நானும் ஆயத்தமாகிடுவேன் (2)
நாட்களும் நெருங்குதே
வாஞ்சையும் பெருகுதே (2) - பரலோகமே

## 143

இனியும் உம்மோடு கிட்டிச் சேர
ஆவியின் மாரியை ஊற்றும்
ஆதி அன்பின் ஆழங்களில் என்னை
ஆழ்த்தி கிருபைகள் ஈந்திடுமே

1. பெலவீனன் என் அருகில்
பெலன் தாரும் வந்தெனக்காய்
உம்மை போல் நான் கனி தரவே
உம தாவியால் நிறைத்திடுமே

2. நல்ல திராட்சை செடி நீரல்லோ
நானும் இணைந்து வாழ்ந்திடவே
எல்லா நாளும் கனி தந்திட
இயேசுவே சுத்தமாக்கிடுமே

## 144

இயேசு அழைக்கிறார் இயேசு அழைக்கிறார்ஆவலாய்
உன்னை தம்கரங்கள் நீட்டியே இயேசு அழைக்கிறார்

1. எத்துன்ப நேரத்திலும் ஆறுதல் உனக்களிப்பார்
என்றுணர்ந்து நீ இயேசுவை நோக்கினால்
எல்லையில்லா இன்பம் பெற்றிடுவாய் - இயேசு
2. கண்ணீரெல்லாம் துடைப்பார் கண்மணிபோல் காப்பார்
கார்மேகம் போன்ற கஷ்டங்கள் வந்தாலும்
கருத்துடன் உன்னை காத்திடவே - இயேசு
3. சோர்வடையும் நேரத்தில் பெலன் உனக்களிப்பார்
அவர் உன் வெளிச்சம் இரட்சிப்புமானதால்
தாமதமின்றி நீ வந்திடுவாய் - இயேசு
4. சகல வியாதியையும் குணமாக்க வல்லவராம்
யாராயிருந்தாலும் பேதங்கள் இன்றியே
கிருபையாய் அன்பை அளித்திடவே - இயேசு

## 145

இயேசுவின் நாமம் இனிதான நாமம் (2)
இணையில்லா நாமம் இன்ப நாமம்

1. பாவத்தை போக்கும் பயமதை நீக்கும்
பரம சந்தோஷம் பக்தருக்களிக்கும்
2. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வானாதி வானவர் இயேசுவின் நாமம்
3. நேற்றும் இன்றும் என்றும் மாறிடா நாமம்
நம்பினோரை என்றும் கைவிடா நாமம்
4. முழங்கால் யாவும் முடங்கிடும் நாமம்
மூன்றில் ஒன்றாக ஜொலிப்பவர் நாமம்
5. சாத்தானின் சேனையை ஜெயித்திட்ட நாமம்
சாபப் பிசாசை துரத்திடும் நாமம்

## 146

அன்பு ஏசுவின் அன்பு அது அளவிட முடியாதது
நம்பு அதை நீ நம்பு இந்த இகமதில் கிடைக்காதது (2)

1. தாய், தந்தை அன்பொருநாள் அது
தனிந்தே போய்விடும் ஆ ஆ ஆ (2)
தன் பிள்ளையின் அன்பொருநாள்
அது பிரிந்தே போய் விடும் (2)

என்றென்றும் மாறதது என்
ஏசுவின் தூய அன்பு
என் வாழ்வில் தீராதது நம்தேவனின் தூய அன்பு (2) - அன்பு ஏசுவின்

2. கணவரின் அன்பொருநாள் அது
கரைந்தே போய் விடும் ஆ ஆ ஆ (2)
நல்ல மனைவியின் அன்பொருநாள் அது
மறைந்தே போய்விடும் (2)
என்றென்றும் மாறாதது என் ஏசுவின் தூய அன்பு
என் வாழ்வில் தீராதது நம் தேவனின் தூயஅன்பு (2) - அன்பு ஏசுவின்

3. நண்பனின் அன்பொருநாள் அது
நழுவியே போய்விடும் ஆ ஆ ஆ.... (2)
நீ நம்பினோர் அப்பொருநாள் அது
வழுவியே போய்விடும் (2)
என்றென்றும் மாறாதது என் ஏசுவின் தூய அன்பு
என் வாழ்வில் தீராதது நம் தேவனின் தூய அன்பு (2) - அன்பு ஏசுவின் அன்பு

## 147

சோர்ந்து போகாதே - மனமே
சோர்ந்து போகாதே - போராட
சோர்ந்து போகாதே
கண்டுனை அழைத்த தேவன் கைவிடுவாரோ - சோர்ந்து

1. வாக்களித்த தேவனை நீ பாடிக் கொண்டாடு
ஊக்கமான ஆவி உன்னை தாங்க (மன்றாடு) - சோர்ந்து

2. துன்பங்கள் தொல்லைகள் உன்னை சூழ்ந்து கொண்டாலும்
அன்பர்உன்னைதேற்றும் நேரம் ஆனந்தமல்லோ -சோர்ந்து

3. சோதனைகளை சகிப்போர் பாக்கியவானல்லோ
ஜீவகிரீடம் சூடும் நேரம் என்ன பேரின்பம்! - சோர்ந்து

## 148

கூடாதது ஒன்றுமில்லையே (4)
நம் தேவனால் கூடாதது
கூடாதது ஒன்றுமில்லையே (2)

1. ஒரே ஒரு வார்த்தை சொன்னாரே
வேலைக்காரன் சொஸ்தமானானே (2)
சுத்தமாகு என்று சொன்னாரே
குஷ்டரோகி சொஸ்தமானானே (2)
மனுஷரால் கூடாதது இயேசுவால் கூடுமே (2) - கூடாதது

2. கடலின் மேல் நடந்தாரே
கடும் புயல் அதட்டினாரே (2)
பாடையை தொட்டாரே
வாலிபன் பிழைத்தானே (2)
மனுஷரால் கூடாதது இயேசுவால் கூடுமே (2) - கூடாதது

3. நீ விசுவாசித்தாலே

தேவ மகிமை காண்பாயே (2)
பெலப்படுத்தும் கிறிஸ்துவாலே
பெரிய காரியம் செய்வாயே (2)
மனுஷரால் கூடாதது இயேசுவால் கூடுமே (2) - கூடாதது

## 149

தேவாலயம் உன் இதயம்
ஆகாதவை மனதில் உண்டா
மா திவ்ய பரன் திரு சந்நிதியில்
அவை யாவையும் அறிக்கை செய்வாய்

1. அறிந்தும் செய்த பாவக் களங்கம்
கடல் ஆழங்கள் போல மறையும்
உணர்ந்து வெறுப்பாயோ உலகம் - இது
பாழக்கும் மாயபுரியே
2. வருந்தி சுமக்கும் உந்தன் பாரம்
இளைப்பாறுதல் கண்டாலே போகும்
விலையின்றி அடைவாயோ மீட்பை - உன்னை
அழைத்தவர் இன்னாரென்றறிவாய் (இயேசு)

## 150

கலங்காதே நீ கலங்காதே
அன்பான இயேசு உன்னை நடத்திடுவார்

1. கண்ணீர்கள் யாவையும் மாற்றிடுவார்
கவலைகள் யாவையும் நீக்கிடுவார்
2. அற்புதம் உனக்கு செய்திடுவார்
அதிசயமாய் உன்னை நடத்திடுவார்
3. மனிதரின் அன்பு மாறிடும்
மாறாத இயேசு உன்னை நடத்திடுவார்
4. ஒருபோதும் மறவாத ஏசு உண்டு
ஒருநாளும் வெட்கப்பட்டு போவதில்லை
5. சிலுவையின் நிழலில் ஆறுதலே
சிலுவையின் நிழலில் அடைக்கலமே

## 151

நல்லவர் நல்லவர் நல்லவர் இயேசு நல்லவர்
நாங்கள் இங்கே பாடும் எங்கள் இயேசு நல்லவர் (2)
உண்மை தெய்வம் இவர் உலகை இரட்சித்தவர்
நன்மை செய்தே இவர் நாடெங்கும் சுற்றியவர்
நானிலத்தோர்க்கு நன்மைகள் செய்த
நல்லவர் (2) - இயேசு - நல்லவர்

1. அன்பாய் பிறரை நேசிப்பவர்க்கு இயேசு நல்லவர்
ஆதரவில்லா அனாதைகட்கு இயேசு நல்லவர் (2)

திக்கற்றோர்க்கும் விதவைகளுக்கும் இயேசு நல்லவர் (2)
தீய வழியிலிருந்து திரும்பியவர்க்கு இயேசு நல்லவர் (2)
இயேசு நல்லவர் (4) - எங்கள்
இயேசு நல்லவர் (4) - நல்லவர்

2. குருடர்களுக்கு பார்வை கொடுத்த இயேசு நல்லவர்
குஷ்டரோகிகளையும்சொஸ்தமாக்கிடும் இயேசு நல்லவர்(2)
முடவர்களையும் நடந்திடச் செய்த இயேசு நல்லவர் (2)
முட்களின் நடுவே லீலியின் ரோஜா இயேசு நல்லவர் (2)
இயேசு நல்லவர் (4) - எங்கள்
இயேசு நல்லவர் (4) - நல்லவர்

3. பாவத்தைப் போக்கி பயமதை நீக்கிய இயேசு நல்லவர்
பரலோக சந்தோஷம் பக்தருக்களித்த இயேசு நல்லவர் (2)
பரிமள தைலமாய் வாசனை தந்த என் இயேசு நல்லவர் (2)
பாரினில் இவர் போல் தெய்வமும் இல்லை என் இயேசு - நல்லவர் (2)
இயேசு நல்லவர் (4) - எங்கள்
இயேசு நல்லவர் (4) - நல்லவர்

4. இருளில் வாழும் ஜனங்களை மீட்ட இயேசு நல்லவர்
ஈனலோகத்திற்காக சிலுவை சுமந்த இயேசு நல்லவர் (2)
மன்னுயிர் காக்க தன்னுயிர் தந்த இயேசு நல்லவர் (2)
மூன்றாம் நாளில் மரித்துயிர்த்தெழுந்த இயேசு நல்லவர் (2)
இயேசு நல்லவர் (4) - எங்கள்
இயேசு நல்லவர் (4) - நல்லவர்

## 152

ராஜாதிராஜா இயேசு (2)
அகிலத்துக்கும் ஆண்டவர் அவரே
சர்வ சிருஷ்டிக்கும் எஜமானர் நீரே
இயேசு எல்லோருக்கும் ஆண்டவர்
இயேசு எல்லோருக்கும் தெய்வம் அவர்

1. இந்தப் பொல்லாத உலகிலே
பாவத்தில் மடிந்திடும்
எல்லோருக்கும் வாழ்வு தருபவர்
இயேசு புது வாழ்வு தருகிறார்
இயேசு வாழ்வு தருகிறார் (4)

2. உன் சாபங்கள் நீக்குவார்
உன் நோய்கள் குணமாக்குவார்
சுகவாழ்வு உனக்கு தருவார்
இயேசு சுகவாழ்வு தருகிறார்
இயேசு வாழ்வு தருகிறார் (4)

3. உன் கண்ணீரெல்லாம் நீக்குவார்
உன் துக்கமெல்லாம் போக்குவார்
சந்தோஷ வாழ்வு தருவார்
இயேசு சந்தோஷம் தருகிறார்
இயேசு வாழ்வு தருகிறார் (4)

## 153

விடுதலை உண்டு இயேசு நாமத்தில்

1. தோல்விகள் மாறும் இயேசு நாமத்தில்
தோல்விகள் மாறும் ஜெயம் பெறுவான் இயேசு நாமத்தில்
2. பெலவீனம் நீங்கும் இயேசு நாமத்தில்
பெலவீனம் நீங்கும் புதுபெலன் தாங்கும் இயேசு நாமத்தில்
3. வியாதிகள் தீரும் இயேசு நாமத்தில்
வியாதிகள் தீரும் இயேசு நாமத்தில்
இயேசு நாமத்தில்
4. விடுதலை உண்டு இலவசமாய்
விடுதலை உண்டு நிச்சயமாய்
விடுதலை உண்டு இப்போதே உண்டு இயேசு நாமத்தில்

## 154

சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே
பரலோக சந்தோஷமே
சந்தோஷம் சந்தோஷம் சந்தோஷமே
அவர் சமூகத்தில் சந்தோஷமே
இயேசுவின் சமூகத்தில் சந்தோஷமே

1. கர்த்தரின் யுத்தத்தில் நாம் நிற்கும்போது
கலங்கிடத் தேவையில்லை
கைகளை உயர்த்தி ஆராதித்தால்
பெரும் வெற்றியைத் தந்திடுவார் - சந்தோஷம்
2. போராட்டம் பாடுகள் நம் வாழ்வில் வந்தாலும்
சோர்ந்திடவே வேண்டாம்
உலகத்தை ஜெயித்தவர் நம்முடன் இருக்கையில்
ஜெயம் ஜெயம் ஜெயம் நமக்கே - சந்தோஷம்

## 155

ஆராதிக்க உம்மை ஆராதிக்க
இன்று ஆராதிக்க கூடியுள்ளோம்
ஊற்றுமையா நிரப்புமையா
உன்னத பரலோக அபிஷேகத்தால் (2)

1. உன்னதரே உம்மை ஆராதிப்போம்
உயர்ந்தவரே உம்மை ஆராதிப்போம்
வல்லவரே உம்மை ஆராதிப்போம்
வழிகாட்டியே உம்மை ஆராதிப்போம்
2. நம்பிக்கையே உம்மை ஆராதிப்போம்
நங்கூரமே உம்மை ஆராதிப்போம்
புகலிடமே உம்மை ஆராதிப்போம்
புகழ்ச்சி நீரே உம்மை ஆராதிப்போம்

3. அற்புதரே உம்மை ஆராதிப்போம்
அடைக்கலமே உம்மை ஆராதிப்போம்
பரிசுத்தரே உம்மை ஆராதிப்போம்
பரிகாரியே உம்மை ஆராதிப்போம்

## 156

அற்புதர், அற்புதர், அற்புதர், அற்புதர் இயேசு அற்புதர்
அண்டினோர் வாழ்வை இன்பமாய் மாற்றும் இயேசு அற்புதர்
எல்லோரும் பாடுங்கள்
கைத்தாளம் போடுங்கள்
சந்தோஷத்துடனே சங்கீதம் பாடுங்கள் - அற்புதர்

1. என்னென்ன துன்பங்கள் நம்மில்
வந்தபோதும் தீர்த்த இயேசு அற்புதர்
எத்தனை தொல்லைகள் நம்மை
சூழ்ந்த போதும் காத்த இயேசு அற்புதர்
உலகத்தில் இருப்போனிலும் - எங்கள்
இயேசு பெரியவர் அற்புதரே
உண்மையாய் அவரைத் தேடும் யாவருக்கும்
இயேசு அற்புதரே - எல்லோரும்

2. அலைகடல் மேலே நடந்தவர் எங்கள் இயேசு அற்புதர்
அகோர காற்றையும் அமைதிப்படுத்திய இயேசு அற்புதர்
அறைந்தனர் சிலுவையிலே
ஆண்டவர் மரித்தார் அந்நாளினிலே
ஆகிலும் மூன்றாம் நாள் உயிருடன் எழுந்த
இயேசு அற்புதரே - எல்லோரும்

## 157

கரம் பிடித்து உன்னை என்றும் நடத்திடுவார்
கண்மணிப்போல் உன்னை என்றும் காத்திடுவார்
கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்கு உண்டு பயந்திடாதே

1. படுகுழியில் நீ விழுந்தாலும்
பரத்திலிருந்து வந்து உன்னை தூக்கிடுவார்
அக்கினியில் நீ நடந்தாலும்
எதுவும் உன்னை சேதப்படுத்த முடியாதே
கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்கு உண்டு பயந்திடாதே

2. ஆறுகளை நீ கடந்தாலும்
அலைகள் என்றும் உன்மீது புரள்வதில்லை
காரிருளில் நீ நடந்தாலும்
பாதைக்கு வெளிச்சமாக இருப்பாரே
கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்கு உண்டு பயந்திடாதே

3. சுழல் காற்று உன்னை சூழ்ந்தாலும்
அவர் கிருபை உன்னை என்றும் தாங்கிடுமே
சோதனையில் நீ அமிழ்ந்தாலும்
சோர்ந்திடாதே உன்னை அவர் அணைப்பாரே
கலங்கிடாதே திகைத்திடாதே
கர்த்தர் கரம் உனக்கு உண்டு பயந்திடாதே

**158**

இயேசுவே (2)
என் தேவன் நீரல்லோ
என் மேய்ப்பர் நீரல்லோ, இயேசுவே இயேசுவே
என் கண்ணீரெல்லாம் துடைத்திடுவீர்

1. யோபின் வேதனை வந்தாலும்
அக்கினி நம்மை சூழ்ந்தாலும்
தேவன் என்னை கைவிடமாட்டார்
என் கால்கள் தளர்ந்து போனாலும்
என் நண்பர்கள் என்னை வெறுத்தாலும்
என் நேசர் என்னை தாங்கி நடத்துவார் - இயேசு

**159**

1. துதிசெய்ய தொடங்கினால்
கர்த்தர் யுத்தம் செய்யத் தொடங்குவார்
அஸ்திபாரம் அசைந்திடும்
சாத்தான் அஸ்திபாரம் அசைந்திடும்
2. முழங்கியே கெர்ஜிக்கிறார்
கர்த்தர் பராக்கிரமசாலியைப் போல்
சத்துருவின் சேனைகளை - அவர்
முற்றலுமாய் மேற்கொள்ளுவார்
3. தடைகளை நீக்கிடவே - நம்
இயேசு ராஜா முன் செல்கிறார்
வெள்ளம் போன்ற சத்துருவின் - முன்
ஜெயக்கொடி யேற்றிடுவார்
4. ஜெபம் செய்ய தொடங்கினால்
கர்த்தர் கிரியை செய்ய தொடங்குவார்
ஆசீர்வாதம் இறங்கிடும் - இன்றே
ஆசீர்வாதம் இறங்கிடும்
அபிஷேகம் இறங்கிடும் - புது
அபிஷேகம் இறங்கிடும்

**160**

பெத்தலையில் பிறந்தவரைப்
போற்றித்துதி மனமே - இன்னும்

1. சருவத்தையும் படைத்தாண்ட சருவ வல்லவர் - இங்கு
தாழ்மையுள்ள தாய்மடியில் தலைசாய்க்கலானார் - பெத்தலையில்
2. சிங்காசனம் வீற்றிருக்கும் தேவமைந்தனார் - இங்கு
பங்கமுற்ற பசுத்தொட்டிலில் படுத்திருக்கிறார் - பெத்தலையில்
3. முன்னம் அவர் சொன்னபடி முடிப்பதற்காக - இங்கு
மோட்சம் விட்டு தாழ்ச்சியுள்ள முன்னணையிலே - பெத்தலையில்
4. இந்தடைவாய் அன்பு வைத்த எம்பெருமானை - நாம்
எண்ணமுடன் போய்த்துதிக்க ஏகிடுவோமே - பெத்தலையில்

## 161

அடைக்கலமே உமதடிமை நானே
ஆர்ப்பரிப்பேனே அகமகிழ்ந்தே
கர்த்தர் நீர் செய்த நன்மைகளையே
நித்தம் நித்தம் நான் நினைப்பேனே

1. அளவற்ற அன்பினால் அணைப்பவரே
எண்ணற்ற நன்மையால் நிறைப்பவரே
மாசில்லாத நேசரே மகிமைப் பிரதாபா
பாசத்தால் உம்பாதம் பற்றிடுவேனே - ஆ
2. என்னை என்றும் போதித்து நடத்துபவரே
கண்ணை வைத்து ஆலோசனை சொல்லுபவரே
நடக்கும் வழிதனைக் காட்டுபவரே
நம்பி வந்தோரை கிருபை சூழ்ந்து கொள்ளுதே - ஆ
3. கரம் பற்றி நடத்தும் கர்த்தர் நீரல்லோ
கூப்பிட்ட என்னை குணமாக்கினீரல்லோ
குழியில் விழாதபடி காத்துக் கொண்டீரே
அழுகையை களிப்பாக மாற்றி விட்டீரே - ஆ
4. பாவங்களை பாராதென்னைப் பற்றிக் கொண்டீரே
சாபங்களை நீக்கி சுத்த உள்ளம் தந்தீரே
இரட்சண்யத்தின் சந்தோஷத்தை திரும்ப தந்தீரே
உற்சாக ஆவி என்னை தாங்க செய்தீரே - ஆ

## 162

1. தேவ தேவனைத் துதித்திடுவோம்
சபையில் தேவன் எழுந்தருள
ஒருமனதோடு அவர் நாமத்தை
துதிகள் செலுத்தி போற்றிடுவோம்
அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா பரிசுத்தருக்கே
அல்லேலூயா இராஜனுக்கே
2. எங்கள் காலடி வழுவிடாமல்
எங்கள் நடைகளை ஸ்திரப்படுத்தும்
கண்மணி போலக் காத்தருளும்

கிருபையால் நிதம் வழிநடத்தும்
3. சபையில் உம்மை அழைத்திடுவோம்
சகாயம் பெற்று வாழ்ந்திடுவோம்
சாத்தானை என்றும் ஜெயித்திடுவோம்
சாகும் வரையில் உழைத்திடுவோம்

**163**

உயிர்த்தெழுந்தாரே அல்லேலூயா
ஜெயித்தெழுந்தாரே
உயிருடன் எழுந்த மீட்பர் இயேசென்
சொந்தமானாரே

1. கல்லறை திறந்திடவே
கடும் சேவகர் பயந்திடவே
வல்லவர் இயேசு உயிர்த்தெழுந்தாரே
வல்ல பிதாவின் செயலிதுவே - உயிர்

2. மரித்தவர் மத்தியிலே
ஜீவ தேவனைத் தேடுவாரோ?
நீதியின் அதிபதி உயிர்த்தெழுந்தாரே
நித்திய நம்பிக்கை பெருகிடுதே - உயிர்

3. மரணமுன் கூர் எங்கே?
பாதாளமுன் ஜெயமெங்கே?
சாவையும் நோயையும் பேயையும் ஜெயித்தார்
சபையோரே துதி சாற்றிடுவோம் - உயிர்

**164**

உன்னத மானவரின் - உயர்மறைவிலிருக்கிறவன்
சர்வ வல்லவரின் நிழலில் தங்குவான்
இது பரம சிலாக்கியமே
அவர் செட்டையின் கீழ் அடைக்கலம் புகவே தம்
சிறகுகளால் மூடுவார்

1. தேவன் என்அடைக்கலமே என் கோட்டையும்அரணுமவர்
அவர் சத்தியம் பரிசையும் கேடகமாம்
என் நம்பிக்கையும் அவரே - அவர்

2. ஆயிரம் பதினாயிரம் பேர்கள் உன் பக்கம் விழுந்தாலும்
அது ஒரு காலத்தும் உன்னை அணுகிடாதே
உன் தேவன் உன் தாபரமே - அவர்

3. தேவன் உன் அடைக்கலமே - ஒரு பொல்லாப்பும் உன்னைச் சேருமோ
ஒரு வாதையும் உன் கூடாரத்தையே
அணுகாமலே காத்திடுவார் - அவர்

4. உன் வழிகளிலெல்லாம் - உன்னைத் தூதர்கள் காத்திடுவார்
உன் பாதம் கல்லில் இடறாதபடி
தங்கள் கரங்களில் ஏந்திடுவார் - அவர்

5. ஆபத்திலும் அவரை நான் - நோக்கி கூப்பிடும் வேளையிலும்

என்னைத் தப்புவித்தே முற்றும் ரட்சிப்பாரே
என் ஆத்தும நேசரவர் - அவர்

## 165

1. எந்தன் அன்புள்ள ஆண்டவர் ஏசுவே நான்
உந்தன் நாமத்தை போற்றிடுவேன்
உம்மைப்போல் ஒரு தேவனை பூமியில் அறிந்திடேன்
உயிர் தந்த தெய்வமே நீர்

ஆ! ஆனந்தம் ஆனந்தமே!
அல்லும் பகலிலும் பாடிடுவேன்
ஏசுவே எந்தன் ஆருயிரே

2. பெற்ற தாயும் என் தந்தையுமானவரே
மற்றும் எல்லாம் எனக்கு நீரே
வானம் பூமியும் யாவுமே மாறிடினும் நீரே
வாக்கு மாறாதவரே - ஆ

3. உயர் அடைக்கலத்தில் என்னை வைத்தவரே
உந்தன் நாமத்தை நம்பிடுவேன்
உம்மையல்லாதிப் பூமியில் யாரையும் நம்பிடேன்
உயிருள்ள தெய்வமே நீர் - ஆ

4. எந்தன் சிருஷ்டிகரே உம்மை நினைத்திடவே
தந்த வாலிப நாட்களிலே
இந்த மாய உலகத்தை வெறுத்திட அளித்தீரே
பரிசுத்த ஜீவியமே - ஆ

5. பொன் வெள்ளியுமோ பெரும் பேர் புகழோ
பண ஆஸ்தியும் வீண் அல்லவோ
பரலோகத்தின் செல்வமே என் அருள் ஏசுவே
போதும் எனக்கு நீரே - ஆ

## 166

கிருபையிதே தேவ கிருபையிதே
தாங்கி நடத்தியதே
இயேசுவிலே பொன் நேசரிலே
அகமகிழ்ந்தே நாம் ஆனந்திப்போம்

1. ஆருயிர் அன்பராய் எங்களுடனே
ஜீவிய பாதையிலே இயேசுபரன்
அனுதினமும் வழி நடந்தே
அவரது நாமத்தில் காத்தனரே - கிருபையிதே

2. அன்பின் அகலமும் நீளம் உயரமும்
ஆழமும் அறிந்துணர அனுக்கிரகித்தார்
கிறிஸ்துவிலே ஒரு மனையாய்
சிருஷ்டித்தே நிறுத்தினார் அவர் சுதராய் - கிருபையிதே

3. நல்ல போராட்டம் போராடி ஜெயித்தே
நித்திய ஜீவனை நாம் பற்றிடவே

விசுவாசத்தில் நிலைத்திடுவோம்
அசையாது அழைப்பினை காத்துக்கொள்வோம் - கிருபையிதே
4. வார்த்தையினால் அவர் தீர்த்தார் எந்தன்
வியாதியும் வேதனையும் - வைத்தியராய்
இயேசுவல்லால் சார்ந்திடவோ
இகமதில் வேறெமக் காருமில்லை - கிருபையிதே

**167**

ஸ்தோத்திரம் துதி பாத்திரா உம்மை
இன்றும் என்றும் துதித்திடுவேன்
காத்தீரே என்னை கருத்தாக
வழுவாமல் என்னை உமக்காக
எடுத்தீர் என்னையும் உமக்காக
கொடுத்தீர் உமையும் எனக்காக - ஸ்தோத்

1. வல்ல வான ஞான வினோதா
துதியே துதியே துதித்திடுவேன்
எல்லாக் குறையும் தீர்த்தீரே
தொல்லை யாவும் தொலைத்தீரே
அல்லல் யாவும் அறுத்தீரே
அலையும் என்னையும் மீட்டீரே - ஸ்தோத்

2. நம்பினோரை காக்கும் தேவா
துதியே துதியே துதித்திடுவேன்
அம்புவி யாவையும் படைத்தீரே
அம்பரா உந்தன் வாக்காலே
எம்பரா எல்லாம் ஈந்தீரே
நம்பினோர்க் குந்தன் தயவாலே - ஸ்தோத்

3. அல்லேலூயா ஸ்தோத்திரமே
துதியே துதியே துதித்திடுவேன்
அகில சிருஷ்டிகளும் துதிக்க
அடிமை துதியாதிருப்பேனோ
அல்லும் பகலும் நித்தியமாய்
அன்பே உமையே துதித்திடுவேன் - ஸ்தோத்

**168**

விண்ணப்பத்தைக் கேட்பவரே - என்
கண்ணீரைக் காண்பவரே
சுகம் தருபவரே ஸ்தோத்திரம் இயேசய்யா

1. உம்மால் கூடும் எல்லாம் கூடும்
ஒரு வார்த்தை சொன்னால் போதும் - 2

2. மனதுருகி கரம் நீட்டி
அதிசயம் செய்பவரே

3. சித்தம் உண்டு சுத்தமாகு

என்று சொல்லி சுகமாக்கினீர்

4. என் நோய்களை சிலுவையிலே
சுமந்து தீர்த்தீரைய்யா

## 169

ஆறுதல் தந்திடும் இயேசு - என்னை
ஆற்றித் தேற்றியே காப்பார்

1. என்னைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து
அமர்ந்த தண்ணீரண்டை கொண்டுபோகிறார்
அவரே, அவரே எந்தன் ஆத்ம நேசர்
இயேசுவே, இயேசுவே எந்தன் ஆத்தும நேசர்

2. எந்தன் ஆத்துமாவை தினம் தேற்றி
நீதியின் பாதையில் நடத்துகின்றார் - அவரே

3. உந்தன் கோலும் உமது தடியும்
எப்போதும் என்னைத் தேற்றிடுதே -அவரே

4. என் ஜீவனுள்ள நாட்களெல்லாமே
நன்மையும் கிருபையும் தொடர்ந்திடுமே - அவரே

## 170

எனக்கொத்தாசை வரும் பர்வதம் நேராய்
என் கண்களை ஏறெடுப்பேன்

1. வானமும் பூமியும் படைத்த
வல்ல தேவனிடமிருந்தே
எண்ணுக்கடங்கா நன்மைகள் வருமே
என் கண்கள் ஏறெடுப்பேன்

2. என் காலை தள்ளாட வொட்டார்
என்னைக் காக்கும் தேவன் உறங்கார்
இஸ்ரவேலைக் காக்கும் நல்தேவன்
இராப்பகல் உறங்காரே

3. எத்தீங்கும் என்னை அணுகாமல்
ஆத்துமாவைக் காக்குமென் தேவன்
போக்கையும் வரத்தையும் பத்திரமாக
காப்பாரே இது முதலாய்

## 171

உன்னை அதிசயம் காணச் செய்வேன்
நீ அற்புதம் கண்டிடுவாய்
என்று வாக்களித்தார் தேவன்
இன்று நிறைவேற்ற வந்து விட்டார்

1. வழி திறக்கும் அதிசயம் நடத்திடுமே
செங்கடலும் பிளந்தே வழி விடுமே
தடைகளெல்லாம் தகர்ந்தே போகுமே

இடைஞ்சலெல்லாம் இன்றே மறைந்திடுமே - உன்னை

2. குறைகளெல்லாம் நிறைவாகும் அதிசயமே
இறைமகனாம் இயேசுவால் நடந்திடுமே
வாதையெல்லாம் மறைந்தே போகுமே
பாதையெல்லாம் நெய்யாய் பொழிந்திடுமே - உன்னை

3. வழி நடத்தும் அதிசயம் நடந்திடுமே
காரிருளில் பேரொளி வீசிடுமே
வனாந்திரமே வழியாய் வந்தாலும்
வல்லவரின் கரமே நடத்திடுமே - உன்னை

## 172

நாம் ஆராதிக்கும் தேவன் நல்லவர்
விடுவிக்க வல்லவரே - 2
எரிகின்ற அக்கினிக்கும் ராஜாவிற்கும்
விடுவிக்க வல்லவரே - 2

1. நம்மை காக்கின்றவர்
தூதரை அனுப்பிடுவார்
அக்கினி ஜுவாலையிலே
அவியாமல் காத்திடுவார்
இடைவிடாமல் ஆராதிப்போம்
நம் வாழ்வில் என்றும் ஜெயமே (2)

2. நம்மை அழைத்தவரோ
கைவிடவே மாட்டார்
கலங்காமல் முன் சென்றிட
கரம் பற்றி நடத்திடுவார்
இடைவிடாமல் ஆராதிப்போம்
நம் வாழ்வில் என்றும் ஜெயமே (2)

3. சத்துருவின் கோட்டைகளை
தகர்த்திட உதவி செய்வார்
தயங்காமல் முன்சென்றிட
தாங்கியே நடத்திடுவார்
இடைவிடாமல் ஆராதிப்போம்
நம் வாழ்வில் என்றும் ஜெயமே (2)

## 173

பரம அழைப்பின் பந்தய பொருளுக்காய்
நான் இலக்கை நோக்கி ஓடுகிறேன்
ஓடுகிறேன் நான் (2)
என் இயேசுவுக்காய் நான் ஓடுகிறேன் (2)
அல்லேலூயா, அல்லேலூயா (4)

1. இலாபமான அனைத்தையுமே
நான் நஷ்டம் என்று கருதுகிறேன் (2) எனக்கு
இயேசு ராஜாவின் இந்த வேலைக்காக

மகிழ்ச்சியுடன் நான் ஓடுகிறேன்
அல்லேலூயா, அல்லேலூயா (4) - பரம

2. எத்தனைதான் இடறல்கள் வந்தாலும்
விசுவாசத்திலே நிலைத்திருப்பேன் (2) எனக்கு
எனக்காக அப்பா நியமித்த
இந்த பாதையிலே நான் ஓடுகிறேன்
அல்லேலூயா, அல்லேலூயா (4) - பரம

3. என் மணவாளன் என் இயேசு ராஜாவை
நான் காணவே (நான்) வாஞ்சிக்கிறேன் (2)
என் ஆசை எல்லாம் என் இயேசுதானே
அவர் பொன்முகம் தான் நான் பார்க்கணுமே (2)
அல்லேலூயா, அல்லேலூயா (4) - பரம

**174**

நீரின்றி வாழ்வேது இறைவா
உம் நினைவின்றி மகிழ்வேது தேவா
உலகத்தில் நூறு ஆண்டு நான் வாழ்ந்தபோதும்
உம் இல்லத்தில் வாழும் ஒரு நாளே போதும்
- நீரின்றி

1. பலகோடி வார்த்தைகள் நான் கேட்ட போதும்
இயேசுவே நீர் பேசும் ஒரு வார்த்தைபோதும்
ஓராயிரம் ஜீவன் உயிர் வாழுமே
வார்த்தையில் உம் வார்த்தையில் உண்டு அற்புதமே - நீரின்றி

2. கல்லுக்குள் தேரையை வைத்தவர் நீர்
அதற்குள்ளும் ஜீவனைத் தந்தவர் நீர்
உம்மையன்றி அணுவேனும் அசையாதய்யா
உம் துணையின்றி உயிர்வாழ முடியாதய்யா - நீரின்றி

3. எத்தனை நன்மைகள் செய்தீர் ஐயா
அதில் எதற்கென்று நன்றி சொல்லித் துதிப்பேன் ஐயா
அத்தனையும் சொல்ல வேண்டும் என்றால்
ஆயிரம் ஆண்டுகள் போதாதைய்யா - நீரின்றி

**175**

அப்பா உங்க கிருபைதான் எனக்கு போதுமே
அப்பா உங்க கிருபைதான் எனக்கு போதுமே
கிருபை தாரும் தேவா (2)
கிருபை தாரும் தேவா (2)

1. பெலவீன நேரத்தில் தாங்கும் கிருபையே (2)
பெலன் கொண்டு ஊழியத்தை நடத்தும் கிருபையே
கிருபையே கிருபையே (2)
அனுதினமும் நடத்தும் கிருபையே

2. காலைதோறும் இருக்கின்ற புதிய கிருபையே (2)
கண்ணீரோடு ஜெபிக்கும் போது கிடைக்கும் கிருபையே

கிருபையே கிருபையே (2)
உறவாகும் தேவ கிருபையே

3. தவிக்கின்ற நேரத்தில் தாங்கும் கிருபையே (2)
தோல்விகளை ஜெயமாக மாற்றும் கிருபையே
கிருபையே கிருபையே (2)
ஜெயமாக மாற்றும் கிருபையே

4. விசுவாச மக்களுக்கு உதவும் கிருபையே (2)
விசுவாச ஊழியத்தை நடத்தும் கிருபையே
கிருபையே கிருபையே (2)
ஊழியத்தை நடத்தும் கிருபையே

## 176

என் தேவன் நல்லவர்
என் தேவன் வல்லவர்
என் தேவன் பரிசுத்தர்
என் தேவன் அற்புதர்

1. என் வாழ்வில் நீர் செய்த நன்மைகள்
எண்ணி முடியாதது

என் ஏக்கமெல்லாம் என் தவிப்பெல்லாம்
அறிந்த ஆண்டவர்
என் தாகமெல்லாம் என் தேவையெல்லாம்
சந்தித்த ஆண்டவர்

2. ஆகாரின் கண்ணீரை கண்டவர்
என் கண்ணீரைத் துடைத்தீரே - என் ஏக்கமெல்லாம்

3. அன்னாளின் ஜெபத்தை கேட்டவர்
என் ஜெபம் கேட்டினீரே - என் ஏக்கமெல்லாம்

4. பவுலையும் பணிசெய்ய அழைத்தீரே
இந்த (ஏழையும்) அடிமையும் அழைத்தீரே
- என் ஏக்கமெல்லாம்

## 177

உங்க கிருபை ஒன்றே
எனக்கு போதும் இயேசப்பா
உங்க கிருபையாலே
நிலைத்து நிற்கிறேன் இயேசப்பா

கிருபை தேவ கிருபை (2)

1. இந்த நாள் வரை என்னை தாங்கி நடத்திய கிருபை
இந்த நேரம் வரை கண்மணி போல் காத்திட்ட கிருபை
- கிருபை தேவ கிருபை

2. தனிமையிலே வழிநடத்திய வல்ல கிருபை
தாயை போல ஆற்றி தேற்றும் அன்பின் கிருபை (2)
- கிருபை தேவ கிருபை

3. கவலை கண்ணீர் கஷ்டம் யாவும் தீர்த்த கிருபை
கலங்காதே என்றுரைத்த கர்த்தரின் கிருபை

- கிருபை தேவ கிருபை

**178**

துதிப்போம் வாருங்கள்
தூயவர் இயேசுவையே
ஆடிப்பாடித் துதித்து ஆராதனை செய்து
ஆண்டவரை தொழுதிடுவோம் - துதிப்போம்

1. நல்லவர் நல்லவரே - இயேசு
வல்லவர் வல்லவரே
அன்பு நிறைந்தவர் அழகில் சிறந்தவர்
அவரை ஆராதிப்போம் - ஆடிப்பாடி

2. அற்புதர் அற்புதரே - இயேசு
அதிசயமானவரே
அல்பா ஒமேகா ஆதி அந்தர் அவர்
அவரை ஆராதிப்போம் - ஆடிப்பாடி

3. பரிசுத்தர் பரிசுத்தரே - இயேசு
பரலோக ராஜாவே
பாதாளம் வென்றவர் சர்வ வல்லவர்
அவரை ஆராதிப்போம் - ஆடிப்பாடி

**179**

உங்க அன்பிற்கு இணையில்லையே
உங்க அன்பிற்கு ஈடில்லையே
உங்க அன்பிற்கு குறைவில்லையே
உங்க அன்பிற்கு ஆழம் இல்லையே
உங்க அன்பு போதும்ப்பா
வேற எதுவும் வேண்டாமப்பா

1. என் பாவங்கள் யாவையுமே
உங்க சிலுவையில் சுமந்திங்கப்பா - உங்க அன்பு

2. என் இதயத்தின் காயங்களை
உங்க வார்த்தையால் தேற்றுனீங்கப்பா - உங்க அன்பு

3. என் பாரங்கள் யாவையுமே
உங்க தோளில் தூக்கி சுமந்திங்கப்பா - உங்க அன்பு

4. ஆதரவற்ற என்னையுமே
உங்க உள்ளங்கையில் ஏந்துனீங்கப்பா - உங்க அன்பு

5. எனக்காக யாவையுமே
நீங்க நலமாக செய்தீங்கப்பா - உங்க அன்பு

**180**

கர்த்தாவே உம்மை ஆராதிக்க
உம் பாதம் தேடி ஓடி வந்துள்ளோமப்பா

1. என் வாழ்வில் நீர் செய்த அதிசயங்கள்
ஏராளம் எண்ணி எண்ணி பாடுவேனப்பா

2. என் வாழ்வில் நீர் தந்த ஆசீர்வாதம்
ஏராளம் அனைத்தையும் சொல்லி துதிக்கின்றேனய்யா
3. என் வாழ்வில் நீர் கொடுத்த கிருபைகளும்
ஏராளம் அதுவே எனக்கு போதும் இயேசப்பா
4. என் வாழ்வில் நீர் செய்த நன்மைகளும்
ஏராளம் நல்லவரே உமக்கு நன்றி இயேசப்பா

**181**

ஆராதனை தெய்வம் இயேசுவே
ஆராதனை தெய்வம் இயேசுவே
பாடிடுவோம் அவரை
ஆராதனை செய்வோம்

1. பாவங்களை இயேசு மன்னிப்பவர் (2)
சாபங்களை அவர் தீர்க்கின்றவர் - பாடிடுவோம்
2. நேற்றும் இன்றும் என்றும் மாறாதவர்
அன்பாக இருக்கின்றவர் - பாடிடுவோம்
3. சர்வ வல்ல மகா தேவன் அவர்
சகலமும் படைத்திட்டவர் - பாடிடுவோம்
4. வழி சத்திய ஜீவனின் தேவன் அவர்
வல்லமை உடையவர் - பாடிடுவோம்

**182**

துதி துதி துதி துதி இயேசுவை
துதி துதி துதி துதி நேசரை (2)
ஆராதனை துதி ஆராதனை
அப்பா என் இயேசுவுக்கு ஆராதனை (2)
-துதி துதி

1. துதித்தால் பாவங்கள் ஓடுமே
துதித்தால் சாபங்கள் நீங்குமே - ஆராதனை துதி
2. துதித்தால் கவலை மாறுமே
துதித்தால் கண்ணீர் மறையுமே - ஆராதனை துதி
3. துதித்தால் உள்ளத்தில் ஆனந்தம்
துதித்தால் மனதில் பேரின்பம் - ஆராதனை துதி

**183**

உம் கிருபை என்றுமுள்ளது இயேசு தேவா
உம் கிருபை என்றுமுள்ளது இயேசு தேவா
ஆராதனை துதி ஆராதனை
ஆராதனை துதி ஆராதனை

1. பாவங்களை மன்னித்தீரே ஆராதனை
சாபங்களை நீக்கினீரே ஆராதனை என் ஆராதனை
2. என் வாழ்வில் அற்புதம் செய்தீரே ஆராதனை
பெலவீனத்தில் பெலன் தந்தீரே ஆராதனை - ஆராதனை
3. அபிஷேகத்தால் என்னை நிறைத்தீரே ஆராதனை
ஆவியின் அனலை ஊற்றினீரே ஆராதனை - ஆராதனை
4. எனக்காய் உலகில் வந்தவரே ஆராதனை
எனக்காய் மீண்டும் வருபவரே ஆராதனை - ஆராதனை

## 184

ஆராதிக்கின்றேன் ஆராதிக்கின்றேன்
ஆராதிக்கின்றேன் உம்மையே
ஆராதிக்கின்றேன் ஆராதிக்கின்றேன்
ஆராதிக்கின்றேன் இயேசுவே

1. பிதாவே உம்மை ஆராதிக்கின்றேன்
இயேசுவே உம்மை ஆராதிக்கின்றேன்
ஆவியே உம்மை ஆராதிக்கின்றேன்
ஆராதிக்கின்றேன் ஆராதிக்கின்றேன் (2) -ஆராதிக்கின்றேன்
2. தேவனே உம்மை ஆராதிக்கின்றேன்
ஜீவனே உம்மை ஆராதிக்கின்றேன்
எஜமாணனே உம்மை ஆராதிக்கின்றேன்
ஆராதிக்கின்றேன் உம்மையே - ஆராதிக்கின்றேன்
3. நல்லவரே உம்மை ஆராதிக்கின்றேன்
வல்லவரே உம்மை ஆராதிக்கின்றேன்
அற்புதமே (அதிசயமே) ஆராதிக்கின்றேன்
ஆராதிக்கின்றேன் உம்மையே - ஆராதிக்கின்றேன்

## 185

இயேசப்பா உம்மை தொழுகிறேன்
இயேசப்பா உம்மை துதிக்கிறேன்
ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
ஆவியோடு ஆராதிப்பேன்
ஆராதிப்பேன் ஆராதிப்பேன்
அன்போடு ஆராதிப்பேன் (2) - இயேசப்பா

1. ஆவியினாலே அபிஷேகம் செய்த
ஆவியானவரை ஆராதிப்பேன் (2) - இயேசப்பா
2. சாத்தானை வெல்ல அதிகாரம் தந்த
சத்திய தேவனை ஆராதிப்பேன் (2) - இயேசப்பா
3. விசுவாசம் என்னும் கேடகம் தந்த
விந்தை இயேசுவை ஆராதிப்பேன் (2) - இயேசப்பா
4. பாதாளம் வென்ற பரிசுத்த தேவனை
பாதம் பணிந்து ஆராதிப்பேன் (2) - இயேசப்பா
5. பாவியாம் எந்தன் பாவங்கள் சுமந்த
பரமன் இயேசுவை ஆராதிப்பேன் (2) - இயேசப்பா

**186**

இயேசு இராஜாவின் உம் சமூகத்திலே
நன்றியோடு ஆராதிப்பேன்
ஆராதனை ஆராதனை (2)

1. உன்னத தேவனே ஆராதனை (2)
உண்மையின் தேவனே ஆராதனை
உள்ளங்கையில் வரைந்தவரே ஆராதனை
உருவாக்கின தெய்வமே ஆராதனை - ஆராதனை

2. அன்புள்ள தெய்வமே ஆராதனை (2)
ஆருயிர் தேவனே ஆராதனை
அல்பா ஒமேகாவே ஆராதனை
ஆறுதலின் தேவனே ஆராதனை - ஆராதனை

**187**

கலங்காதே கரம் பிடித்து
கனிவுடன் நடத்த கர்த்தர் உண்டு
திகையாதே தினமம் உன்னை
தேற்றி நடத்திட தெய்வம் உண்டு
பதறாதே பயந்திடாதே
பாதைகள் காட்டிட பரமன் உண்டு

1. சோதனை நேரத்தில் சோர்ந்துவிடாதே
சோகங்கள் தீர்த்திட அவர் வருவார்
இயேசு திராணிக்கு மேலாக சோதிப்பதில்லை
அதை தாங்கிட பெலன் தந்து தப்புவிப்பார் - கலங்காதே

2. கவலையின் நேரத்தில் கண்ணீர் சிந்தாதே
கடைசிவரை கர்த்தர் கரம் பிடிப்பார்
இயேசு கண்ணீர்கள் யாவையும் காண்கின்ற தேவன்
காலமெல்லாம் உன்னை காத்திடுவார் - கலங்காதே

**188**

ஆராதனை ஆராதனை
உம்மை ஆவியோடு ஆராதிக்கின்றோம்
ஆராதனை ஆராதனை
உம்மை உண்மையோடு ஆராதிக்கின்றோம்
ஆராதனை ஆராதனை (2)

1. சத்திய தேவனே உம்மை உயர்த்தி
தூய ஆவியோடு ஆராதிக்கின்றோம்
நித்திய தேவனே உம்மை உயர்த்தி
உம்மை உண்மையோடு ஆராதிக்கின்றோம்

2. யெகோவாயீரே பார்த்துக்கொள்வீர்
தூய ஆவியோடு ஆராதிக்கின்றோம்

யெகோவா நிசியே வெற்றி தருவீர்
உம்மை உண்மையோடு ஆராதிக்கின்றோம்

**189**

வல்லமை வல்லமை
இயேசுவின் வல்லமை
அது பெரிய வல்லமை
அதிசய வல்லமை
பயங்கரமாய் பெரும்காரியங்கள் செய்யும்வல்லமையே
அதினாலொன்றும் செய்ய முடியாதது இல்லையே

1. பூமியையே அவர் பார்த்திடவே
அது நடுங்கி அதிருமே
பர்வதங்களை அவர் தொட்டிடவே
அது புகைந்து போகுமே
2. சாத்தானின் எந்த வல்லமையை
நொறுக்கிடும் வல்லமை
சாவினையும் பாதாளத்தையும்
ஜெயித்த வல்லமை
3. உலர்ந்துபோன எலும்புகளை
உயிர்ப்பிக்கும் வல்லமை
எந்த அற்புதமும் எல்லா அதிசயமும்
நடத்தும் வல்லமை
4. நோய்களையும் எந்த பெலவீனமும்
சுகமாக்கும் வல்லமை
ஒரு வார்த்தையிலே எல்லாம் நடந்திடுமே
கடல் காற்றும் அடங்குமே

**190**

இயேசுவின் பிள்ளைகள் நாங்கள்
எப்போதும் மகிழ்ந்திருப்போம்
இயேசுவின் பிள்ளைகளே
எப்போதும் மகிழ்ந்திருங்கள்

1. எந்நேரமும் எவ்வேளையும்
இயேசுவில் களிகூருவோம்
நம் நேசரில் களிகூருவோம் (2)
2. எதை நினைத்தும் கலங்காமல்
இப்போதும் ஸ்தோத்தரிப்போம்
நாம் எப்போதும் ஸ்தோத்தரிப்போம்
3. நமக்கு எதிராய் மந்திரம் இல்லை
குறிசொல்லல் எதுவும் இல்லை
சாத்தான் நம் காலின் கீழே - இன்று

**191**

எக்காள சத்தம் வானில் தொனித்திடவே
எம் இயேசு மா இராஜனே வந்திடுவார்

1. அந்த நாள் மிக சமீபமே
சுத்தர்கள் யாவரும் சேர்ந்திடவே
தேவ எக்காளம் வானில் முழங்க
தேவாதி தேவனை சந்திப்போமே - எக்காள

2. வானமும் பூமியும் மாறிடினும்
வல்லவர் வாக்குதாம் மாறிடாதே
தேவதூதர் பாடல் தொனிக்க
தேவன் அவரையே தரிசிப்போமே - எக்காள

3. கண்ணிமை நேரத்தில் மாறிடுவோம்
விண்ணிலே யாவரும் சேர்ந்திடுவோம்
கண்ணீர் கவலை அங்கே இல்லை
கர்த்தர் தாமே வெளிச்சமாவார் - எக்காள

**192**

மகிழ்ச்சியோடு துதிக்கின்றோம்
மனம் மகிழ்ந்து துதிக்கிறோம்
மன்னவரே இயேசு ராஜா!
எங்க மனதில் பூத்து மனம் வீசும் ரோஜா!
இயேசு ராஜா, சாரோன் ரோஜா!

1. நாற்றமாக இருந்த வாழ்வை
வாசமாக மாற்றினாரே (2)
பாவியாக இருந்த என்னை
பரிசுத்தனாய் (மாய்) மாற்றினீரே (2)
நல்லவரே.... வல்லவரே..... வாழவைக்கும் அன்பு
தெய்வம் நீரே
எங்களை வாழவைக்கும் அன்பு தெய்வம் நீரே - மகிழ்ச்சியோடு

2. நெருக்கத்திலே இருந்த என்னை
விசாலத்தில் வைத்தீரே
சேற்றின் நின்று தூக்கியெடுத்து
கன்மலைமேல் நிறுத்தினீரே
இயேசு ஆனந்தமே பரம ஆனந்தமே - மகிழ்ச்சியோடு

3. தாயைப்போல் என்னை அவர்
சேர்த்தணைத்துக் கொண்டாரே
நல்ல தந்தை போல என்னை அவர்
தோளில் தூக்கிச் சுமந்தாரே
அப்பா அல்லோ! நல்ல அப்பா அல்லோ!
பிள்ளை அல்லோ! செல்லப்பிள்ளை அல்லோ!!- மகிழ்ச்சியோடு

**193**

துதிசெய் மனமே நிதம் துதிசெய்

துதிசெய் இம்மட்டும் நடத்தின உன் தேவனை
இன்றும் என்றும் நன்றி மிகுந்த மனதோடே

1. முன் காலமெல்லாம் உன்னைத் தம் கரமதில் ஏந்தி
வேண்டிய நன்மைகள் யாவும் உனக்களித்தாரே - துதி

2. ஏங்கிடும் வழியில் பாடுகள் பல நேர்ந்தபோது
ஏகபரன் உன் காவலனாய் இருந்தாரே - துதி

3. சோதனை பலவாய் மேகம்போல் உன்னை சூழ்ந்தாலும்
சேதமுறாமல் முற்றிலும் காக்க வல்லோரை - துதி

4. தாய் தந்தை தானும் ஏகமாய் உனை மறந்தாலும்
தூயரின் கையில் உன் சாயல் உள்ளதை நினைத்தே - துதி

5. சந்ததம் உன்னை நடத்திடும் சத்திய தேவன்
சொந்தம் பாராட்டி உன்னுடன் இருப்பதினாலே - துதி

## 194

கேருபீன் சேராபீன்கள்
ஓய்வின்றி உம்மைப் போற்றுதே!
பூலோகத் திருச்சபையெல்லாம்
ஓய்வின்றி உம்மைப் போற்றிட!

நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்
எங்கள் பரலோக ராஜாவே!
இந்த வானம் பூமியிலுள்ள யாவும்
உந்தன் நாமத்தை உயர்த்தட்டுமே!

1. பூமியனைத்திலும் உந்தன் மகிமை
நிறைந்து வழிகின்றதே
ஆலயத்திலும் உந்தன் மகிமை
அலை அலையாய் அசைகின்றதே
துதிகன மகிமைக்குப் பாத்திரர்
எல்லாப் புகழும் உமக்குத்தானே - நீர் பரிசுத்தர்

2. வானம் உமது சிங்காசனம்
பூமி உந்தன் பாதபடி
நாங்கள் உந்தன் தேவ ஆலயம்
நீர் தங்கும் தூய ஸ்தலம்
சகலமும் படைத்த என் தேவா
நீர் நித்திய சிருஷ்டிகரே - நீர் பரிசுத்தர்

3. பரலோகத்தில் உம்மையல்லா
யாருண்டு தேவனே
பூலோகத்தில் உம்மை தவிர
வேறொரு விருப்பம் இல்லை
என்றும் உம்மோடு வாழ
எம்மை உமக்காய் தெரிந்தெடுத்தீர் - நீர் பரிசுத்தர்

## 195

ஆசீர்வதிக்கும் தேவன்

நம்மை ஆசீர்வதிப்பாரே
துதி ஸ்தோத்ரம் இயேசு நாதா
துதி உமக்கே என்றுமே (2)

1. ஆபிரகாமை ஆசீர்வதித்தவர்
ஆசீர்வதிப்பாரே
ஈசாக்கை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

2. யாக்கோபை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே
யாபேசை ஆசீர்வதித்த தேவன்
ஆசீர்வதிப்பாரே

## 196

அக்கினியின் தேவன் எனக்குள்ளே இருக்கிறார்
சர்வ வல்ல தேவன் எனக்குள்ளே இருக்கிறார்
கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
வெற்றி எனக்கு தான்

1. எலியாவின் தேவனே எனக்குள்ளே இருக்கிறார்
எலிசாவின் தேவனே எனக்குள்ளே இருக்கிறார்
கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
அதிசயம் எனக்கு தான்

2. நான் போகும் வழியெல்லாம்
என் இயேசுவுக்கு தெரியுமே
கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
ஜெயம் ஜெயம் எனக்கு தான்

3. என் பாத்திரம் அபிஷேகத்தால்
நிரம்பி வழியுமே
கலங்கமாட்டேன் நான் கலங்கமாட்டேன்
அக்கினி எனக்கு தான்

## 197

கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்
நீ கலங்காதே மனமே

1. கையிடும் வேலையில் ஆசீர்வாதமும்
களங்களில் நிரம்பிடும் தானியமும்
நிறைவான நன்மை உண்டாக
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார் (2)

2. சத்துருக்கள் எதிராய் எழும்பும் போது
கர்த்தரே யுத்தத்தை செய்திடுவார்
வெற்றிமேல் வெற்றியை உனக்கு தந்து
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார் (2)

3. உன்னை அவர் தனக்காக தெரிந்து கொண்டார்
தன் பெயரை உனக்கு வழங்கினாரே

சுற்றமும் நண்பரும் உன்னை மதிக்க
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்
4. உன் தேசம் முழுதும் மழைபொழிவார்
உனக்காக பொக்கிஷத்தை திறந்திடுவார்
பிறருக்கு நீயும் கடன் கொடுக்க
கர்த்தர் உன்னை மேன்மையாக வைப்பார்

## 198

1. சர்வ லோகாதிபா நமஸ்காரம்!
சர்வ சிருஷ்டிகனே நமஸ்காரம்!
தரை, கடல், உயிர், வான், சகலமும் படைத்த
தயாபர பிதாவே, நமஸ்காரம்!
2. திரு அவதாரா நமஸ்காரம்!
ஜெகத்திரட்சகனே நமஸ்காரம்!
தரணியின் மானுடர் உயிர் அடைந்தோங்கத்
தருவினில் மாண்டோய் நமஸ்காரம்!
3. பரிசுத்த ஆவி நமஸ்காரம்!
பரம சற்குருவே நமஸ்காரம்!
அருபியாய் அடியார் அகத்தினில் வசிக்கும்
அரியசித்தே சதா நமஸ்காரம்!
4. முத்தொழிலோனே நமஸ்காரம்!
மூன்றிலொன்றோனே நமஸ்காரம்!
கர்த்தாதி கர்த்தா, கருணாசமுத்திரா
நித்திய திரியேகா, நமஸ்காரம்!

## 199

அப்பா பிதாவே அன்பான தேவா
அருமை இரட்சகரே ஆவியானவரே
1. எங்கோ நான் வாழ்ந்தேன் அறியாமல் அலைந்தேன்
என் நேசர் தேடி வந்தீர்
நெஞ்சார அணைத்து முத்தங்கள் கொடுத்து
நிழலாய் மாறிவிட்டீர்
நன்றி உமக்கு நன்றி (அப்பா)
2. தாழ்மையில் இருந்தேன் தள்ளாடி நடந்தேன்
தயவாய் நினைவு கூர்ந்தீர்
கலங்காதே என்று கண்ணீரைத் துடைத்து
கரம் பற்றி நடத்துகிறீர்
3. உளையான சேற்றில் வாழ்ந்த என்னை
தூக்கி எடுத்தீரே
கல்வாரி இரத்தம் எனக்காக சிந்தி
கழுவி அணைத்தீரே
4. இரவும் பகலும் ஐயா கூட இருந்து

எந்நாளும் காப்பவரே
மறவாத தெய்வம் மாறாத நேசர்
மகிமைக்குப் பாத்திரரே

5. ஒன்றை நான் கேட்டேன் - அதையே
நான் தேடி ஆர்வமாய் நாடுகிறேன்
உயிரோடு வாழும் நாட்களெல்லாம்
உம்பணி செய்திடுவேன் - நன்றி

**200**

காக்கும் கரங்கள் உண்டெனக்கு
காத்திடுவார் கிருபையாலே
அல்லேலூயா பாடிப் பாடி
அலைகளை நான் தாண்டிடுவேன்
நம்பி வா இயேசுவை நம்பி வா இயேசுவை

1. நிந்தனைகள் போராட்டம் வந்தும்
நீதியின் தேவன் தாங்கினாரே
நேசக்கொடி என் மேல் பறக்க
நேசருக்காய் ஜீவித்திடுவேன்

2. கன்மலைகள் பெயர்க்கும்படியாய்
கர்த்தர் உன்னைக் கரம்பிடித்தார்
காத்திருந்து பெலனடைந்து
கழுகுபோல எழும்பிடுவாய்

3. அத்திமரம் துளிர் விடாமல்
ஆட்டுமந்தை முதலற்றாலும்
கர்த்தருக்கு காத்திருப்போர்
வெட்கப்பட்டுப் போவதில்லை

**201**

கைதட்டி பாடி மகிழ்ந்திருப்போம்
கர்த்தர் சமூகத்தில் களிகூருவோம்
களிகூருவோம் களிகூருவோம்
கர்த்தர் சொன்ன வாக்குத்தத்தம் சொல்லி மகிழ்வோம்
களிகூருவோம் களிகூருவோம்
கவலைகள் மறந்து களிகூருவோம்

1. நினைப்பதற்கும் நான் ஜெபிப்பதற்கும்
அதிகமாய் செய்திடுவார்

2. பயப்படாதே உன்னை மீட்டுக் கொண்டேன்
எனக்கே நீ சொந்தம் என்றார்

3. நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும்
ஜீவனுள்ள நாட்களெல்லாம்

4. அறிவு புகட்டுவார் பாதை காட்டுவார்
ஆலோசனை அவர் தருவார்

5. ஆபத்துக் காலத்தில் நோக்கிக் கூப்பிட்டால்

அவர் நம்மை விடுவிப்பாரே

6. வாலாக்காமல் அவர் தலையாக்குவார்
கீழாக்காமல் மேலாக்குவார்

7. பெலப்படுத்தி நான் சகாயம் செய்வேன்
வலக்கரம் தாங்கும் என்றார்

8. உள்ளங்கையில் அவர் பொறித்து உள்ளார்
அவர் உன்னை மறப்பதில்லை - எனவே

**202**

உங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
உங்கள் கவலைகள் கண்ணீர் எல்லாம் மறைந்துவிடும்
கலங்காதே மகனே, கலங்காதே மகளே
என் இயேசு கைவிடமாட்டார்

1. கடந்ததை நினைத்து கலங்காதே
நடந்ததை மறந்து விடு
கர்த்தர் புதியன செய்திடுவார்
இன்றே நீ காண்பாய்... கலங்கிடவே வேண்டாம்

2. நொறுங்குண்ட இதயம் தேற்றுகிறார்
உடைந்த உள்ளம் தாங்குகிறார்
காயங்கள் அனைத்தையும் கட்டுகிறார்
கண்ணீர் துடைக்கின்றார் (உன்) - கலங்கிடவே

3. திராணிக்கு மேலாக சோதிக்கப்பட
ஒரு நாளும் விடமாட்டார்
தாங்கிடும் பெலன் தருவார்
தப்பி செல்ல வழி செய்வார் - (நீ) - கலங்கிடவே

4. நல்லதோர் போராட்டம் போராடுவோம்
விசுவாசம் காத்துக் கொள்வோம்
நீதியின் கிரீடம் நமக்கு உண்டு
நேசர் வருகையில் தந்திடுவார் - நம்

எங்கள் துக்கம் சந்தோஷமாய் மாறும்
எங்கள் கவலைகள் கண்ணீர்
எல்லாம் மறைந்து விடும்
கலங்கிடவே மாட்டோம் - நாங்கள் (2)

**203**

நீங்கமட்டும் இல்லாதிருந்தால் என் துக்கத்தில் நான்
அழிந்திருப்பேன் (2) - உங்க
வார்த்தை மட்டும் தேற்றாதிருந்தால் மன
சஞ்சலத்தில் மரித்திருப்பேன் (2)
இயேசய்யா உம் அன்பு போதுமே - என்
நேசரே உம் கிருபை போதுமே (2)

1. தண்ணீர்கள் மத்தியில் நடந்தபோது
மூழ்காமல் காத்ததும் கிருபையப்பா (2)
அக்கினியில் நடந்தபோது - கடும் அக்கினியில் நடந்தபோது - எனை
மீட்டதும் கிருபையப்பா (2)

2. நிந்தைகள் அவமானம் சூழ்ந்தபோதும்
ஆற்றியே அணைத்ததும் கிருபையப்பா (2)
விக்கினங்கள் சூழ்ந்த போது - மரண விக்கினங்கள் சூழ்ந்த போது - எனை
மீட்டதும் கிருபையப்பா (2)

3. அன்னையின் கருவிலே தெரிந்து கொண்டு
இம்மட்டும் காத்ததும் கிருபையப்பா (2)
வழி தப்பி அலைந்தபோது - உந்தன் வழி தப்பி அலைந்த போது - மீட்டு
இரட்சித்ததும் கிருபையப்பா (2)

## 204

நீங்க இல்லாத வாழ்வும் ஒரு வாழ்வாகுமா
உம்மைத் தேடாத நாளும் ஒரு நாளாகுமா
ஏசைய்யா ஏசைய்யா உம் பிள்ளை நானைய்யா (2)

1. உம்மோடு நடந்தால் ஆனந்தம்
உம்மோடு இருந்தால் பேரின்பம் (2)
நன்மையினால் என் வாயை நிரப்பும்
நல்லவரே என் ஏசைய்யா

2. உம் வசனம் எனக்கு ஆனந்தம்
உம் சமூகம் எனக்கு பேரின்பம் (2)
வார்த்தையினால் என் வாழ்வை வளமாக்கும்
வல்லவரே என் ஏசைய்யா (2)

3. உம் சத்தும் எனக்கு ஆனந்தம்
உம் சித்தம் எனக்கு பேரின்பம் (2)
சித்தம் செய்து சீயோனில் சேர
சுத்தம் செய்யும் என் ஏசைய்யா

## 205

உந்தன் நாமத்தில் எல்லாம் கூடும் எல்லாம் கூடுமே
உந்தன் சமூகத்தில் எல்லாம் கூடும் எல்லாம் கூடுமே

1. உந்தன் வார்த்தையால், புயல் காற்று ஓய்ந்தது
உந்தன் பார்வையால், திருந்தினார் பேதுரு
கூடாதது ஒன்றுமில்லையே - உம்மால்
உம்மால் கூடும் எல்லாம் கூடும்
கூடாதது ஒன்றுமில்லையே - உம்மால்

2. தபித்தாள் மரித்தாள் ஜெபத்தால் உயிர்த்தாள்
திமிர்வாத ஐநேயா, சுகமாகி நடந்தான்

3. மீனின் வாயிலே, காசு வந்ததே
கழுதையின் வாயிலே, பேச்சு வந்ததே

4. வாலிபன் ஐதீகு தூக்கத்தால் விழுந்தான்
இறந்தும் எழுந்தான், பவுல்அன்று ஜெபித்ததால்

5. காலூன்றி நில்லென்று கத்தினார் பவுல் அன்று
முடவன் நடந்தான் லிஸ்திரா நகரிலே

## 206

இயேசு இராஜனின் திருவடிக்கு சரணம் - சரணம் சரணம்
ஆத்ம நாதனின் மலரடிக்கு சரணம் - சரணம் சரணம்

1. பார் போற்றும் தூய தூய தேவனே
மெய் இராஜாவே எங்கள் நாதனே
பயம் நீக்கும் துணை யாவுமானீரே
சரணம் சரணம் சரணம் - இயேசு

2. இளைப்பாறுதல் தரும் வேந்தனே
இன்னல் துன்பம் நீக்கும் அருள் நாதனே
ஏழை என்னை ஆற்றி தேற்றிக் காப்பீரே
சரணம் சரணம் சரணம் - இயேசு

3. பெலவீனம் யாவும் போக்கும் வல்லோரே
பெலனீந்து வலக்கரம் பிடிப்பீரே
ஆவி ஆத்மா சரீரத்தைப் படைக்கிறேன்
சரணம் சரணம் சரணம் - இயேசு

4. உந்தன் சித்தம் செய்ய அருள் தாருமே
எந்தன் சித்தம் யாவும் என்றும் ஒழிப்பீரே
சொந்தமாக ஏற்று என்னை ஆட்கொள்ளும்
சரணம் சரணம் சரணம் - இயேசு

## 207

மகிமை உமக்கன்றோ
மாட்சிமை உமக்கன்றோ
துதியும் புகழும் ஸ்தோத்திரமும்
தூயவர் உமக்கன்றோ

ஆராதனை - ஆராதனை என்
அன்பர் இயேசுவுக்கே

1. விலையேறப் பெற்ற உம் இரத்தத்தால்
விடுதலை கொடுத்தீர்
இராஜாக்களாக லேவியராக
உமக்கென தெரிந்து கொண்டீர் - ஆராதனை

2. வழிகாட்டும் தீபம் துணையாளரே
தேற்றும் தெய்வமே
அன்பால் பெலத்தால்
அனல் மூட்டும் ஐயா அபிஷேக நாதரே - ஆராதனை

3. எப்போதும் இருக்கின்ற
இனிமேலும் வருகின்ற எங்கள் இராஜாவே
உம் நாமம் வாழ்க உம் அரசு வருக
உம் சித்தம் நிறைவேறுக - ஆராதனை

## 208

அநாதிஸ்நேகம் அநாதிஸ்நேகம் அநாதிஸ்நேகம்
எங்கள் இயேசுவின் ஸ்நேகம்
பரத்தை விட்டு இறங்கி வந்த ஸ்நேகம்

பரலோக மகிமை துறந்து வந்த ஸ்நேகம்
எல்லா ஸ்நேகத்திலும் மிக மேலான ஸ்நேகம் (2)

1. மறுதலித்த பேதுருவை மனம்திரும்ப செய்த ஸ்நேகம்
காட்டி கொடுத்த யூதாசை கன்னத்தில் அறைந்திடாமல் ஸ்நேகிதனே என்றழைத்த ஸ்நேகம்
அதுமேலான ஸ்நேகம் எங்கள் இயேசுவின் ஸ்நேகம்

2. கண் இழந்த சிம்சோனையும் நினைத்த ஸ்நேகம்
நினிவேக்கு போகாமல் திசைமாறி ஓடிய யோனாவை பயன்படுத்திய ஸ்நேகம்
அது மேலான ஸ்நேகம் எங்கள் இயேசுவின் ஸ்நேகம்

**209**

வேகமாய்ப்போகும் வாழ்க்கையே ஒரே ஒரு
வாழ்க்கைதானைய்யா உனக்கு வேறொரு
வாழ்க்கை இல்லையே

1. வாலிபம் மாயைதான் இளமையும் மாயைதான்
இவையெல்லாம் கடந்துபோகும் உலகத்தின் வேஷந்தான்
வாலிபனே உன் வாலிபப் பிராயத்தில்
சிருஷ்டிகர் இயேசுவை நினை (2)

2. ஒரேமுறை மரிப்பதும் நியாயத்தீர்ப்பு அடைவதும்
மனிதனுக்கு கர்த்தர் அன்று எழுதிவைத்த விதி அது
ஏழேழு ஜென்மம் என்று ஏமாற்றுவோரும் உண்டு
ஏமாந்து போய்விடாதே நீ (2)

**210**

கடினமானது உமக்கு எதுவுமில்லை
முடியாதது உமக்கு எதுவுமில்லை
எதுவுமில்லை இயேசப்பா எதுவுமில்லை
முடியாதது எதுவுமில்லை

1. ஓங்கிய உம் புயத்தாலே
வானம் பூமி உண்டாக்கினீர்
நீட்டப்பட்ட உம் கரத்தாலே
அகிலத்தையே ஆட்சி செய்கின்றீர்

2. உம்மாலே செய்ய முடியாத
அதிசயங்கள் ஒன்றுமில்லை
ஆயிரமாயிரம் தலைமுறைக்கும்
அன்புகாட்டும் Almighty God (அல்மைட்டிகாட்)

3. மனிதர்களின் செயல்களையெல்லாம்
உற்றுநோக்கிப் பார்க்கின்றீர்
அவனவன் செயல்களுக்கேற்ப
தகுந்த பரிசு தருகின்றீர்

4. யோசனையில் பெரியவர் நீர்
செயல்களிலே வல்லவர் நீர்
சேனைகளின் கர்த்தர் நீரே
எல்ஷடாய் உம் நாமமே

## 211

கும்பிடுகிறேன் நான் கும்பிடுகிறேன்
இறைவா இயேசு உம்மை கும்பிடுகிறேன்
இறைவா இறைவா கும்பிடுகிறேன்

1. சர்வத்தையும் படைத்த சர்வ வியாபியே (2)
சாரோனின் ரோஜா லீலிபுஷ்பம்
உம்மை நான் கும்பிடுகிறேன் (2)

2. மகிமையின் மன்னவனே, மகத்துவ ராஜனே
மாறாத தேவன் மரித்து உயிர்த்தீர்
உம்மை நான் கும்பிடுகிறேன் (2)

3. வல்லமையின் தெய்வமே வாழவைக்கும் வள்ளலே
வானத்து மன்னா வாழ்வின் ஜோதி
உம்மை நான் கும்பிடுகிறேன்

## 212

குயவனே குயவனே படைப்பின் காரணனே
களிமண்ணான என்னையுமே
கண்ணோக்கிப் பார்த்திடுமே

1. வெறுமையான பாத்திரம் நான்
வெறுத்து தள்ளாமலே
நிரம்பி வழியும் பாத்திரமாய்
விளங்கச் செய்திடுமே
வேதத்தில் காணும் பாத்திரமெல்லாம்
இயேசுவைப் போற்றிடுமே
என்னையும் அவ்விதப் பாத்திரமாய்
வனைந்து கொள்ளுமே - குயவனே

2. விலைபோகாத பாத்திரம் நான்
விரும்புவாரில்லையே
விலையெல்லாம் உம் கிருபையால்
உகந்த தாக்கிடுமே
தடைகள் யாவும் நீக்கி என்னை
தம்மைப்போல் மாற்றிடுமே
உடைத்து என்னை உந்தனுக்கே
உடைமை ஆக்கிடுமே

3. மண்ணாசையில் நான் மயங்கியே
மெய்வழி விட்டகன்றேன்
கண்போன போக்கைப் பின்பற்றினேன்
கண்டேனில்லை இன்பமே
காணாமல் போன பாத்திரம் என்னை
தேடிவந்த தெய்வமே
வாழ்நாள் எல்லாம் உன் பாதம் சேரும்
பாதையில் நடத்திடுமே

## 213

கலங்குவதேன் கண்ணீர் விடுவதுமேன் (2)
நேசரின் கரங்களே தேற்றுமே
இயேசுவின் காயங்கள் ஆற்றுமே -கலங்குவதேன்

1. சோர்ந்து போன உன் உள்ளம் பார்க்கிறார்
உடைந்து போன உன் நெஞ்சம் காண்கிறார் (2)
அழைத்த தேவன் உன்னை நடத்திச் செல்வார் (2)
கண்ணீரை துடைப்பார் கவலைகள் மாற்றுவார் (2)
புது ஜீவன் ஊற்றுவார் புது சிருஷ்டியாக்குவார் -கலங்குவதேன்

2. அவருக்கான உன் இழப்புகள் பார்க்கிறார்
அவருக்கான உன் அலைச்சல்கள் காண்கிறார் (2)
நீதி தேவன் உனக்கு நியாயம் செய்வார் (2)
நிச்சயம் பலன் தருவார் உறுதியாய் உயர்த்திடுவார் (2)
தோல்வியில் ஜெயம் தருவார் வியாதியில் சுகம் தருவார் -கலங்குவதேன்

3. துன்பப்பட்டாலும் கைவிடப்படுவதில்லை
தள்ளப்பட்டாலும் மடிந்து போவதில்லை (2)
வாழும் தேவன் உன்னைக் காத்துக் கொள்வார் (2)
இயேசுவின் மகிமையுமே உன்னிலே வெளிப்படுமே (2)
சீக்கிரம் நீங்கிடும் இந்த இலேசான உபத்திரவம் -கலங்குவதேன்

## 214

பிதாவே ஆராதிக்கின்றோம்
இயேசுவே ஆர்ப்பரிக்கின்றோம்
ஆவியானவரே அன்பு செய்கின்றோம்
ஆராதிக்கின்றோம்
ஆர்ப்பரிக்கின்றோம்
அன்பு செய்கின்றோம் - உம்மை

1. சகலமும் படைத்தவரே
சர்வ வல்லவரே
மகிமைக்கு பாத்திரரே
மங்காத பிரகாசமே

2. ஸ்தோத்திரமும் கனமும்
வல்லமையும் பெலனும்
மாட்சிமையும் துதியும்
எப்போதும் உண்டாகட்டும்

3. பரிசுத்தர் பரிசுத்தரே
பரலோக ராஜாவே
எப்போதும் இருப்பவரே
இனிமேலும் வருபவரே

4. உமது செயல்களெல்லாம்
அதிசயமானவைகள்
உமது வழிகளெல்லாம்
சத்தியமானவைகள்

## 215

திருகரத்தால் தாங்கியென்னை
திருசித்தம் போல் நடத்திடுமே
குயவன் கையில் களிமண் நான்
அனுதினம் நீர் வனைந்திடுமே

1. உம் வசனம் தியானிக்கையில்
இதயமதில் ஆறுதலே
காரிருளில் நடக்கையிலே
தீபமாக வழி நடத்தும்

2. ஆழ்கடலில் அலைகளினால்
அசையும் போது என் படகில்
ஆத்ம நண்பர் இயேசு உண்டு
சேர்ந்திடுவேன் அவர் சமூகம்

3. அவர் நமக்காய் ஜீவன் தந்து
அளித்தனரே இந்த மீட்பு
கண்களினால் காண்கிறேனே
இன்ப கானான் தேசமதை

## 216

தொட்டு சுகமாக்குமையா இயேசுவே - நீர்
தொட்டால் போதும் எந்தன் வாழ்க்கை மாறுமே (2)
மாறுமே ........... மாறுமே (2)

1. எட்டிக்காய்போல் கசக்கும் எந்தன் வாழ்க்கையை
உம் பாசக்கைகள் எட்டி இன்று தொடணுமே
கட்டிப்பிடித்தேன் உந்தன் பாதம்
கர்த்தர் எந்தன் கதறல் கேளும்
தொடணுமே என்னைத் தொடணுமே (2)

2. கடனும் உடனும் என்னை முடக்க முடியாதே
கடல் மேல் என்னை நடக்கச் செய்வார்
கடனை எல்லாம் மாறச் செய்வார்
மாறுமே......... எல்லாம் மாறுமே (2)

3. குறைவை எண்ணிப் புலம்புவதை நிறுத்துவேன்
நிறைவாய் என்னை நடத்துபவர் இருப்பதால்
இல்லை என்பது எனக்கு இல்லை
தொல்லை என்பது துளியும் இல்லை
இல்லையே தொல்லை இல்லையே (2)

## 217

உன்னத தேவன் உன்னுடன் இருக்க உள்ளமே கலங்காதே
அவர் உள்ளவரை என்றும் நல்லவரே நன்மைகள் குறையாதே
பாவத்தில் இருந்த உன்னை பரிசுத்தமாக்கியவர்

சாபத்தில் இருந்த உன்னை சாட்சியாய் நிறுத்தியவர்
அந்நாளில் அவர் பாதம் அமர்ந்த அன்னாளின் ஜெபம் கேட்டார்
அநாதையாய் அலைந்த ஆகாரின் துயர் தீர்த்தார்
தாழ்மையில் இருந்த உன்னை தம் தயவால் தாங்கியவர்
ஏழ்மையில் இருந்த உன்னை என்றும் ஏந்தியே சுமந்திடுவார்

**218**

மனதுருகும் தெய்வமே இயேசய்யா - உம்மை
மனதாரத் துதிப்பேன் ஸ்தோத்தரிப்பேன்
நீர் நல்லவர் சர்வ வல்லவர்
உம் இரக்கத்திற்கு முடிவே இல்லை
உம் அன்பிற்கு அளவே இல்லை
அவை காலை தோறும் புதிதாய் இருக்கும்

1. மெய்யாக எங்களது
பாடுகளை ஏற்றுக்கொண்டு
துக்கங்களை சுமந்து கொண்டீர் - ஐயா
2. எங்களுக்கு சமாதானம்
உண்டு பண்ணும் தண்டனையோ
உம்மேலே விழுந்ததையா - ஐயா
3. சாபமான முள்முடியை
தலை மேலே சுமந்து கொண்டு
சிலுவையிலே வெற்றி சிறந்தீர் - ஐயா
4. எங்களது மீறுதலால்
காயப்பட்டீர் நொறுக்கப்பட்டீர்
தழும்புகளால் சுகமானோம் - உந்தன்

**219**

எத்தனை நன்மைகள் எனக்குச் செய்தீர்
எப்படி நன்றி சொல்வேன் - நான்
எப்படி நன்றி சொல்வேன்
நன்றி ராஜா... நன்றி ராஜா.. (2)

1. கரங்களைப் பிடித்து கண்மணி போல
காலமெல்லாம் காத்தீர் - எத்தனை
2. தாழ்மையில் இருந்தேன் தயவாய் நினைத்தீர்
தேவனே உம்மைத் துதிப்பேன் - எத்தனை
3. பெலவீனன் என்று தள்ளிவிடாமல்
பெலத்தால் இடைகட்டினீர் - எத்தனை
4. பாவத்தினாலே மரித்துப்போய் இருந்தேன்
கிருபையால் இரட்சித்தீரே - எத்தனை
5. பாவங்கள் போக்கி சாபங்கள் நீக்கி
பூரண சுகமாக்கினீர் - எத்தனை
6. முள்முடி தாங்கி திரு இரத்தம் சிந்தி

சாத்தானை ஜெயித்து  விட்டீர் - எத்தனை
7. நீர் செய்த அதிசயம் ஆயிரம் உண்டு
விவரிக்க முடியாதையா - எத்தனை
8. எனக்காக மரித்தீர் எனக்காக உயிர்த்தீர்
எனக்காய் மீண்டும் வருவீர் - எத்தனை

## 220

ஸ்தோத்திரம் இயேசு நாதா
உமக்கென்றும் ஸ்தோத்திரம் இயேசு நாதா
ஸ்தோத்திரம் செய்கிறோம் நின்னடியார்
திரு நாமத்தின் ஆதரவில்

1. வான தூதர் சேனைகள்
மனோகர கீதங்களால் எப்போதும்
ஓய்வின்றிப் பாடித் துதிக்கப் பெறும்
மன்னவனே உமக்கு
2. இத்தனை மகத்துவமுள்ள
பதவி இவ்வேழைகள் எங்களுக்கு
எத்தனை மாதயவு நின் கிருபை
எத்தனை ஆச்சரியம்
3. இன்றைத் தினமதிலும்
ஒருமித்துக்கூட உம் நாமத்தினால்
தந்த நின் கிருபைக்காக உமக்கென்றும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
4. நீரல்லால் எங்களுக்குப்
பரலோகில் யாருண்டு ஜீவநாதா
நீரேயன்றி இகத்தில் வேறொரு
தேற்றமில்லை பரனே

## 221

இயேசு என்ற திருநாமத்திற்கு
எப்போதுமே மிக ஸ்தோத்திரம்

1. வானிலும் பூவிலும் மேலான நாமம்
வல்லமையுள்ள நாமமது
தூயர் சொல்லித் துதித்திடும் நாமமது - இயேசு
2. வேதாளம் பாதாளம் யாவையும் ஜெயித்த
வீரமுள்ள திரு நாமமது
நாமும் வென்றிடுவோமிந்த நாமத்தினாலே - இயேசு
3. பாவத்திலே மாளும் பாவியை மீட்க
பாரினில் வந்த மெய் நாமமது
பரலோகத்தில் சேர்க்கும் நாமமது - இயேசு
4. உத்தம பக்தர்கள் போற்றித் துதித்திடும்
உன்னத தேவனின் நாமமது

உலகமெங்கும் ஜொலித்திடும் நாமமது - இயேசு
5. சஞ்சலம் வருத்தம் சோதனை நேரத்தில்
தாங்கி நடத்திடும் நாமமது
தடைமுற்றும் அகற்றிடும் நாமமது - இயேசு

**222**

தேவனுக்கே மகிமை தெய்வத்திற்கே மகிமை
தேடிவந்து மீட்டவரே தினம் உமக்கே மகிமை - ஐயா
வாழ்க வாழ்க உம் நாமம் வாழ்க

1. உன்னதத்தில் தேவனுக்கே
மகிமை உண்டாகட்டும் - இந்தப்
பூமியிலே சமாதானமும்
பிரியமும் உண்டாகட்டும் - ஐயா
2. செவிகளை நீர் திறந்து விட்டீர்
செய்வோம் உம் சித்தம் - இந்தப்
புவிதனிலே உம் விருப்பம்
பூரணமாகட்டுமே - ஐயா
3. எளிமையான எங்களையே
என்றும் நினைப்பவரே - எங்கள்
ஒளிமயமே துணையாளரே
உள்ளத்தின் ஆறுதலே - ஐயா
4. தேடுகிற அனைவருமே
மகிழ்ந்து களிகூரட்டும் - இன்று
பாடுகிற யாவருமே
பரிசுத்தம் ஆகட்டுமே - ஐயா
5. குறை நீக்கும் வல்லவரே
கோடி ஸ்தோத்திரமே - பாவக்
குறை போக்கும் கர்த்தாவே
கல்வாரி நாயகனே - ஐயா

**223**

தேவா பிரசன்னம் தாருமே
தேடி உம்பாதம் தொழுகிறோம்
இயேசுவே உம் திவ்ய நாமத்தில்
இன்பமுடன் கூடி வந்தோமே

1. வானம் உமது சிங்காசனம்
பூமி உமது பாதஸ்தலம்
பணிந்து குனிந்து தொழுகிறோம்
கனிந்தெம்மைக் கண்பாருமே - தேவா
2. சாரோனின் ரோஜா லீலி புஷ்பம்
சாந்த சொரூபி என் இயேசுவே

ஆயிரம் பேரிலும் சிறந்தோராம்
ஆண்டவரைத் தொழுகிறோம் - தேவா

3. கர்த்தர் செய்த உபகாரங்கள்
கணக்குரைத்து எண்ணலாகுமோ
இரட்சிப்பின் பாத்திரம் கையில் ஏந்தி
இரட்சகரைத் தொழுகிறோம் - தேவா

4. கர்த்தர் சமூகம் ஆனந்தமே
பக்தர் சபையில் பேரின்பமே
கர்த்தர் நாமத்தை கொண்டாடுவோம்
சுத்தர்கள் போற்றும் தேவனே - தேவா

## 224

1. தொல்லை கஷ்டங்கள் சூழ்ந்திடும் துன்பம் துக்கம் வரும்
இன்பத்தில் துன்பம் நேர்ந்திடும் இருளாய்த் தோன்றும் எங்கும்
சோதனை வரும் வேளையில் சொற்கேட்கும் செவியிலே
பரத்திலிருந்து ஜெயம் வரும் பரன் உன்னைக் காக்கவல்லோர்
காக்கும் வல்ல மீட்பர் உண்டெனக்கு (3)
காத்திடுவார் என்றுமே

2. ஐயம் மிகுந்ததோர் காலத்தில் ஆவிகுறைந்ததால்
மீட்பர் உதிர பெலத்தால் சத்துருவை வென்றேன்
என் பயம் யாவும் நீங்கிற்றே இயேசு கை தூக்கினார்
முற்றும் என் உள்ளம் மாறிற்று இயேசென்னைக் காக்க
வல்லோர் - காக்கும்

3. என்ன வந்தாலும் நம்புவேன் என் நேச மீட்பரை
யார் கைவிட்டாலும் பின்செல்வேன் எனது இயேசுவை
அகல ஆழ உயரமாய் எவ்வளவு அன்பு கூர்ந்தார்
என்ன துன்பங்கள் வந்தாலும் அவர் என்னைக் கைவிடமாட்டார் - காக்கும்

## 225

தம் கிருபை பெரிதல்லோ
எம் ஜீவனிலும் அதே
இம்மட்டும் காத்ததுவே
இன்னும் தேவை கிருபை தாருமே

1. தாழ்மையுள்ளவரிடம் தங்கிடுதே கிருபை
வாழ்நாளெல்லாம் அது போதுமே
சுகமுடன் தம் பெலமுடன்
சேவை செய்ய கிருபை தாருமே

2. நிர்மூலமாகாததும் நிற்பதுமோ கிருபை
நீசன் என் பாவம் நீங்கினதே
நித்திய ஜீவன் பெற்றுக்கொண்டேன்
காத்துக்கொள்ள கிருபை தாருமே

3. தினம் அதிகாலையில் தேடும் புது கிருபை
மனம் தளர்ந்த நேரத்திலும்

பெலவீன சரீரத்திலும்
போதுமே உம் கிருபை தாருமே

**226**

உம்மை பாடாமல்
யாரை நான் பாடுவேன்
உம்மைத் துதிக்காமல்
யாரை நான் துதிப்பேன்
துதியும் உமக்கே அல்லேலூயா
கனமும் உமக்கே அல்லேலூயா
மகிமை உமக்கே அல்லேலூயா
புகழ்ச்சியும் உமக்கே அல்லேலூயா

1. உளையான சேற்றிலிருந்து எடுத்தீரே
உன்னத அனுபவம் தந்தீரே
2. துக்கங்களை சந்தோஷமாய் மாற்றினீர்
துயரங்களை மகிழ்ச்சியாய் மாற்றினீர்
3. ஒன்றுக்கும் உதவாத என்னையும்
உருவாக்கி உயர்த்தின தெய்வமே
4. ஜீவன் சுகம் பெலன் தந்து காத்தீரே
ஜீவனுள்ள நாளெல்லாம் பாடுவேன்

**227**

நேசரே உம் திருபாதம் அமர்ந்தேன்
நிம்மதியே நிம்மதியே
ஆர்வமுடனே பாடித் துதிப்பேன்
ஆனந்தம் ஆனந்தமே
அடைக்கலமே அதிசயமே
ஆராதனை ஆராதனை

1. உம் வல்ல செயல்கள் நினைத்து நினைத்து
உள்ளமே பொங்குதய்யா
நல்லவரே நன்மை செய்தவரே
நன்றி நன்றி ஐயா
வல்லவரே நல்லவரே
ஆராதனை ஆராதனை
2. பலியான செம்மறி பாவங்களெல்லாம்
சுமந்து தீர்த்தவரே
பரிசுத்த இரத்தம் எனக்காக அல்லோ
பாக்கியம் பாக்கியமே
பரிசுத்தரே படைத்தவரே
ஆராதனை ஆராதனை
3. எத்தனை இன்னல்கள் என் வாழ்வில் வந்தாலும்
உம்மை பிரியேன் ஐயா
சித்தமே செய்து சாட்சியாய் வாழ்வேன்

நிச்சயம் நிச்சயமே
இரட்சகரே இயேசு நாதா
ஆராதனை ஆராதனை

## 228

ஸ்தோத்தரிப்பேன் ஸ்தோத்தரிப்பேன் இயேசு தேவனை
என் ஜீவனுள்ள நாட்களெல்லாம் ஸ்தோத்தரிப்பேனே

1. உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை
யேசுவின் நாமத்தினாலே செலுத்துகிறேன் யான் - ஸ்தோ
2. பாவக்கறை நீங்க என்னை முற்றிலுமாக
உம் சுத்தமுள்ள இரத்தத்திற்குள் தோய்த்ததினாலே - ஸ்தோ
3. என்னுடைய காயங்களை உம் காயங்களாலே
என்றைக்குமாய் தீர்த்ததினால் ஸ்தோத்தரிப்பேன் யான் - ஸ்தோ
4. ஆகாயத்துப் பட்சிகளை போஷிக்கும் தேவன்
தினமும் என்னை போஷிப்பதால் ஸ்தோத்தரிப்பேன் யான் - ஸ்தோ
5. சீக்கிரமாய் வந்திடுவேன் என்றுரைத்தோனை - அதி
சீக்கிரமாய்க் காண்பதினால் ஸ்தோத்தரிப்பேன் யான் - ஸ்தோ

## 229

என்னை ஆட்கொண்ட இயேசு
உம்மை யாரென்று நானறிவேன்
உண்மை உள்ளவரே - என்றும்
நன்மைகள் செய்பவரே

1. மனிதர் தூற்றும்போது - உம்மில்
மகிழச் செய்பவரே
அதைத் தாங்கிட பெலன் கொடுத்து
தயவாய் அணைப்பவரே
2. தனிமை வாட்டும்போது - நல்
துணையாய் இருப்பவரே
உம் ஆவியினால் தேற்றி
அபிஷேகம் செய்பவரே
3. வாழ்க்கை பயணத்திலே
மேகத்தூணாய் வருபவரே
உம் வார்த்தையின் திருவுணவால்
வளமாய் காப்பவரே

## 230

புதிய பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்
புகழ்ந்து பாடல் பாடி பாடி இயேசு
ராஜாவைக் கொண்டாடுவோம்

1. கழுவினார் இரத்தத்தாலே

சுகம் தந்தார் காயத்தாலே
தேற்றினார் வசனத்தாலே
திடன் தந்தார் ஆவியாலே - எனக்கு

2. உறுதியாய் பற்றிக் கொண்டோம்
உம்மையே நம்பி உள்ளோம்
பூரண சமாதானம்
புவிதனில் தருபவரே - தினமும்

3. அதிசயமானவரே
ஆலோசனைக் கர்த்தரே
வல்லமையுள்ள தேவா
வரங்களின் மன்னவனே - எல்லா

4. கூப்பிட்டேன் பதில் வந்தது
குறைவெல்லாம் நிறைவானது
மகிமையின் ராஜா அவர்
மகத்துவமானவரே - இயேசு

## 231

அப்பா நான் உம்மைப் பார்க்கிறேன்
அன்பே நான் உம்மைத் துதிக்கிறேன்

1. நீரே என் வழி நீரே என் சத்தியம்
நீரே என் ஜீவனன்றோ

2. அப்பாவும் நீரே அம்மாவும் நீரே
நான் உந்தன் பிள்ளையன்றோ

3. நல்ல மேய்ப்பன் நீர் தானே
நான் உந்தன் ஆட்டுக்குட்டி

4. ஜீவ நீரூற்று நீர் தானே
உந்தன்மேல் தாகம் கொண்டேன்

## 232

அபிஷேக நாதா அனல்மூட்டும் தேவா
ஆருயிர் நண்பரே

1. அன்னிய பாஷைகள் இன்றே தாருமே
ஆவியில் ஜெபித்திட என்மேல் வாருமே

2 ரகசியம் பேசிட கிருபை தாருமே
சத்திய ஆவியாய் என்மேல் வாருமே

3 சாத்தானை ஜெயித்திட சத்துவம் தாருமே
சாட்சியாய் வாழ்ந்திட என்மேல் வாருமே

4. அக்கினி அபிஷேகம் இன்றே தாருமே
சுடராய் பிரகாசிக்க என்மேல் வாருமே

## 233

கலிலேயா என்ற ஊரில்

இயேசு ஜனங்களை தொட்டார்
குருடர் செவிடர் முடவர் எல்லோரையும்
இயேசு குணமாக்கினார்
அல்லேலூயா ராஜனுக்கே
அல்லேலூயா தேவனுக்கே
அல்லேலூயா கர்த்தருக்கே
அல்லேலூயா இயேசுவுக்கே

1. கரங்களை தட்டி பாடிடுவோம் (3)
அல்லேலூயா ராஜனுக்கே
2. கரங்களை அசைத்து பாடிடுவோம் (3)
அல்லேலூயா ராஜனுக்கே
3. கரங்களை உயர்த்தி பாடிடுவோம் (3)
அல்லேலூயா ராஜனுக்கே
4. உள்ளமதின் காயங்களை
இயேசுவிடம் கொடுத்து விட்டால்
ஆற்றி தேற்றி நம்மை அன்பாகவே
இயேசு சுகமாக்குவார்

**234**

இயேசு எனக்கு ஜீவன் தந்தாரே
துதி பாடல் நான் பாடி - இயேசுவையே போற்றி
என்றென்றும் வாழ்த்திடுவேன்
அல்லேலூயா ஆமென் அல்லேலூயா

1. சமாதானம் தந்தார் இயேசு (2)
2. புது வாழ்வு தந்தார் இயேசு (2)
3. விடுதலை தந்தார் இயேசு (2)
4. வல்லமை தந்தார் இயேசு (2)
5. அபிஷேகம் தந்தார் இயேசு (2)

**235**

நன்றி சொல்லாமல் இருக்கவே முடியாது
பல நன்மை செய்த இயேசுவுக்கு
நன்றி நன்றி நன்றி என்று சொல்லி நான் துதிப்பேன்
நாள்தோறும் போற்றுவேன் (2)

1. எத்தனையோ நன்மைகளை
என் வாழ்வில் செய்தாரே
ஏராளமாய் நன்றி சொல்வேன்
அத்தனையும் நினைத்து நினைத்து
நான் துதிப்பேன்
ஆண்டவரே போற்றுவேன்
2. மரண பள்ளத்தாக்கில்
நான் நடக்கும் போதெல்லாம்
பாதுகாத்தீரையா (தூக்கி எடுத்தீரையா)

மீண்டும் ஜீவனை கொடுத்து நீர் என்னை
வாழ வைத்தீரையா

3. தேவன் அருளிய சொல்லி முடியாத
ஈவுகளுக்காய் ஸ்தோத்திரம்
அளவில்லா அவரின் கிருபைகளுக்காய்
ஆயுள் முழுதும் ஸ்தோத்திரம்

## 236

கல்வாரி அன்பை எண்ணிடும் வேளை
கண்கள் கலங்கிடுதே
கர்த்தா உம்பாடுகள் இப்போதும் நினைத்தால்
நெஞ்சம் நெகிழ்ந்திடுதே

1. கெத்சமெனே பூங்காவினில்
கதறி அழும் ஓசை
எத்திசையும் தொனிக்கின்றதே
எங்கள் மனம் திகைக்கின்றதே
கண்கள் கலங்கிடுதே - கல்வாரி

2. சிலுவையில் மாட்டி வதைத்தனரோ
உம்மை செந்நிறம் ஆக்கினரோ
அப்போதும் அவர்க்காய் வேண்டினீரோ
அன்போடு அவர்களை கண்டீரன்றோ
அப்பா உம் மனம் பெரிதே - கல்வாரி

3. எம்மையும் உம்மைப்போல் மாற்றிடவே
உம் ஜீவன் தந்தீரன்றோ
எங்களை தரைமட்டும் தாழ்த்துகிறோம்
தந்து விட்டோம் அன்பின் கரங்களிலே
ஏற்று என்றும் நடத்தும் - கல்வாரி

## 237

அதிகாலையில் (அன்பு நேசரே) உம் திருமுகம் தேடி
அர்ப்பணித்தேன் என்னையே
ஆராதனை துதி ஸ்தோத்திரங்கள்
அப்பனே உமக்குத் தந்தேன்
ஆராதனை ஆராதனை
அன்பர் இயேசு ராஜனுக்கே
ஆவியான தேவனுக்கே

1. இந்த நாளின் ஒவ்வொரு நிமிடமும்
உந்தன் நினைவால் நிரம்ப வேண்டும்
என் வாயின் வார்த்தை எல்லாம்
பிறர் காயம் ஆற்ற வேண்டும்

2. உந்தன் ஏக்கம் விருப்பம் எல்லாம்
என் இதயத்துடிப்பாக மாற்றும்
என் ஜீவ நாட்கள் எல்லாம்

ஜெப வீரன் என்று எழுதும்
3. சுவிசேஷ பாரம் ஒன்றே
என் சுமையாக மாற வேண்டும்
என் தேச எல்லையெங்கும்
உம் நாமம் சொல்ல வேண்டும்

**238**

எந்தன் இயேசு வல்லவர்
என்றும் நடத்துவார்
ஆ..பேரின்பம் அவர் என் தஞ்சமே
அனுதினம் அன்பருடன் இணைந்து செல்லுவேன்

1. அற்புதமாம் அவர் அன்பு
அண்டினோர் காக்கும் தூயஅன்பு
இப்பூவினில் இவரைப்போல் அன்பர் எவருண்டு
மாறாதவர் எந்தன் இயேசு என்றும் பற்றிடுவேன் - எந்தன்
2. சர்வ வல்ல தேவனிவர்
சாந்தமும் தாழ்மை உள்ளவராம்
எந்நாளுமே எந்தனையே தாங்கிடும் வல்லவராம்
நம்பிடுவேன் என்றென்றுமாய் எந்தன் இயேசுவை - எந்தன்
3. குற்றங்களை மன்னித்தவர்
தம்மண்டை என்னைச் சேர்த்துக் கொண்டார்
எந்தன் நேசர் ஒப்பற்றவர் - பொறுமை நிறைந்தவர்
சார்ந்திடுவேன் இந்நிலத்தே - எந்தன் தஞ்சமிவர் - எந்தன்
4. கர்த்தர் எந்தன் மேய்ப்பராவார்
சீரான பாதை நடத்திடுவார்
எந்தன் வழி செம்மையாக்கி ஏற்று நிறுத்துவார்
எந்தன் நேசர் காத்திடுவார் என்றும் பின்செல்லுவேன் - எந்தன்

**239**

அனாதி தேவன் உன் அடைக்கலமே
அவர் நித்திய புயங்கள் உன் ஆதாரமே
இந்த தேவன் என்றென்றுமுள்ள
சதா காலமும் நமது தேவன்
மரணபரியந்தம் நம்மை நடத்திடுவார்

1. காருண்யத்தாலே இழுத்துக் கொண்டார்
தூய தேவ அன்பே
இவ்வனாந்தரத்தில் நயங்காட்டி உன்னை
இனிதாய் வருந்தி அழைத்தார் - இந்த
2. வறண்ட வாழ்க்கை செழித்திடுதே
தூய தேவ அருளால்
நித்திய மகிழ்ச்சி தலைமேல் இருக்கும்
சஞ்சலம் தவிப்பும் ஓடிப்போம் - இந்த

3. ஆனந்தம் பாடி திரும்பியே வா
தூய தேவ பெலத்தால்
சீயோன் பர்வதம் உன்னைச் சேர்த்திடுவார்
சந்ததம் மகிழ்ச்சி அடைவாய் - இந்த

**240**

இயேசு ராஜா வந்திருக்கிறார்
எல்லோரும் கொண்டாடுவோம்
கைதட்டி நாம் பாடுவோம்
கொண்டாடுவோம் கொண்டாடுவோம்
கவலைகள் மறந்து நாம் பாடுவோம்

1. கூப்பிடு நீ பதில் கொடுப்பார்
குறைகளெல்லாம் நிறைவாக்குவார்
உண்மையாக தேடுவோரின்
உள்ளத்தில் வந்திடுவார் - கொண்டாடுவோம்

2. மனதுருக்கம் உடையவரே
மன்னிப்பதில் வள்ளலவர்
உன் நினைவாய் இருக்கின்றார்
ஓடிவா என் மகனே (ளே)

3. கண்ணீரெல்லாம் துடைத்திடுவார்
கரம் பிடித்து நடத்திடுவார்
எண்ணமெல்லாம் ஏக்கமெல்லாம்
இன்றே நிறைவேற்றுவார்

4. நோய்களெல்லாம் நீக்கிடுவார்
நொடிப்பொழுதே சுகம் தருவார்
பேய்களெல்லாம் நடுநடுங்கும்
பெரியவர் திருமுன்னே - நம்ம

5. பாவமெல்லாம் போக்கிடுவார்
பயங்களெல்லாம் நீக்கிடுவார்
ஆவியினால் நிரப்பிடுவார்
அதிசயம் செய்திடுவார்

6. கசையடிகள் உனக்காக
காயமெல்லாம் உனக்காக
திரு இரத்தம் உனக்காக
திருந்திடு என் மகனே

**241**

யோசனையில் பெரியவரே ஆராதனை ஆராதனை
செயல்களில் வல்லவரே ஆராதனை ஆராதனை
ஓசன்னா உன்னத தேவனே
ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

1. கண்மணி போல் காப்பவரே ஆராதனை ஆராதனை
கழுகுபோல் சுமப்பவரே ஆராதனை ஆராதனை
2. சிலுவையினால் மீட்டவரே ஆராதனை ஆராதனை
சிறகுகளால் மூடுபவரே ஆராதனை ஆராதனை
3. தேடி என்னை காண்பவரே ஆராதனை ஆராதனை
தினந்தோறும் தேற்றுபவரே ஆராதனை ஆராதனை
4. பரிசுத்தரே படைத்தவரே ஆராதனை ஆராதனை
பாவங்களை மன்னித்தவரே ஆராதனை ஆராதனை

**242**

அன்பே கல்வாரி அன்பே
உம்மைப் பார்க்கையிலே
என் உள்ளம் உடையுதப்பா

1. தாகம் தாகம் என்றீர்
எனக்காய் ஏங்கி நின்றீர்
பாவங்கள் சுமந்தீர் - எங்கள்
பரிகார பலியானீர்
2. காயங்கள் பார்க்கின்றேன்
கண்ணீர் வடிக்கின்றேன்
தூய திரு இரத்தமே
துடிக்கும் தாயுள்ளமே
3. அணைக்கும் கரங்களிலே
ஆணிகளா சுவாமி?
நினைத்து பார்க்கையிலே
நெஞ்சம் உருகுதையா

**243**

1. ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா
ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்
ஜெபத்திலே தரித்திருந்து
ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்

ஜெபமே ஜீவன், ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்
ஜெபமே ஜீவன் ஜெபம் ஜெயம்
ஜீவியத்திற்கு இதுவே சட்டம்

2. ஊக்கத்துடனே ஓர் முகமாய்
வாக்குத்தத்தத்தைப் பற்றிக் கொண்டு
நோக்கத்தை எல்லாம் நேர்மையாக்கி
கேட்கும்படி கிருபை செய்யும் - ஜெபமே
3. ஆகாத நோக்கம் சிந்தனையை
அகற்றும் எங்கள் நெஞ்சை விட்டு
வாகான தாக்கும் மனமெல்லாம்
வல்லமையோடே வேண்டிக் கொள்வோம் - ஜெபமே
4. இடைவிடாமல் ஜெபம் செய்ய
இடையூறெல்லாம் நீக்கி விடும்

சடைப்பில்லாமல் உந்தன் பாதம்
கடைசி மட்டும் காத்திருப்போம் - ஜெபமே

**244**

என் இயேசு ராஜாவுக்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்
என்னோடு வாழ்பவர்க்கே
எந்நாளும் ஸ்தோத்திரம்

1. கர்த்தாவே நீர் செய்த நன்மைகளை
நித்தமும் நினைக்கின்றேன்
முழு உள்ளத்தோடு உம் நாமம்
பாடிப் புகழுவேன் - நான்

2. நெருக்கப்பட்டேன் தள்ளப்பட்டேன்
நேசர் நீர் அணைத்தீரே
கைவிடப்பட்டு கதறினேன்
கர்த்தர் நீர் தேற்றினீர் (ஆ....ஆ)

3. இனி நான் வாழ்வது உமக்காக
உமது மகிமைக்காக
உம் அன்பை எடுத்துச் சொல்லுவேன்
ஓயாமல் பாடுவேன் - நான்

4. பாவங்கள் அனைத்தும் மன்னித்தீரே
நோய்களை சுகமாக்கினீர்
எனது ஜீவனை அழிவில் நின்று
காத்து இரட்சித்தீரே (ஆ......ஆ)

**245**

பலி பீடத்திலென்னை பரனே
படைக்கிறேனே இந்த வேளை
அடியேனை திருச்சித்தம் போல
ஆண்டு நடத்திடுவீர்

கல்வாரியின் அன்பினையே
கண்டு விரைந்தோடி வந்தேன்
கழுவும் உம் திரு இரத்தத்தாலே
கறை நீங்க இருதயத்தை

1. நீரன்றி என்னாலே பாரில்
ஏதும் நான் செய்திட இயலேன்
சேர்ப்பீரே வழுவாது என்னை
காத்துமக்காய் நிறுத்தி - கல்வாரி

2. ஆவியோடாத்மா சரீரம்
அன்பரே உமக்கென்றும் தந்தேன்
ஆலயமாக்கியே இப்போ
ஆசீர்வதித்தருளும் - கல்வாரி

3. சுயமென்னில் சாம்பலாய் மாற

சுத்தாவியே அனல் மூட்டும்
ஜெயம் பெற்று மாமிசம் மாய
தேவா அருள் செய்குவீர் - கல்வாரி

**246**

பிதாவே நன்றி சொல்கிறோம்
இயேசுவே நன்றி சொல்கிறோம்
தூய ஆவியே எங்கள் தெய்வமே
நன்றி சொல்கிறோம்
துதி ஆராதனை செய்கிறோம் (2)

1. தேவன் அருளிய சொல்லிமுடியா
ஈவுக்கு ஸ்தோத்திரம்
‘ நீர் செய்த எல்லா நன்மைக்கும்
ஸ்தோத்திரம் ஸ்தோத்திரமே
எண்ணி முடியா அதிசயங்கள்
செய்தவரே ஸ்தோத்திரமே - பிதாவே

2. கடந்த நாட்களில் கண்மணிபோல
பாதுகாத்தீரே
சோதனையில் என்னை தேற்றியே
தைரியப்படுத்தினீரே
தீராத நோய்களெல்லாம்
தழும்புகளால் சுகப்படுத்தினீரே - பிதாவே

3. சகல ஆசீர்வாதங்களாலே
ஆசீர்வதித்தீரே
குறைகளெல்லாம் நிறைவாக்கினீர்
செழிப்பாய் என்னை மாற்றினீர்
மனக்கவலை தீர்த்தீரே
மகிழ்ச்சியினால் நிரப்பினீரே - பிதாவே

**247**

காணிக்கை செலுத்திக் கர்த்தரில் மகிழ்வோம்
காணும் தேவன் நம் குறைதீர்ப்பார்

1. உந்தன் தரித்திரம் போக்கிட வந்தார்
உந்தன் சாபம் சிலுவையில் சுமந்தார்
அகிலமெல்லாம் படைத்தவர்க்கு
கொடுப்பது நம் பாக்கியமே - காணிக்கை

2. சிறுக விதைப்பவன் சிறுகவே அறுப்பான்
பெருக விதைப்பவன் பெருகவே அறுப்பான்
தாராளமாய்க் கொடுத்துமே நாம்
ஏராளமாய் அறுத்திடுவோம் - காணிக்கை

3. தேவனின் சேவை தீவிரம் வளர
தரித்திரர் எளியோர் வறுமைகள் நீங்க
உற்சாகமாய்க் கொடுத்துமே நாம்

கர்த்தரிலே மகிழ்ந்திடுவோம் - காணிக்கை
4. பூமியில் பொக்கிஷம் சேர்ப்பதனாலே
பூச்சியும் துருவும் அழித்திடும் என்றார்
பூரணமாய் மாறிடவே
இயேசுவையே நோக்கிடுவோம் - காணிக்கை

**248**

கூடுமே எல்லாம் கூடுமே
உம்மாலே எல்லாம் கூடுமே
கூடாதது ஒன்றுமில்லை உம்மால்
கூடாதது ஒன்றுமில்லை

1. கடல் மீது நடந்தீரையா
கடும்புயல் அடக்கினீரே
சாத்தானை ஒடுக்கினீரே
சர்வ வல்லவரே
2. செங்கடல் உம்மைக் கண்டு
ஓட்டம் பிடித்ததையா
யோர்தான் உம்மைக்கண்டு
பின்னோக்கிச் சென்றதையா
3. மரித்து உயிர்த்தீரையா
மரணத்தை ஜெயித்தீரையா
மறுபடி வருவீரையா
உருமாற்றம் தருவீரையா
4. உம் நாமம் சொன்னால் போதும்
பேய்கள் ஓடுமையா
உம் பெயரால் கைகள் நீட்டினால்
நோய்கள் மறையுதையா

**249**

நன்றி நன்றி நன்றி என்று துதிக்கிறேன்
நல்லவரே உம் நன்மைகளை நினைக்கிறேன்
நன்றி ஐயா நன்றி ஐயா - இயேசையா

1. தகுதியில்லா அடிமை என்னை அணைக்கிறீர்
தாங்கி தாங்கி வழி நடத்தி மகிழ்கின்றீர்
அதிசயங்கள் ஆயிரம்
அன்பரே உம் கரங்களிலே - நன்றி
2. உணவு உடை தினம் தந்து மகிழ்கின்றீர்
உண்மையான நண்பர்களை தருகின்றீர்
நன்மையான ஈவுகள்
நாள்தோறும் தருபவரே
3. பெலவீனம் நீக்கி தினம் காக்கின்றீர்
பெரும் பெரும் காரியங்கள் செய்கின்றீர்
தீமையான அனைத்தையும்
நன்மையாக மாற்றுகிறீர்

4. கதறி அழுத நேரமெல்லாம் தூக்கினீர்
கருவியாக பயன்படுத்தி வருகின்றீர்
கண்மணிபோல் காப்பவரே
கைவிடாமல் மேய்ப்பவரே

**250**

எகிப்திலிருந்து கானானுக்கு கூட்டி சென்றீரே
உமக்கு கோடி நன்றி ஐயா
அல்லேலூயா அல்லேலூயா (2)

1. கடலும் பிரிந்தது மனமும் மகிழ்ந்தது (2)
கர்த்தரை என்றும் மனது ஸ்தோத்தரித்தது (2) - அல்லேலூயா
2. பாறையினின்று தண்ணீர் சரிந்தது
தாகம் தீர்ந்தது கர்த்தரை மனமும் போற்றிஹத - அல்லேலூயா
3. வெண்கல சர்ப்பம் ஆனாரே நமக்காய்
உயிர்கொடுத்தாரே அவரை உயர்த்திடுவோமே - அல்லேலூயா
4. யோர்தானைக் கடந்தோம் எரிகோவை சூழ்ந்தோம்
ஜெயம் கொடுத்தாரே அவரை துதித்திடுவோமே - அல்லேலூயா

**251**

நான் சுகமானேன் நான் சுகமானேன்
புண்ணியரின் காயங்களால்
ஆ.....அல்லேலூயா ஆனந்தமே
ஆ.....அல்லேலூயா ஆரோக்கியமே

1. என் நோய்கள் தீர்த்தார்
சாபமான சிலுவையில்
2. நான் ஏன் சுமப்பேன்
எந்தன் இயேசு சுமந்தபின்...
3. யேகோவா தேவன்
எந்தன் நல்ல பரிகாரி
4. பரிபூர்ண ஜீவன்
பரனீந்த ஜீவனிது
5. இயேசுவின் இரத்தம்
பிணிபோக்கும் நல்மருந்து
6. பலவீனன் அல்ல
பலவான் நான் தேவன் சொன்னார்

**252**

இந்த காலம் பொல்லாதது - உன்னை
கர்த்தர் அழைக்கிறார் (2)
நீ வாழும் வாழ்க்கை தான்
அது வாடகை வீடுதான் - காலம்

1. உன்னை இரட்சிக்க உன் கூடவே இருக்கிறேன்

என்று வாக்கு அளித்தவர்
உன்னை காத்து வருகிறார் - இந்த காலம்

2. வாலிப நாட்களில் உன் தேவனை தேடி வா
சாத்தான் களத்தில் போரிட
செயல் வீரனாய் திகழவா - இந்தகாலம்

3. பாவத்தின் சம்பளம் எரி நரகம்தான் திண்ணமே
சத்திய தேவனின் கிருபையோ
நித்திய ஜீவனை அருளுமே - இந்தகாலம்

4. காலமோ முடியுதே தேவராஜ்ஜியம் நெருங்குதே
மனம் திரும்பி நீ வாழவே
மன்னன் இயேசு உன்னை அழைக்கிறார் - இந்தகாலம்

5. அல்லேலூயா பாடியே பரலோகமே சேருவாய்
பரன் இயேசுவின் பாதத்தில்
நல்ல பங்கினை பெற்றிடுவாய் - இந்தகாலம்

## 253

அதிசயமானவர் ஆலோசனை கர்த்தர்
நம்மோடு இருக்கின்றாரே (2)
உண்மையுள்ள தேவனும் உன்னதத்தின் ராஜனும்
உன்னோடு இருக்கின்றாரே - இயேசு

1. ஆதியும் அந்தமும் அடைக்கலமானவர்
அதிசயம் செய்கின்றாரே (2)
அன்பான தேவன் ஆபிரகாமின் தேவன்
ஆசீர்வதித்திடுவாரே - உன்னை (2) - அதிசயமானவர்

2. உலகத்தை படைத்தவர், உயிரோடு எழுந்தவர்
உண்மை வழி காட்டிடுவாரே
உன்னையும் என்னையும் இரட்சிக்க வந்தவர்
உயர்த்தி என்றும் காத்திடுவாரே - அதிசயமானவர்

3. பரிசுத்த தேவன் பாவம்எல்லாம் கழுவி
பாரில் நம்மை சேர்த்திடுவாரே
பாதைக்கு தீபம் பரலோகராஜன்
பாதைகள் காட்டிடுவாரே - உனக்கு - அதிசயமானவர்

## 254

ஊற்றிடுமே உம் வல்லமையை
இந்த நாளில் எங்கள் மேலே
ஊற்றிடுமே உம் அக்கினியை
இந்த நாளில் எங்கள் மீது வல்லமையோடே

வல்லமை வல்லமை தாருமே
தேசத்தை உமக்காக கலக்கிட
அபிஷேகம் அபிஷேகம் ஊற்றுமே
அனல் கொண்டு உமக்காக எழும்பிட

1. பெந்தேகோஸ்தே நாளில் செய்தது போல

அக்கினியின்  நாவுகள் பொழிந்திடுமே - 2
அப்போஸ்தலர் நாட்களில் செய்ததுபோல
இன்றும் செய்ய வேண்டுமே
2. மாம்சமான யாவர் மேலும் ஊற்றுவேன் என்று
வாக்குத்தந்த ஆவியை ஊற்ற வேண்டுமே
நீச்சல் ஆழம் கொண்டு சென்று நீந்தச் செய்யுமே
நதியாய் பாய்ந்திடுமே
3. அற்புதங்கள் திராளாய் நடந்திடவே
அற்புதத்தின் ஆவியை அழித்திடுமே
அந்தகார சங்கிலிகள் அறுந்திடவே
அக்கினியை ஊற்றிடுமே

## 255

எனக்காய் ஜீவன் விட்டவரே
என்னோடிருக்க எழுந்தவரே
என்னை என்றும் வழி நடத்துவாரே
என்னை சந் திக்க வந்திடுவாரே
இயேசு போதுமே! இயேசு போதுமே!
எந்த நாளிலுமே! என் நிலையிலுமே
எந்தன் வாழ்வினிலே
இயேசு போதுமே
1. பிசாசின் சோதனை பெருகிட்டாலும்
சோர்ந்து  போகாமல் முன்செல்லவே
உலகமும் மாமிசமும் மயக்கிட்டாலும்
மயங்கிடாமல் முன்னேறவே
2. புல்லுள்ள இடங்களில் மேய்த்திடுவார்
அமர்ந்த தண்ணீரண்டை நடத்திடுவார்
ஆத்துமாவை தினம் தேற்றிடுவார்
மரணப் பள்ளத்தாக்கில் காத்திடுவார்
3. மனிதர் என்னை கைவிட்டாலும்
மாமிசம் அழுகி நாறிட்டாலும்
ஐசவரியம் யாவும் அழிந்திட்டாலும்
ஆகாதவன் என்று தள்ளிவிட்டாலும்

## 256

ஜீவனுள்ள தேவனே வாரும்
ஜீவ பாதையிலே நடத்தும்
ஜீவ தண்ணீர் ஊறும் ஊற்றிலே
ஜீவன் பெற என்னை நடத்தும்
இயேசுவை நீர் பெரியவர் இயேசுவே நீர் பரிசுத்தர்
இயேசுவை நீர் நல்லவர் இயேசுவை நீர் வல்லவர்
1. பாவிகள் துரோகிகள் ஐயா
பாவ ஆதாம் மக்களே தூயா

பாதகர் எம்பாவம் போக்கவே
பாதகன் போல் தொங்கினீரல்லோ

2. ஐந்து கண்ட மக்களுக்காக
ஐந்து காயமேற்ற நேசரே
நொந்துருகி வந்த மக்கள் மேல்
நேச ஆவி வீசச் செய்குவீர்

3. வாக்குத் தத்தம் செய்த கர்த்தரே
வாக்கு மாறா உண்மை நாதனே
வாக்கை நம்பி வந்து நிற்கிறோம்
வல்ல ஆவி மாரி ஊற்றுவீர்

4. நியாயத் தீர்ப்பின் நாள் நெருங்குதே
நேசர் வர காலமாகுதே
மாயலோகம் நம்பி மாண்டிடும்
மானிடரை மீட்க மாட்டீரோ

## 257

நான் ஆராதிக்க வெட்கபடமாட்டேன்
நான் ஆராதிக்க தயங்கவுமாட்டேன்
ஆராதித்து ஆராதித்து ஆராதனையின் ஆழம்சென்று
ஆவியில் களிகூர்ந்து மகிழுவேன்
கைகொட்டி பாடுவேன், நடனம் ஆடுவேன்
கெம்பீர சத்தமாய் முழக்கமிடுவேன்

1. நான் துதிக்கும் ஆராதனையில் தேவ
மகிமை உண்டு உண்டு
ஆராதித்து நான் (2) ஆராதனையின்
அபிஷேகத்தில் நிறைந்திடுவேன்

2. நான் துதிக்கும் ஆராதனையில் தேவ
அபிஷேகம் உண்டு உண்டு
ஆராதித்து நான் - (2) ஆராதனையின்
அபிஷேகத்தில் நிறைந்திடுவேன்

3. நான் துதிக்கும் ஆராதனையில் தேவ
விடுதலை உண்டு உண்டு
ஆராதித்து நான் - (2) ஆராதனையின்
அபிஷேகத்தில் நிறைந்திடுவேன்

4. நான் துதிக்கும் ஆராதனையில் தேவ
வல்லமை உண்டு உண்டு
ஆராதித்து நான் - (2) ஆராதனையின்
அபிஷேகத்தில் நிறைந்திடுவேன்

5. நான் துதிக்கும் ஆராதனையில் தேவ
அற்புதம் உண்டு உண்டு
ஆராதித்து நான் - (2) ஆராதனையின்
அபிஷேகத்தில் நிறைந்திடுவேன்

## 258

எந்தன் தேவனால் - (2) நிச்சயம் நான்
ஆசீர்வாதம் பெற்றுக்கொள்ளுவேன் நான்
உந்தன் வசனம் கைக்கொள்வேன் நான்
உந்தன் வழிகளில் நான் நடந்திடுவேன்

1. வீட்டில் நான் ஆசீர்வாதமாயிருப்பேன்
வேலையில் ஆசீர்வாதமாயிருப்பேன்
என் வீட்டில் ஆகார குறைவில்லையே
தேவைகள் ஒன்றுமே தடையில்லையே -எந்தன் தேவனால்

2. எனக்கெதிராய் வரும் பகைவரெல்லாம்
நிர்மூலமாய் போய்விடும் எந்தன் தேவனால்
என் பெலன் ஆரோக்கியம் தெய்வதானயே
என் சரீரம் ஆசீர்வதிக்கப்படும் - எந்தன் தேவனால்

3. இனி என்றும் கடன்வாங்க விடமாட்டார்
கொடுக்கவே செழித்தோங்க செய்திடுவார்
உயர்வடைவேன் என் வாழ்க்கையிலே
உன்னதங்களில் என்னை உயர்த்திடுவேன் - எந்தன் தேவனால்

## 259

அமர்ந்து காத்திருப்பேன் எந்தன் அப்பாவின் சமூகத்திலே(2)
அவர் பேச நான் கேட்பேன் அது தான் என் ஜெப நேரம்
நான் பேச அவர் கேட்பார் அது தான் என் ஜெப நேரம்

1. அதிகாலையில் வாஞ்சையோடே அவர் பாதம் அமர்ந்திருப்பேன்(2)
துதித்திடுவேன் தூயனையே துரிதமாய் வந்திடுவார் (2) - அவர்பேச

2. அறிக்கை செய்வேன் அவரிடமே அன்புடன் அணைப்பாரே(2)
பாவங்களை மன்னிப்பாரே பரிசுத்தம் செய்வாரே - அவர்பேச

3. ஊற்றிடுவேன் பாரங்களை தேற்றிடும் இயேசுவிடம் (2)
துடைத்திடுவார் கண்ணீரை தூயரை துதித்திடுவேன் - அவர் பேச

4. பரன் சித்தமே பூமியிலே நாள்தோறும் செய்யனுமே (2)
தேவராஜ்யம் வளரனுமே தினம் அருள் தாரும் என்பே - அவர் பேச

## 260

துதியின் சத்தத்தோடே ஆராதிப்போம் நாம்
துதியின் சத்தத்தோடே பலியிடுவோம்
உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திரபலி செலுத்தி (2)
ஆராதிப்போம்
ஸ்தோத்திரபலி ஸ்தோத்திரபலி
ஸ்தோத்திரபலி செலுத்தி ஆராதிப்போம் (2)

1. துதியின் சத்தம் அலங்கத்தை அதிரப்பண்ணும்
துதியின் சத்தம் அற்புதம் நடக்கச்செய்யும் (2)
துதித்தலே இன்பமானது அல்லேலூயா
துதித்தலே ஏற்றது - துதியின்

2. துதியின் சத்தம் இரும்புக்கதவை திறக்கும்
துதியின் சத்தம் அந்தகாரஇருள் அகற்றும்

துதித்தலே இன்பமானது அல்லேலூயா
துதித்தலே ஏற்றது - துதியின்

3. துதியின் சத்தம் சாத்தானை கலங்கபண்ணும்
துதியின் சத்தம் சத்துருவின் சதி முறிக்கும்
துதித்தலே இன்பமானது அல்லேலூயா
துதித்தலே ஏற்றது

**261**

ஒரு ஜனமாகிலும் ஓர் மனுஷனுக்காகிலும்
அவர் சமாதானம் அருளினால்
கலங்கச் செய்திடுபவன் யார்?

1. இயேசப்பா என்று நான் அழைத்தால்
பாசத்தால் என்னை அரவணைப்பார்
விக்கினங்கள் கடந்துபோகும் வரை
செட்டைகளின் நிழலில் வந்தடைவேன் - ஒரு ஜன

2. எளியவனை தூக்கி எடுத்து புழுதியினின்று உயர்த்துகிறார்
பிரபுக்களுடன் அமர்ந்திட செய்கிறார் - தன்
மகிமையுள்ள சிங்காசனம் தருகிறார் - ஒரு ஜன

**262**

இரட்டிப்பான நன்மையை
இன்றே தாரும் யேசுவே
அளவில்லா வல்லமை
இன்றே தாரும் யேசுவே
எம்மாவூர் சீசர்கள் போல்
என்னிதயம் எரியட்டுமே

## பல்லவிகள் (

**1**

Tamil & English)
There is no one, like you oh Lord!
No one like you Lord
There is no one, like you Lord
No one Like you Lord
There is no one, to save me Lord
There is no one, to keep me Lord
There is no one, to heal me Lord
No one like you Lord Jesus
No one like you Lord
I Praise Your Holy name
Mighty name
Precious name
Oh My Lord! Oh My God!
None like you (2)
உம்மைப் போல நல்ல தேவன் யாருமில்லையே

உம்மைப் போல வல்ல தேவன் யாருமில்லையே
உம்மைப்போல என்னைக் காத்திட
உம்மைப்போல என்னைத் தாங்கிட
உம்மைப்போல என்னைத் தேற்றிட
யாருமில்லையே! இயேசையா - யாருமில்லையே
உம்மை நான் போற்றுகிறேன்,
வாழ்த்துகிறேன், வணங்குகிறேன்
என் தெய்வமே என் இயேசுவே (2)
என் தெய்வமே! என் தெய்வமே!

**2**

வல்லமை தேவை தேவா
வல்லமை தாரும் தேவா
இன்றே தேவை தேவா
இப்போ தாரும் தேவா
பொழிந்திடும் வல்லமை உன்னதத்தின் வல்லமை
ஆவியின் வல்லமை அக்கினியின் வல்லமை

**3**

There is power, power, Wonder - working power,
In the blood of the Lamb
There is power, power, Wonder - working power,
In the precious blood of the Lamb
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
இயேசுவின் இரத்தத்தால்
வல்லமை உண்டு உண்டு அற்புத வல்லமை
ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால்

**4**

நீரே எந்தன் நோய்களெல்லாம்
குணமாக்கிடும் பரிகாரி
குணமாக்கிடும் உம் வார்த்தையினால்
சுகமாக்கிடும் பரிகாரி

**5**

I stay right under the blood (3)
Where the devil can do me no harm
No harm, No harm, No harm (3)
And the devil can do me no harm (2)
இயேசு இரத்தத்தில் மறைந்துள்ளேன் (3)
எத் தீங்கும் என்னை அ ணுகாது (2)
தீங்கில்லை, தீங்கில்லை, தீங்கில்லை,
சத்துரு தீமை செய்ய முடியாது (2)

**6**

Blessed be the name of the Lord
Blessed be the name of the Lord Most High
The name of the Lord is a strong tower
The righteous run into it and they are saved
Glory to the name of the Lord
Glory to the name of the Lord Most High
Holy is the name of the Lord
Holy is the name of the Lord most High
தேவனின் நாமத்திற்கே துதி உண்டாகட்டுமே
தேவனின் நாமத்திற்கே உன்னதரே
தேவனின் நாமம் பலத்த கோட்டை
நீதிமான் வாழ்வின் சுகம் அங்கே
தேவனின் நாமத்திற்கே மகிமை உண்டாகட்டுமே
தேவனின் நாமத்திற்கே உன்னதரே
பரிசுத்தர் அவர் நாமம்
பரிசுத்தர் அவர் நாமம் உன்னதரே

**7**

He is my everything He is my all
He is my everything, both great and small
He makes my life complete, makes everything new
He is my everythihg Now how about you?
எல்லாம் என் இயேசுவே எல்லாம் அவரே
சிறிதும் பெரிதாயினும் எல்லாம் அவரே
புதிதாய் என் ஜீவியம் மாற்றுகின்றார்
எனக்கெல்லாம் இயேசுவே, என்றென்றுமே

**8**

Hallelujah He is here
And my heart overflows
With the low that he shows
Hallelujah He is here
அல்லேலூயா தேவ பிரசன்னம்
என் இதயம் பொங்குதே
அன்பினால் நிறையுதே
அல்லேலூயா தேவபிரசன்னம்

**9**

Father you are my Father
Jesus you are my Saviour
Holy spirit you are my Comforter
And my soul knows it well
பிதாவே நீர் எந்தன் தந்தை
இயேசுவே நீர் எந்தன் இரட்சகர்
ஆவியே என் தேற்றரவாளனே

அறிவேன் என் ஆத்துமாவில்

**10**
He is Lord
He is risen from the dead he is Lord
Every knee shall bow
Every tongue confess
That Jesus Christ is Lord
இயேசுவே  ஆண்டவர்
மரணத்தினின்று உயிர்த்தெழுந்தார்
கால்கள் யாவும் முடங்கும்
நாவு யாவும் போற்றிடும்
அந்த இயேசுவே ஆண்டவர்

**11**

| | | |
|---|---|---|
| Hosanna Hosanna | ஓசன்னா ஓசன்னா | |
| Hosanna in the highest | உன்னதத்தில் ஓசன்னா | |
| Lord we lift up your name | உம்மை உயர்த்திடுவோம் | ¢ |
| With Hearts full of Praise | துதி நிறைவுடன் | |
| Be Exalted oh Lord our God | கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர் | |
| Hosanna is the highest | ஓசன்னா ராஜ ராஜனே! | |
| Glory Glory | மகிமை மகிமை | |
| Glory to the King of Kings | மகிமை ராஜ ராஜனுக்கே | |

**12**
Give thanks with a grateful heart
Give thanks to the Holy One
Give thanks because He’s given
Jesus Christ, His son
And now let the weak say I am strong
Let the poor say I am rich
Because of what the Lord has done for us

நன்றி உள்ள நிறைவுடன்
நன்றி பரிசுத்தர்க்கே
நன்றி தேவகுமாரன் இயேசுவை தந்தார்
பெலவீனன் பெலவான் என்று சொல்வான்
தரித்திரன் செழித்திடுவான்
தேவனின் செயல் இதுவே நமக்காய் – நன்றி